# கல்கி

அன்பளிப்பு:
ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை
வண்ணப்படம்

KALKI
25.2.2001
ரூ. 5.00



# மேடம்
# மேக்யவெல்லி?..

# ஆனந்தமான வாழ்வுக்கு அடிப்படை நிரந்தர வருமானம் அதை அளிப்பது உங்கள்

# TDFC முதலீடு

**36 மாதம் அதற்கு மேல்.**

**11.61%**

11.50% மாதாந்திர வட்டி உண்டு.
12 மாதம் 10.08% மற்றும்
24 மாதங்கள் 10.59%
காலாண்டிற்கு

**60 மாதங்களுக்கு.**

**15.44%**

வருட வட்டி
11.50% மாதந்தோறும்
கூட்டு வட்டி
முறையில்
கணக்கிடப்படும்.

• Registered with RBI as NBFC vide Regn. No.:07.00403

## தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட்.

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : 99, கிரீம்ஸ் சாலை,
எம்.என். அலுவலக வளாகம், சென்னை-6.
தொலைபேசி : 8292059, 8292917, 8293351,
பேக்ஸ் : (044)8293651 தந்தி :TAFCON. P.B.No.719.
E-mail:tdfc@giasmd01.vsnl.net.in

**கிளைகள் :**

★ அரசு விரைவு பேருந்து நிலையம், காந்திபுரம், கோயம்புத்தூர்-641 044.
தொலைபேசி : (0422) 497102

★ அரசு விரைவு பேருந்து நிலைய வளாகம், திருச்சி-620 001.
தொலைபேசி:(0431) 464188

★ ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை-625 001. தொலைபேசி: (0452) 741686

★ நகராட்சி அலுவலக வளாகம், காமராஜர் சாலை, ஈரோடு-638 001.
தொலைபேசி : (0424) 258204

- **உள்ளூர் காசோலைகள் மற்றும் சென்னை வரைவோலைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.**
- **காசோலைகளும், வரைவோலைகளும், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் சென்னை அலுவலகத்தில் ஏற்கப்படும்**

இந்த விளம்பரம் கம்பெனியால் 29.9.2000 தினமலரில் வெளியிடப்பட்ட சட்ட பூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும்.

Visit us at :www.tn.gov.in/www.chennaionline.com/www.aaraamthinai.com/www.southindia.com/www.webulagam.com/www.thegovt.com

# சூடா ஒரு கப் ஜோசியம்!

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் :
kalkiweekly@vsnl.com



நுரை பொங்கும் சூடான காபியை, மணக்க மணக்க கொண்டு வந்து தருகிறார் அந்தப் பெண். ஒரு கோப்பை காப்பியின் விலை அதிகமில்லை ஜென்டில்மேன்... ஜஸ்ட் ஐந்நூறு ரூபாய்!

அதை வாங்கிக் குடிக்கத்தான் எத்தனை கும்பல்! அப்பாயின்ட்மென்ட் வாங்கிக்கொண்டு, கால் கடுக்க க்யூவில் நிற்கிறார்கள். உலகின் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் வி.ஐ.பி.கள் பறந்து வந்து காப்பியைக் குடிக்க பரபரக்கிறார்கள்.

அப்படி என்னதான் இருக்கு அந்தக் காப்பியில் என்கிறீர்களா? ராஜா அப்துல்கனி காப்பி ஸ்பெஷலிஸ்ட் அல்ல; ஜோசிய ஸ்பெஷலிஸ்ட்!

கிளி ஜோசியம், சோழி ஜோசியம், சுவடி ஜோசியம் என வகைவகையான ஜோதிடங்களைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது புதுசு. காப்பி ஜோசியம்! காப்பியைப் பருகும் நபர், 'பேஷ்... பேஷ்... ரொம்ப நன்னாயிருக்கு' என்று சொல்வதற்குப் பதிலாக திருமதி. அப்துல்கனியின் முகத்தையே ஆவலுடன் பார்க்கிறார்கள். அவரும் காலியான கோப்பையைப் பார்த்து, அந்த நபரின் கடந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் என புட்டு புட்டு வைத்து விடுகிறார்.

அறுபது வயதான திருமதி கனி, சவுதி அரேபியா நாட்டுக்காரர். தற்போது பெங்களூர்வாசி. குங்குமப்பூ நிறம். சிரிக்கும் போது தங்கப் பற்கள் டாலடிக்கின்றன. நாற்பது வருடங்களுக்கு முன் இந்தியா வந்த கனி ஏழு மொழிகளில் சரளமாகப் பேசுகிறார். தமிழும் நன்றாக வருகிறது.



• திருமதி கனி







"சில நாட்களுக்கு முன்னால், அழகிய இளம் பெண்ணொருத்தி, தமது பாய் ஃப்ரண்டுடன் வந்தார். டைட் பாண்ட், மேலே சின்ன டாப். மேக்கப் இல்லை. நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். அவர் போன பிறகு, என் மகள் சொல்லித்தான் தெரியும், வந்தது உலக அழகி சுஷ்மிதா சென் என்று! அதே போல், மைசூர் மகாராஜா குடும்பத்தினரும் இங்கே வந்திருந்தார்கள். அவர்கள் விடை பெற்றுப் போன பிறகே அவர்கள் அரச பரம்பரையினர் எனத் தெரிய வந்தது. பல வருஷங்களுக்கு முன் பெங்களூருக்குப் படப்பிடிப்புக்காக எம்.ஜி.ஆர், ஜெயலலிதா வந்திருந்தார்கள். அவர்களுக்கும் நான் பலன்கள் சொல்லியிருக்கிறேன்'' என்கிறார் கனி.

தேநீர் கோப்பையை வைத்துக் கொண்டு இவர் ஜோதிடம் சொல்வதில்லை.

"காப்பிதான் எங்கள் அரபு நாட்டுக் கலாசாரம். தேநீர் பழக்கமில்லை'' என்கிறார்.

இவர் தரும் காப்பியில் பால் இருக்காது. குழம்பாக டிகாக்ஷன் மட்டுமே.

"காலியான கோப்பையைச் சரித்து வைத்த பிறகு நிமிர்த்தி, காய்ந்த கோப்பையை உற்றுப் பார்ப்பேன். மீன், பாம்பு, மரம், பறவை, தெரு என பல வடிவங்கள் தெரியும். அந்த அடையாளங்களை வைத்து ஜோதிடப் பலன்கள் சொல்வேன். மீன் என்றால் பணம், பாம்பு என்றால் சத்ரு, மரம் என்றால் புகழ், கரும்பறவை என்றால் கெட்ட செய்தி, வெண் பறவை என்றால் சுப செய்தி, தெரு என்றால் பயணம் இப்படிச் சில விஷயங்கள் தெரியும். அதை வைத்து கணித்துச் சொல்வேன். என்னிடம் வருபவரிடம் துன்பங்களைச் சொல்லி பயமுறுத்துவதில்லை. இலேசாகக் கோடி காட்டுவேன். 'கடவுளை நம்புங்கள். பிரார்த்தனை பலம் தரும்' என்றெல்லாம் சொல்வேன். நானும் அவர்களுக்காக வேண்டிக் கொள்வேன்.'' என்கிறார் திருமதி கனி.

இந்திராகாந்தி, கபில்தேவ், ரவி சாஸ்திரி, கன்னட நடிகர் ராஜ்குமார், ஹாலிவுட், பாலிவுட் நட்சத்திரங்கள் என கனியிடம் ஜோதிடம் கேட்ட வி.ஐ.பி. பட்டியல் நீள்கிறது.

திருமதி கனி சமூக சேவைகளிலும் ஆர்வமாக இருக்கிறார். அவர் வீட்டு வாசலில் எப்போதும் ஏழை, எளியோரின் கூட்டம் இருந்து கொண்டேயிருக்கிறது. தொழுகைக்காக பள்ளி வாசல்கள் கட்டியிருக்கிறார். ஏழை குழந்தைகளுக்காக பள்ளிக்கூடம், ஏழை பெண்களுக்கு இலவச திருமணம் என நிறைய செய்து வருகிறார்.

"ஓர் ஏழைப் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்தால், ஹஜ் யாத்திரைக்குப் போன புண்ணியம் கிடைக்கும்'' என்கிறார் நம்பிக்கையோடு.

இத்தனை நாளும் இலவசமாக ஜோசியம் சொல்லிக் கொண்டிருந்த இவர், தற்போது ஐந்நூறு ரூபாய் கட்டணம் வசூலிக்கிறார்.

"கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல்தான், கட்டணம் வைத்தேன். அது மட்டுமில்லாமல், நிறைய நல்ல காரியங்கள் செய்து கொண்டிருக்கிறேன். அதற்குப் பணம் வேண்டுமே'' என்கிறார்.

இன்னொரு விஷயம். திருமதி கனி, வீரப்பனின் விசிறியாம். வீரப்பனை 'ராபின் ஹுட்' எனப் புகழ்கிறார். 'வீரப்பனாகவே சரணடைவாரே தவிர, காவல் துறையால் அவரை ஒரு போதும் பிடிக்க முடியாது' என்று சர்வ நிச்சயமாக காபி அல்லாத ஜோசியம் கூறுகிறார்!

வீரப்பனுக்குத் தம் கையால் காப்பி தர வேண்டும் என்பது இவரது நீண்ட நாள் ஆசையாம்!

— லதா சேகர்

# முதல்வரின் மகன் முன்னணிப் படுத்தப்படுகிறாரா?

முதல்வரின் தொகுதியான சேப்பாக்கத்தில் சமீபத்தில் தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டார். தம்மை நியமித்ததற்காக நன்றி தெரிவித்து அவர் ஒட்டியிருந்த சுவரொட்டியில் தலைவர், தளபதி, மாவட்டச் செயலாளர் அப்புறம் மு.க. தமிழரசு ஆகியோர் பெயர்கள் இருந்தன.



• மு.க. தமிழரசு

மு.க. தமிழரசு? ஆம்! முதல்வரின் மகன். ஸ்டாலினின் இளவல். அந்தக் குறிப்பிட்ட போஸ்டர்தான் என்று இல்லாமல் சமீப காலங்களில் சேப்பாக்கம் மற்றும் ஆயிரம் விளக்குப் பகுதிகளில் எந்தக் கழக நிகழ்ச்சிகள் நடந்தாலும் அவை சம்பந்தப்பட்ட விளம்பரங்களில் தமிழரசு பெயர் தவறாமல் இடம் பெறுகிறது. சில நிகழ்ச்சிகளில் தமிழரசும் தலை காண்பிக்கிறார்.

தமிழரசு பெயர் கழக நிகழ்ச்சிகளில் திட்டமிட்டு முன்னணிப்படுத்தப்படுகிறதா அல்லது, உள்ளூர் உடன்பிறப்புகளின் அதீத ஆர்வம் காரணமாக சில உள் நோக்கங்களுடன் பயன்படுத்தப்படுகிறதா என்பது தெரியவில்லை.

இது பற்றி சேப்பாக்கம் பிரமுகர் ஒருவரிடம் கேட்டோம். "சேப்பாக்கம் கழக விவகாரங்கள் கோஷ்டிப் பூசலினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. முதல்வர் தொகுதியாதலால் மக்களுக்கு எந்தப் பிரச்னையும் வரக் கூடாதென்று தமிழரசு நேரிடையாக இந்தத் தொகுதி விவகாரங்களைக் கவனித்து விடுகிறார். இது தவிர ஆயிரம் விளக்குத் தொகுதியில் முதல்வர் வீடு அமைந்திருப்பதால் அந்தப் பகுதி பொறுப்பாளர்கள் தமிழரசை நேரிடையாக அணுகிப் பேசி சில பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது எளிதாக இருக்கிறதே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை. தீவிர அரசியலில் ஈடுபட தமிழரசுக்கு ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லை" என்றார் அவர்.

தமிழரசு மிகவும் அமைதியானவர். இயன்றவரை பின்னணியில் இருந்து காரியங்களைச் செய்யக் கூடியவர். அவருக்கு இறால் பண்ணை, ஹோட்டல்கள், ரெடிமேட் ஆடையகம் போன்ற தொழில்கள் இருக்கின்றன. கோபாலபுரத்து வீட்டு வேலைகளைக் கவனிப்பவர் தமிழரசுவின் மனைவி மோகனா தான். யாராவது அரசு சம்பந்தப்பட்ட வேலைகளுக்குச் சிபாரிசு செய்யச் சொன்னாலும், அதிகார தொனியில் சொல்லாமல், அமைச்சர்களிடம் மிகவும் கனிவாகச் சொல்லக் கூடியவர் தமிழரசு.

பா.ஜ.க. கூட்டணியில் இருப்பதன் காரணமாக இந்த முறை சேப்பாக்கம் தொகுதியில் சிறுபான்மை வாக்காளர்கள் ஆதரவுக் கரங்களை நீட்டுவார்களா என்ற சந்தேகம் தி.மு.கவில் தொடர்கிறது. 'தலைவர் போட்டியிட்டால் வெற்றி நிச்சயம்' என்று தொகுதி உடன்பிறப்புகள் சொன்னாலும் உயர் பிரமுகர்களின் சந்தேகம் தீர்ந்த பாடில்லை. தொகுதிப் பிரமுகர்கள் இப்போது இரண்டிரண்டு வட்டங்களாகப் பொறுப்பெடுத்துக் கொண்டு, வேலை பார்த்து வருகிறார்கள். ஆனால் தொகுதி பொறுப்பாளர் ஒருவர் மட்டும் "தலைவர் சைதாப்பேட்டைக்கு போகப் போகிறார். இங்கு தமிழரசு தான் நிற்கப் போகிறார்" என்று கலெக்‌ஷன் கட்டிங்கில் ஈடுபட்டிருக்கிறாராம். அவரது தொல்லை பொறுக்காமல் மாநகராட்சிப் பொறியாளர் ஒருவர் மாறுதல் கேட்டுக் கொண்டு ஓடிவிட்டாராம்.

இதற்கிடையில் "தலைவர் எந்தக் காரணம் கொண்டும் தொகுதி மாறமாட்டார். வேண்டுமானால் தளபதி சைதாப்பேட்டைக்கு மாறலாம்'' என்று தகவல்கள் வரத் தொடங்கியிருக்கின்றன.

- ரமா

# பாட்டு, புத்தகம், போஸ்டர், பணம் பரபரப்பு!

**பா**ப் உலகைக் கலக்கிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் புயல்... அழகு கவிதை வயல்... பதினெட்டு வயசுக்கு மேலே ஒன்றிரண்டு மாதங்கள்கூட இருக்கலாம். அதற்குள் ஊர்ப்பட்ட பாராட்டு.. ஏகப்பட்ட புகழ்... பணம்... விருதுகள்!

'எம்.டி.வி. யூரோப் அவார்டு', 'பெஸ்ட் ஆர்டிஸ்ட் ஆஃப் தி இயர்', 'பாப்புலர் சி.டி. பாப் ஆர்டிஸ்ட்', 'பாப் பிரின்சஸ் 2000'.... அது... இது என்று எக்கச்சக்க விருதுகள் இவரது பையில். அது மட்டுமில்லை. புகழ் பெற்ற கிராமி அவார்டு போட்டியில் சென்ற வருடம் 'பெஸ்ட் நியூ பாப் ஆர்டிஸ்ட்' பட்டம் கொடுத்து விட்டார்கள். அவருடைய ரசிகர்களுக்கு அது போதாதாம். இந்த முறை கிராமிக்கு 'பெஸ்ட் பாப் பர்ஃபார்மெர்' விருதுக்கும் நாமினேட் செய்திருக்கிறார்கள். மொத்தத்தில் பிரிட்னிஸ்பியர் காட்டில் அடை மழை.

இவரது முதல் மியூசிக் ஆல்பம் 'பேபி, ஒன் மோர் டைம்' வெளியான போது பிரிட்னிக்கு வயது பதினாறு.

'யாரடா இந்தப் புதுப் பொண்ணு?' என்று அசுவாரசியமாக பார்த்தவர்கள்கூட அசந்து போகும்படி, புதிய இசைத் துள்ளாட்டம் போட்டிருக்கிறது. அப்புறமென்ன? பூகம்பம் கிளம்பிய பரபரப்பு... 'க்வீன் ஆஃப் டீன்' என்று அட்டைப் படமெல்லாம்' போட்டு அமெரிக்கப் பத்திரிகைகள் கிளப்பி விட, பிரிட்னியின் காசெட்டுகள் விற்றுத் தீர்ந்து விட்டன.

புகழ் வந்த பின் 'கிசுகிசு' வராமல் இருக்குமா? வந்து சேர்ந்தது மேலிடத்து வம்பு... 'பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸ் பிரிட்னியின் பரம ரசிகராகிவிட்டார். பிரிட்னியின் காதலுக்காக உருகி நிற்கிறார்' என்ற ரீதியில் செய்தி பரவவே, பிரிட்னியின் மவுசு இன்னும் கூடி விட்டது.

'இளவரசரே மயங்கிவிட்டாரா? அப்படி என்ன இந்தப் பெண்ணிடம்?' என்று வியந்து போன ஜப்பான், பாரிஸ் நாட்டுக்காரர்கள் எல்லாம் பிரிட்னியிடம் தேதி கேட்டு நிற்க... ஜப்பானில் 'கிமோனோ' உடையிலும், பாரி



## பிரிட்னி ஸ்பியர்ஸ்!

சில் ஈஃபில் டவரின் முன்பும் மிகப் பெரிய பாப் நிகழ்ச்சியை நடத்தி, பெருந் துட்டு பார்த்துவிட்டார் பிரிட்னி.

முதல் ஆல்பத்தின் பிரமிப்பு இன்னும் தணியவில்லை. இதோ பிரிட்னியின் 'ஊப்ஸ்.. ஐ டிட் இட் எகெய்ன்' ஆல்பமும் வெளியாகி, முதல் வாரத்திலேயே பதினைந்து மில்லியன் பிரதிகள் விற்றுத் தீர்ந்து பிளாட்டினம் டிஸ்க் தட்டிச் சென்றிருக்கிறது.





"நான் தனிமையில் இருக்கும்போது, ஏதாவது வார்த்தைகள் மனசுக்குள் விழும். அதைக் கோத்துப் பார்ப்பேன். ஏதோ கவிதைபோல பொங்கும். வாய்விட்டுப் பாடிப் பார்ப்பேன். கிடாரிலும், பியானோவிலும் வாசித்துப் பார்ப்பேன். உடனே கம்போஸ் ஆயிடும். அப்படி உருவானதுதான் முதல் ஆல்பம். அப்போ எனக்கு 'மைக்'குன்னா என்னன்னு தெரியாது. ஸ்டுடியோக்குள்ள போனதே இல்லை. ஆனா இப்ப வந்திருக்கிற இரண்டாவது ஆல்பம், முதல் ஆல்பத்தைவிட பத்து மடங்கு உசத்தியான இசை'' என்று தன்னடக்கத்தோடுச் சொல்கிறார் பிரிட்னி.

சி.டி. வந்த பிறகு புத்தகம் எழுதாமல் இருந்தா எப்படி? அதுவும் வந்தாச்சு!

'ஹார்ட் டு ஹார்ட்' என்ற இந்தப் புத்தகத்தில் 'கென்ட்வுட்' என்ற சின்ன ஊரில் பிறந்ததிலிருந்து பாப் இளவரசி ஆக அங்கீகரிக்கப்பட்டதுவரை, நிறைய விஷயங்களை அம்மா லென்னி ஸ்பியருடன் சேர்ந்து மனம்விட்டு எழுதியிருக்கிறார் பிரிட்னி. டேட்டிங், டிரஸ், மியூசிக், பாடி இமேஜ் என இளசுகளுக்கே உரிய பாணியில், சுவாரசியமாகக் கதை சொல்லப்பட்டிருப்பதோடு வசீகரிக்கும் பிரிட்னி போஸ்டரும் இலவசம் என்பதால், புத்தக விற்பனையிலும் நல்ல அறுவடையாம்.

- அனு



# சக்ரவர்த்தி



கண் தானத்தை வலியுறுத்தி கோல்கத்தா வாலிபர் ஒருவர் நாடு முழுவதும் பிரசாரம் செய்து வருகிறார்.

இருபத்தி நான்கு வயது சுபரதா சக்ரவர்த்தி பயணம் செய்து வருவது ஹேண்டில் பார், பெல், பிரேக் போன்ற எதுவும் இல்லாத ஒற்றைச் சக்கர சைக்கிளில். அந்தச் சக்கரத்திலும் டயர், டியூப் போன்றவை கிடையாது. அந்த டயரும் காற்று அடிக்க முடியாத முழு ரப்பர் டயர். ரிம்மில் இணைந்த மிதி பெடல், உட்கார ஒரு சீட், அவ்வளவுதான்.

கோல்கத்தாவிலிருந்து கிளம்பி புவனேஸ்வர், விஜயவாடா, ஹைதராபாத், சென்னை வழியாக திருச்சிக்கு வந்த அவரிடமிருந்து திரட்டிய தகவல்கள்.

• இமாலயச் சிகரங்கள் மீது ஏறும் பயிற்சி மையத்தின் பயிற்சியாளராகவும், தேசிய வீரச்செயல் பயிற்சி மையத்தின் பயிற்சியாளராகவும், சர்வதேசக் கண் சேமிப்பு வங்கியின் உறுப்பினராகவும் இருக்கிறார் சுபரதா சக்ரவர்த்தி.

• கண் தானம் செய்வது குறித்து பொது மக்களின் கவனத்தை ஈர்க்கவே இந்த ஒற்றைச் சக்கர சைக்கிள் பிரசாரப் பயணம். எண்பது நாட்களில் கடந்து வந்துள்ள தூரம் இரண்டாயிரத்து ஐந்நூறு கிலோ மீட்டர்.

• திருச்சியிலிருந்து மதுரை வழியாக கன்னியாகுமரி, திருவனந்தபுரம், கோவா, மும்பை, அஹமதாபாத், ராஜஸ்தான், பட்டான்பூர், ஜம்மு காஷ்மீர், சண்டிகார், டில்லி, லக்னோ, அஸ்ஸாம் வழியாக பயணித்து புறப்பட்ட இடமான கோல்கத்தாவை அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாத இறுதிக்குள் சென்றடைவாராம்.

• ஒற்றைச் சக்கர சைக்கிளில் அவர் பயணம் செய்து கடந்து போகும் மொத்த தூரம் பதினெட்டாயிரம் கிலோ மீட்டரைத் தொட்டுவிடுமாம்.

• இரவு நேரங்களில் கண் மருத்துவமனை, கண் வங்கி மற்றும் காவல் நிலையங்கள் போன்றவற்றில் தங்கிச் செல்கிறார்.

• இவர் சைக்கிளை மிதித்து ஓட்டி வருவது பார்ப்பவர்களுக்கு சர்க்கஸில் ஏதோ வித்தை காட்டி வருபவர் போலத் தோன்றி ஆங்காங்கே கும்பல் கூடி விடுவதும் உண்டாம்.

• அவருக்கு நன்கு தெரிந்த வங்காளம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதேனும் ஒன்றில் ஆங்காங்கு திரளும் பொது மக்கள் மத்தியில் கண் தானம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசுகிறார்.

மேற்குறிப்பிட்ட மூன்று மொழிகளும் அந்தப் பகுதி மக்களுக்குப் புரியாதபோது 'வுடு... ஜூட்!' எனக் கிளம்பி விடுவதில்லை. இருக்கவே இருக்கிறது சைகை மொழி.

• மணிக்கு எட்டு கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் இவர், ஒவ்வொரு இரண்டு கிலோ மீட்டர் தூரப் பயணத்திற்குப் பிறகு சிறிது நேரம் ஓய்வெடுத்து கை, கால்களுக்குத் தசைப் பயிற்சித் தந்த பின்னரே மீண்டும் சைக்கிளில் ஏறி அமர்கிறார்.

• உலகளவில் மூன்றில் ஒரு பங்கு பார்வையற்றோர் இந்தியாவில் வாழ்வதாகப் புள்ளி விவரம் தருகிறார் அவர். தங்கள் இல்லத்திற்கு அருகில் உள்ள பகுதிகளில் அதிக அளவில் வாழ்ந்து வரும் கண் பார்வையற்றவர்களைச் சந்தித்துப் பழகியதால் வந்த எண்ணமே இந்தக் கண் தானத்தை வலியுறுத்தும் பிரசாரப் பயணம் எனக் கூறுகிறார்.

• "வீட்டில் அம்மா, அப்பா, நான், தம்பி ஆகிய நால்வரும் எங்கள் உடல்களை மருத்துவ ஆய்வுக்காக தானமாகத் தந்திருக்கிறோம்"! என்கிறார் சுபரதா சக்ரவர்த்தி.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

# பவர்ஃபைனான்ஸ்

நடத்தும்

டெபாசிட்தாரர்கள் முகாம்

உள்ளூர் காசோலை ஏற்றுக் கொள்ளப்படும்.

## சேலம்

நாள் :

**22, 23 & 24 பிப்ரவரி, 2001.**

இடம் :

**ஸ்ரீ வாசவி சுபிக்ஷா ஹால்,**

மேட்டுத் தெரு (ஸ்ரீ சுகவனேசுவரர் கோயில் தெரு),

சேலம் - 636 001.

தொலைபேசி :

**416494**

## திருச்சி

நாள் :

**26 & 27 பிப்ரவரி, 2001.**

இடம் :

**அஜந்தா ஹோட்டல்,**

ஜங்ஷன் சாலை,

திருச்சி - 620 001.

தொலைபேசி :

**415501**

**நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.


30-9-2000 தேதியிட்ட ... இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com / www.thegovt.com

## கிச்சன் கிளினிக்







# பல் வலி போயே போச்சு!

சுமார் ஐம்பது அடி உயரம் வரை உயர்ந்தோங்கி வளரக் கூடியது இலவங்க மரம். சற்றே வெளிர் மஞ்சள் நிறம் கொண்ட இலவங்க மரத்தின் இலைகள் தளிராக இருக்கிறபோது, இளஞ்சிவப்பு நிறமாகவும் முற்றியபிறகு பச்சையாகவும் காட்சி தரும். இந்தியாவெங்கும் பரவலாகப் பயிராகும் இலவங்கம், தென்னிந்தியாவின் முக்கிய வாணிபப் பயிர்களுள் ஒன்று. இந்த மரத்தின் காய்ந்த மலர்தான் நாம் பயன்படுத்துகிற இலவங்கம் அல்லது கிராம்பு.

நறுமணமும், காரத்தன்மையும், விறுவிறுப்பான சுவையும் கொண்டது கிராம்பு. கிராம்பைக் கிள்ளினால் எண்ணெய்ப் பசையைக் காண முடியும். குளிர்ச்சியைப் போக்கி, கதகதப்பை உண்டாக்கும் குணம் இதற்கு உண்டு.

ஏலக்காய்க்கு ஈ.என்.டி.. ஸ்பெஷலிஸ்ட் என்று சிறப்புப் பெயர் இருப்பது போல கிராம்புக்கு டென்டல் ஸ்பெஷலிஸ்ட் என்று சிறப்புப் பெயர் உண்டு.

பல், ஈறு இரண்டிலும் என்ன பிரச்னை என்றாலும், ஆபத்பாந்தவனாக கை கொடுப்பது கிராம்புதான். சாப்பிடுகிறபோது, பல் இடுக்குகளிலும், ஈறுக்கும், பல்லுக்கும் இடைப்பட்ட பகுதியிலும் நுண்ணிய உணவுத் துணுக்குகள் அகப்பட்டுக் கொண்டு விடும். கிருமிகள் தோன்றும். விளைவு? பல் வலி, ஈறுகளில் வீக்கம்.

சில சமயங்களில் இரவு நேரங்களில் திடீரென்று பல் வலி ஏற்பட்டு, தாங்கமுடியாத அளவுக்குப் போய்விடும். அப்போது, நம் வீட்டுப் பாட்டிமார்கள், சமையல் அறைக்குப் போய் இரண்டு கிராம்பை எடுத்துக் கொண்டு வந்து நன்றாக நசுக்கி, பல் வலி உள்ள இடத்தில் வைத்து அழுத்திப் பிடித்துக் கொள்ளச் சொல்லுவார்கள்.

இரண்டு, மூன்று நிமிடங்களுக்கு, வாயில் ஒரு வித விறுவிறுப்பு சற்று அதிகமாகவே





மூலிகைமணி
டாக்டர் க. வேங்கடேசன்
டாக்டர் க.வே. அபிராமி

"தேர்தல்ல கடுமையா உழைச்சதுக்குப் பரிசா தலைவர் கிட்டே ஒரு சங்கிலி கேட்டேன்."

"எத்தனை பவுன்ல வாங்கித் தந்தார்?"

"அடுத்த மாசம் மனிதச் சங்கிலி வருது... கொஞ்சம் பொறுன்னு சொல்லியிருக்கார்."

— புளியரை கணேசன்



இருக்கும். தொடர்ந்து, அந்த இடத்திலிருந்து துர்நீர், எச்சில்போல வெளியேறும். காலையில் பார்த்தால், வலி இருந்த இடம் தெரியாது. வீக்கமும் குறைந்துவிடும். அது மட்டுமல்ல; பல்வலி, மற்ற பற்களுக்கும், ஈறுகளுக்கும் பரவாமல் தடுத்துவிடும். பல் சொத்தை, ஈறுகளில் சிதைவு ஆகியவற்றுக்கும் கிராம்பு நல்லதொரு மருந்து. ஆக, கிராம்பு, கிருமிநாசினி மட்டுமல்ல; வலி நிவாரணியும் கூட. அதனால்தான் இப்போது, சில பிரபல கம்பெனிகள், தங்களது பற்பசைகளில் கிராம்பு சேர்க்கப்படுவதாக விளம்பரம் செய்கின்றன.

பசியைத் தூண்டி, உணவைச் செரிக்க வைக்கிற பணியையும் கிராம்பு செய்கிறது.

பகலிலும், இரவிலும் சாப்பாட்டுக்குப் பிறகு, தாம்பூலம் போட்டுக் கொள்ளுவது வழக்கம். புகையிலையுடன் இணைத்து வெற்றிலை போட்டுக் கொள்ளுகிற பழக்கத்தை நான் இங்கே குறிப்பிடவில்லை. வெற்றிலை போட்டுக் கொண்டால், அதில் மிளகு, சோம்பு, கிராம்பு, ஏலக்காய் ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ளும் பழக்கத்தை நான் நினைவூட்ட விரும்புகிறேன். இந்தத் தாம்பூலம் உமிழ்நீருடன் நன்கு கலந்து, வாயில் உள்ள உணவுத் துண்டுகளை அகற்றுகிறது. தாம்பூலத்தால் ஏற்படக்கூடிய விறுவிறுப்பு, கிருமிகளை வெளியேற்றி பற்களை வலுவூட்டுகிறது. செரிமானத்தைத் துரிதப்படுத்துகிறது.

பயோரியா நோயைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதற்கு, மருத்துவ ரீதியில் இன்ன மருந்து கொடுத்தால் நோய் வராது என்று டாக்டர்களால் உறுதிபடக் கூற முடியவில்லை.

பல் மற்றும் ஈறு சம்பந்தப்பட்ட இந்தப் பயோரியா நோய் வந்துவிட்டால், படு அவஸ்தை.


இதற்கு என்ன வைத்தியம்? மூன்று கிராம்புகளை எடுத்துக் கொள்ளுங்கள். குவளைத் தண்ணீரில் கிராம்பை நசுக்கிப் போட்டு, நன்றாகக் கொதிக்க வைத்து ஒரு ஸ்பூன் தேன் சேர்க்கவும். இளஞ்சூட்டில், அந்தத் தண்ணீரில் நன்றாக வாயைக் கொப்பளிக்க வேண்டும் தினமும் மூன்றுவேளை, சாப்பாட்டுக்குப் பின் வாய்க் கொப்பளித்தால், பயோரியா நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

சிலருக்கு ஈறுகள் பலமிழந்து, ஓரிரு பற்கள் ஆட்டம் காணும். இதனால் மிகவும் அசௌகரியமாய் உணருவார்கள். கிராம்பு நீரில் தினம் மூன்று முறை வாய்க் கொப்பளித்து வந்தால், இரண்டே வாரங்களில், ஈறுகள் கெட்டிப்பட்டு, பல் ஆட்டம் நிற்கும்.

கிராம்பின் பணி வாயுடன் நின்று விடவில்லை. உணவுக் குழல் வழியே, வயிற்றின் உட்புறச் சுவர் வரை தொடர்கிறது. உள்ளே எத்தகைய ரணம் இருந்தாலும் குணப்படுத்திவிடும்.

தலையில் நீர் கோத்து மிகவும் கனப்பது போல உபாதை இருக்கும். இதற்கு, துண்டு சுக்கு, இரண்டு கிராம்பு இரண்டையும் மைபோல அரைத்து, மூக்கு, நெற்றிப் பொட்டு ஆகிய இடங்களில் பற்றுப் போட்டு, சாம்பிராணி புகை பிடித்தல் நல்லது.

இரண்டு அல்லது மூன்று துளிகள் கிராம்புத் தைலத்துடன், சர்க்கரை சேர்த்து சாப்பிட்டால், வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள், பித்தம் தொடர்பான நோய்கள் யாவும் விலகிவிடும். சொத்தைப்பல் வலியால் அவதிப்படுகிறவர்கள் சிறு பஞ்சு உருண்டையில், இந்தத் தைலத்தில் ஒரு சொட்டு விட்டு, வலி இருக்கும் இடத்தில் வைத்து அழுத்திக் கொண்டால், பல் வலி போயே போச்சு.



# நன்கு வளர்ச்சியடைந்த
# சென்னைப் புறநகர்ப் பகுதியில்
# டீலக்ஸ் அபார்ட்மெண்டுகள் ரூ.3.41 லட்சம் முதல்!!

## சிக்கனமான விலையில் வசதியான வாழ்க்கை

HANSA GARDEN
ராஜகீழ்ப்பாக்கம்

**ஹன்ஸா கார்டன்**

தாம்பரத்திற்கு முன்னதாக அமைந்துள்ள ஹன்ஸா கார்டன், ஒன்று / இரண்டு படுக்கையறை மற்றும் இரண்டு படுக்கையறை + படிப்பறை கொண்ட ஃப்ளாட்டுகளை வழங்குகிறது. நேர்த்தியான வடிவமைப்பு, தரமிக்க கட்டுமானம்.

- ஒரு படுக்கையறை ஃப்ளாட்டின் விலை ஏறத்தாழ ரூ.3.41 லட்சம். இரண்டு படுக்கையறை ரூ.4.64 லட்சம் முதல். இரண்டு படுக்கையறை + படிப்பறை ரூ.5.58 லட்சம் முதல்.
- ஃப்ளாட் முழுவதும் செராமிக் டைல்ஸ் ஃப்ளோரிங்.
- ஒவ்வொரு ஃப்ளாட்டிற்கும் தொலைபேசி மற்றும் டிஷ் ஆண்டெனா இணைப்பு.
- சுத்தப்படுத்தப்பட்ட குடிநீர் சப்ளை மற்றும் நவீன முறையில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு.
- விளையாட போதுமான இடவசதி மற்றும் புல்வெளியமைந்த சுற்றுச்சூழல்.
- தாம்பரம் ரயில் நிலையம் செல்ல காம்ப்ளக்ஸிற்கே சொந்தமான போக்குவரத்து வசதி.
- பாரிமுனை, அண்ணாசாலை, சைதாப்பேட்டை, வேளச்சேரி, தி.நகருக்கு நேரடி அரசு பேருந்துச் சாலை இணைப்பு.

**இடம் : மாடம்பாக்கம் பிரதான சாலை, ராஜகீழ்ப்பாக்கம், வேளச்சேரி - தாம்பரம் சாலையில் தாம்பரத்திற்கு 5 கி.மீட்டருக்கு முன்னால் உள்ளது.**

**ஹன்ஸா வந்தனா**

குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள ஹன்ஸா வந்தனா, ஒன்று மற்றும் இரண்டு படுக்கையறை கொண்ட டீலக்ஸ் அபார்ட்மென்டுகளை உங்களுக்கு வழங்குகிறது.

HANSA VANDANA
குரோம்பேட்டை

- நான்கு ஃப்ளாட்டுகள் உள்ள தனித்தனி கட்டிடம்.
- ஃப்ளாட்டின் விலை ரூ.4.21 லட்சம் முதல்.
- ஃப்ளாட் முழுவதும் செராமிக் டைல்ஸ் ஃப்ளோரிங்.
- வாட்டர் ட்ரீட்மெண்ட் பிளாண்ட்.

**இடம் : தாயுடு ஷாப் ரோடு, ராதா நகர், குரோம்பேட்டை.**

புக்கிங்கிற்கு அணுகவும்:

**ஹன்ஸா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட்**

கிவ்ராஜ் எஸ்டேட்ஸ், நான்காம் தளம்,
624, அண்ணா சாலை, சென்னை - 600 006.
போன் : 8293135, 8292315, 8292323
ஃபேக்ஸ் : 8293135.
email : hansaest@md4.vsnl.net.in

# நீங்கள் கேட்டவை – தராசு

• ஜி. குமார், சென்னை– 29 ❐

? சீனியாரிடிபடி இல்லாமல், நன்றாக வேலை பார்த்தால் மட்டுமே பதவி உயர்வு என்ற திட்டத்தை சந்திரபாபு நாயுடு ஏப்ரல் 1 முதல் அமுல்படுத்தப் போகிறாராமே?

! ஆர்.கே. ராகவனுக்கு ஸி.பி.ஐ. தலைமைப் பதவியைத் தந்துவிட்டு, நடுவர்மன்ற தீர்ப்பு தட்டிக் கேட்க, எப்படி நிலைமையைச் சமாளிப்பது என்று மூளையைக் குடைந்து கொண்டிருக்கும் மத்திய அரசின் நிலைக்கு நாயுடுகாருவும் தள்ளப்படாமலிருந்தால் சரிதான்!

• எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்

? த.மா.கா–காங்கிரஸ் ஆகிய கட்சிகள் சேர்ந்து மூன்றாவது அணி அமைத்தால் அது யாருக்கு உதவும்?– தி.மு.கவுக்கா? அ.தி.மு.கவுக்கா?

! நிச்சயமாக மூன்றாவது அணிக்கு உதவாது!

• க.நா. ராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? 'The Chettiar Heritage' நூலைப் பார்த்தீர்களா? (அதன் விலையைப் பார்த்துப் 'படித்தீர்களா?' என்று கேட்கத் தோன்றவில்லை.)

! படிப்பதற்காகவே விலை கொடுத்து வாங்கினாலும் பார்ப்பதற்கு அதிகமாகவும் படிப்பதற்குக் கொஞ்சமாகவும்தான் விஷயங்கள் உள்ளன. ஆனால் 'வளவள' என்று விளக்கிக் கொண்டு போகாமல் வெறும் புகைப்படங்களின் உதவியோடு ஒரு பழம்பெரும் சமூகத்தின் கலாசாரத்தைத் தெளிவாக விளக்கிய ஆசிரியர் குழுவை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

• ஆர். அப்துல் சலாம், திருச்சி–20

? பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இடிபாடுகளில் சிக்கிக் கிடப்பவர்களைக் காப்பாற்றுவதை விட்டுவிட்டு அவர்களை மிரட்டி, நகைகளை ஒரு கும்பல், கொள்ளை அடித்து வரும் அவலம் பற்றி...?

! அவர்களாவது படிக்காத கொள்ளைக்காரர்கள். ஆனால், பூகம்பத்தில் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு சென்னைக்கு ரயிலேறிய பெண்மணியிடம் கூடுதல் பணம் கேட்டு மிரட்டிய டி.டி.ஆர்.இ– படித்த கொள்ளைக்காரரை– என்ன செய்வது?



• நிற்கும் நூல்



• வாக்கியம் வாபஸ்!



• புதிய பிரச்னை?



• நம்பிக்கை வேட்டை!



• தனிப்பெருமை!

• டி.என். சத்யாமுருகவேல், சூரம்பட்டி

? பாரபட்சமின்றி நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதே அரசியல் தலைவர்களின் கடமையாக இருக்கையில், 'நான் அதைச் செய்தேன்– இதைச் செய்தேன்' என்று கூறி வோட்டு வாங்குவது எந்த வகையில் நியாயம்?

! கடமையை மறந்து, பாரபட்சமின்றி மக்கள் வரிப்பணத்தைப் பலவாறு கொள்ளையடிப்பதே சில அரசியல் தலைவர்களின் குறிக்கோளாக இருப்பதால் இதுவும் அவசியமாகிறது.

• கே.குகன், மயிலாடுதுறை

? ஐ.நாவின் அமைதித் தூதராக விஜய் அமிர்தராஜ் நியமிக்கப்பட்டுள்ளாரே...?

'டென்னிஸுக்குப் பெருமை; தமிழகத்துக்குத் தனிப் பெருமை!


• 'நகை' தி. மகராசன், கடமலைக்குண்டு

? ''அ.தி.மு.க. அணியில் பா.ம.க. இணைந்தபோதும் காங்கிரஸ் தனித்தன்மையை இழக்காது'' என்கிறாரே இளங்கோவன். அப்படீன்னா என்னங்க?

! முதுகு சவாரியில்தானே இருக்கிறது இ. காங்கிரஸின் தனித் தன்மை! அது தொடரும் என்று அர்த்தம்!

• சப்பைகட்டு!

● தி. சுரேஷ், திருச்சிற்றம்பலம்



? புதிய மக்கள்தொகை கணக்கெடுப்பு மூலம் இந்திய அரசு குடும்பக் கட்டுப்பாட்டில் ஏதாவது மாற்றம் செய்ய விரும்புகிறதா...?

! கணக்கெடுப்பு அவசியமானாலும் அதனால் கு.க. செயல்படாது. அதிகம் பேர் முறையாக கு.க. கையாள முறையான கல்வியும் வாழ்க் கைத்தரம் உயர்வதும் உதவும்.

# காங்கிரஸ் தனித்தன்மையை இழக்காதாமே..?

● மல்லிகை மன்னன், மதுரை-17

? தி.மு.கவுக்கு இனிமேல் த.மா.காவோடு ஒட்டும் இல்லை உறவும் இல்லை" என்று சொன்ன கருணாநிதி இப்போது த.மா.காவோடு உறவாட நினைப்பது பகுத்தறிவாளரின் பண்பாகத் தெரியவில்லையே...?

! வேகத்தில் பேசியது இப்போது விவேகத்தில் வாபஸாகியிருக்கிறது-பலன் கிடைக்க வேண்டுமே?

● வி.பி. காந்திமதி, மதுரை

? 'கல்கி நினைவுகள்' ஆசிரியர் பகீரதன் மறைவு குறித்து...?

! கடும் உழைப்பாளி; கல்கி அபிமானி; கடைசி காலத்தில் நோயுற்று மிகவும் நலிந்தார். ராமலிங்கர் பணிமன்றத்தில் ஈடுபாடு கொண்டிருந்தவர் தை பூசத்தன்று- வள்ளலார் நினைவு தினத்தில்- மறைந்தது குறிப்பிடத்தக்கது. ஓமந்தூரார் பற்றிய அவரது நூல், வரலாற்று நாயகனை மட்டுமின்றி பகீரதன் பெயரையும் நிலை நிறுத்தும்.

● அ. கென்னடி, நன்னிமங்களம்

? காதலித்துத் திருமணம் செய்து கொண்டு பிறகு பிரிந்து (விவாகரத்து) வாழ்வது பற்றி...?

! Love marriage is a risk; arranged marriage is a calculated risk. பிரியாமல் தொடர்வது. என்ன சோதனை வந்தாலும் சமாளித்து ஜெயிப்பேன் என்ற வைராக்கியம் இருந்தால் மட்டுமே சாத்தியம்.

● டி.மாரிமுத்துக்குமார், சென்னை-41 *

? டார்வினின் பரிணாமக் கொள்கையின் படி, எதைப் பயன்படுத்தாமல் இருக்கிறோமோ அது அழிந்து போகும். அதன் படி நவீன சோம்பல் வாழ்க்கை வாழும் இன்றையத் தலைமுறையின் சிந்தனைத் திறன் பாதிக்கப்படாதா...?

! நவீன வாழ்க்கையில் உடலுழைப்பு குறைவாயிருக்கலாம். ஆனால், சிந்தனைக்குச் சவால்கள் ஏராளம். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்துள்ள விஞ்ஞான முன்னேற்றங்கள், மனித சமூக வளர்ச்சியின் உச்சம் எனலாம். எனவே மனித சிந்தனைத் திறனும் சரி, அதன் பின்னுள்ள விடாமுயற்சியும் சரி, பாதிக்கப்படாது.

● மு. பெரியசாமி, விட்டுக்கட்டி

? வீரப்பனை அதிரடிப்படை சுற்றி வளைத்து விட்டதாகவும் ஓரிரு நாட்களில் பிடித்து விடுவதாகவும் சொன்னார்கள். இன்னும் பிடிக்க முடியவில்லையே...?

! தவறுகள் நேர்ந்திருக்கலாம். ஆனால், தற்போது அதிரடிப்படையின் முயற்சியில் பழுது இருப்பதாக நான் நினைக்கவில்லை. பரந்து விரிந்த காட்டுப்பகுதி முழுவதும் வீரப்பனுக்கு அத்துப்படி. அதிரடிப் படைக்கோ திக்கு தெரியாத காடு. 'பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்' என்ற பழமொழி பொய்க்காது என்று நம்பிக்கையோடு இருங்கள்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
ஜி. குமார்,
312, பி.எச். ரோடு,
சென்னை – 600 029


* ரூ. 25 பரிசு பெறுபவர்:
டி. மாரிமுத்துக்குமார்,
பிளாட் எண் 110,
ஐந்தாவது மெயின் ரோடு,
சாமிநாதன் நகர்,
கொட்டிவாக்கம், சென்னை – 41

# பிப்ரவரி 21 முதல் 27 வரை




**மேஷம் :** *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க செல்வாக்கும் கௌரவமும் ஜோராக இருக்கும். நல்லவங்க, முக்கியமானவங்க ஓடி வந்து உதவுவாங்க. குடும்பத்தில் மகிழ்ச்சி அலை பாயும். எதிர்ப்புகள் எல்லாம் பலவீனமாகிவிடும். பண வரவு – செலவு விஷயத்தில் பிரச்னை இருக்காது. கொடுக்கல்– வாங்கலில் லாபம் கூட ஏற்படலாம். நீங்க ஏற்பாடு பண்ணியிருக்கிற பயணம் நன்மையில் முடியப் போகுது. வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வர வாய்ப்பு இருக்கு! ஜமாயுங்க.




**ரிஷபம் :** *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க திறமையும் சாமர்த்தியமும் 'பளிச்'னு வெளியே தெரியப் போகுது. பெண்கள் குறிப்பா ஏக உற்சாகமாக இருப்பாங்க. கணவன் – மனைவி உறவு சண்டை சச்சரவு இல்லாமே சீராக இருக்கும். ஆனா எந்த முயற்சியிலும் வழக்கத்துக்கு அதிகமாக சிரமம் எடுத்துக்க வேண்டி இருக்கும். அலைச்சலுக்குக் கேட்கவா வேணும்? நல்லவர்கள் சகவாசமும் பெரியவங்க ஆலோசனையும் நாடுங்க, எதுவுமே சிரமமாகத் தோணாது.




**மிதுனம் :** *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்க துணிவும் தன்னம்பிக்கையும் வெளிப்படப் போகுது. எடுத்த காரியத்தை தலைகீழா நின்னு முடிச்சிடுவீங்க. எதிர்ப்புகள் விலகிடும். ஆனால் மனசில் சஞ்சலம் ஏற்படுத்துகிற மாதிரி ஏதாவது நடந்துக்கிட்டே இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் எல்லாம் அவங்கவங்க வேலையில் மூழ்கியிருப்பாங்க, அவங்ககிட்டே உதவி எதிர்பார்க்காதீங்க. கணவன் – மனைவி உறவில் சலசலப்பு உண்டாகலாம், பக்குவமாகப் பழகிக்குங்க. பயணத்தை ஒத்திப் போட்டால் நல்லது. எந்தக் காரியத்தையும் எடுத்தேன், கவிழ்த்தேன்னு செய்யாதீங்க. யோசிச்சு நிதானமாகச் செயல்படுங்க.



**கடகம் :** *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்களுடைய திட்டங்களும் எண்ணங்களும் நிறைவேறப் போகுது. படுத்திக்கிட்டே இருந்த எல்லா பிரச்னைகளும் மாயமாகப் போகுது. மனசில் உற்சாகம் கிளம்பும். குடும்பச் சூழ்நிலையிலும் அது எதிரொலிக்கும். பண நடமாட்டம் திருப்தியாகவே இருக்கும். ஆனால் அதுக்காக தாம் தூம்னு ஆடம்பரச் செலவு பண்ணிடாதீங்க. நல்ல செய்தி ஒன்று வரலாம். உடம்பை பத்திரமாக பார்த்துக்கங்க, அலட்சியமாக இருந்துடாதீங்க.



**சிம்மம் :** *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க மதிப்பும் செல்வாக்கும் 'கிண்'ணுன்னு உயரப் போகுது. சில பேருக்குச் சொத்து வாங்குகிற அதிர்ஷ்டம் கூட இருக்கு. வி.ஐ.பிங்க வலிய வந்து உதவுவாங்க. குறிப்பா மத்த மொழிக்காரங்களாலே நிறைய அனுகூலம் உண்டாகும். வெளிநாட்டுச் சகவாசம் இருந்தா, அந்தத் தொடர்பு உங்களுக்குப் பயன்படப் போகுது. மனசில் மட்டும் சலனம் இருந்துக்கிட்டே இருக்கும். அது பிள்ளைகளாலேகூட இருக்கலாம். மத்தபடி உடம்பால் எந்தப் பிரச்னையும் வராது. செலவைக் கட்டுப்படுத்தி சிக்கனமாக இருக்கப் பாருங்க, உதவும்.




**கன்னி :** *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

எடுத்த காரியமெல்லாம் ஜெயம்தாங்க. எதிரிகள் எல்லாம் பறந்து போயிடுவாங்க. பண நிலைமை திருப்தியாக இருக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பு கூட அடிக்கலாம். மற்றவர்கள் உங்களுக்குப் புகழ் மாலையா சூட்டுவாங்க. அதுக்கேத்த மாதிரி உங்க பேச்சில் இனிமையும் கவர்ச்சியும் அதிகமாகவே இருக்கும். சிறு சிறு தடங்கல்கள் வரும். ஆனால் சமாளிச்சிடுவீங்க.

அக்னிசர்மா பக்கம்

நடக்குமென்பா




**துலாம் :** *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

நீங்க பக்குவமாக நடந்துக்க வேண்டிய வாரம் இது. எதிலும் அவசரமோ பதற்றமோ வேண்டாம். குடும்பத்தில் சலசலப்பு, கருத்து வேறுபாடு இருந்துக்கிட்டே இருக்கும். வேலையாட்கள் வேறே தொல்லை கொடுத்துக்கிட்டே இருப்பாங்க. வாழ்க்கைத் துணைவருக்குத் தலைக்கு மேலே பிரச்னை, அதனாலே அவங்ககிட்டே எந்த உதவியும் எதிர்பார்க்காதிங்க. பண நிலைமை கையைக் கடிக்கும். கடன்கூட வாங்கற நிலைமை ஏற்படலாம். அதனாலே வீண் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்திடுங்க. புதிய முயற்சிகள் எல்லாம் இப்ப வேண்டாமே! ஆன்மிகத்தில் ஜாஸ்தியாக ஈடுபடுங்க, சங்கடங்கள் குறையும்.




**விருச்சிகம் :** *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க மதிப்பும் அந்தஸ்தும் எங்கேயோ போகப் போகுது. எதிரிங்க காணாமல் போய்டுவாங்க. கோர்ட்டு, வழக்கு விஷயம்னாலும் சரி, போட்டி, பந்தயம், விளையாட்டுச் சமாசாரம்னாலும் சரி, உங்களுக்குத்தான் வெற்றி போங்க. வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு, வேலையில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வோ, ஊதிய உயர்வோ நிச்சயம். மாற்றல் கூட உண்டாகலாம். ரொம்ப நாளாக நினைச்சுக்கிட்டிருந்த விஷயம் ஒன்று நிறைவேறப் போகுது. ஆனால் சின்னச் சின்ன தடங்கல்கள், குழப்பங்கள் இருக்கும். அதுகூட இல்லேன்னா எப்படி?



**தனுசு :** *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்க வசீகரத்தன்மை கூடிடும். அதோடு, செயல் திறமையும் புத்திசாலித்தனமும் அதிகரிக்கும். விருந்து, உபசாரம், உல்லாசம்னு ஜமாய்ப்பீங்க. வி.ஐ.பி.களோட சகவாசம் சரியான நேரத்திலே உதவப் போகுது. புது ஆடை, நகை, நட்டுன்னு கலக்குவீங்க. மாணவர்கள் தங்களோட உழைப்பின் பலனை உணருவாங்க. ஆனால் பேசும்போது மட்டும் நிறுத்தி நிதானமாகப் பேசுங்க. அவசரமோ, வேகமோ வேண்டாம். பெரியவங்க ஆலோசனையைக் கேட்டு நடந்துக்கங்க. அதுதான் உங்களுக்கு நல்லது.




**மகரம் :** *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

நல்ல உற்சாகமான செய்தி ஒண்ணு-வெளிநாட்டுப் பயணமாகக் கூட இருக்கலாம், வரப் போகுதுங்க, அதனால உங்க திறமை, புத்திசாலித்தனம், பேச்சாற்றல் மூன்றும் அதிகமாகப் போகுது. பூஜை, புனஸ்காரம் இதிலெல்லாம் ஈடுபாடு அதிகம். திருமணம் ஆகாதவங்க ஜோடி சேர்ந்திடுவாங்க, ஆனவங்க அப்பா – அம்மா ஆயிடுவாங்க. பணப் பிரச்னை வராது, வர வேண்டிய பாக்கிகூட வசூலாகலாம். வேலையில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு ரொம்ப தூரத்தில் இல்லை.



**கும்பம் :** *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

எடுத்த காரியங்களைத் திறமையாகச் செஞ்சு வெற்றிகரமாக முடிச்சுடுவீங்க. உங்க பேச்சாற்றலும் முகராசியும் ரொம்பவே உதவப் போகுது. பெண்கள் உற்சாகமாக இருப்பாங்க. அப்புறம் என்ன, குடும்பத்தில் மகிழ்ச்சி, குதூகலம்தான். வாகனம் வாங்கறதுக்கு நிறைய வாய்ப்பு இருக்கு. குறைந்த பட்சம் வாகனம் மூலம் ஏதாவது லாபமாவது வரும். பணத்துக்கு முடையே வராது. இந்த வாரம், சிவப்பு நிறத்தை நிறைய பயன்படுத்துங்க.




**மீனம் :** *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

எந்த காரியமும் திட்டமிட்டபடி நடக்காதுங்க. இடையூறுகள் வந்துக்கிட்டே இருக்கும். அதனாலே எந்தத் தொழில் செஞ்சாலும் சிரத்தையோட செய்யுங்க. பணம் தண்ணீராகச் செலவழியப் போகுது. கொடுக்கல், வாங்கலில் ஜாக்கிரதையாக இருங்க. ஜாமீன் – கீமீன்னு எதையாவது இழுத்து விட்டுக்காதீங்க. வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க. ○

# நடக்கும்!



***மேஷ ராசிக்காரரான ரகுவரனுக்கு வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரப் போகுதாமே!***








2001 பிப்ரவரி 25
விக்ரம மாசி 13
மலர் : 59
இதழ் : 30

# கல்கி


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




## திரித்துப் பேசப்படும் தீர்ப்பு!

‘நீதி வழங்குவது தாமதப்படுமேயானால் அது நீதி மறுக்கப்பட்டதற்குச் சமமாகும்’ என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு. நமது நாட்டில் இந்தப் பழமொழிதான் மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு நீதிமன்றங்களிலும் தீர்க்கப்படாமல் இழுக்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான வழக்குகள் தனியாருக்கு நியாயம் வழங்கப்படாமல் தடைசெய்து கொண்டிருக்கின்றன. வேறு பல வழக்குகளோ, தேசத்துக்கே நியாயம் வழங்க வேண்டியவை. பொதுச் சொத்து, மக்கள் பணம் தொடர்பானவை. போஃபர்ஸ் வழக்காகட்டும், ஜெயலலிதா பேரிலான ஊழல் குற்றச்சாட்டுகளாகட்டும், லாலு பிரசாத் பேரிலான வழக்குகளாகட்டும்... அநியாயத்துக்கு இழுக்கடிக்கப்படுகின்றன.

பொதுப் பணத்தில் ஊழல் செய்வோர் பகிரங்கமாகச் செய்ய மாட்டார்கள்; ஆதாரங்களை மறைக்க பணமும் செல்வாக்கும் அவர்களுக்குக் கைகொடுக்கும் என்பதும் பலவிதமாகவும் வழக்கைத் தாமதப்படுத்த முயற்சி செய்வார்கள் என்பதும் உணரப்பட்டுதான் இத்தகைய வழக்குகளில் சிறப்பு விசாரணை-தனி நீதிமன்றம் என்று நிறுவ வகைசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தனி ஏற்பாடுகளுக்கும் தண்ணி காட்டும் அளவுக்குச் சட்டத்திலுள்ள ஓட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன; வழக்குகள் தாமதப்படுத்தப்படுகின்றன.




இவ்வாறு தாமதத்துக்குள்ளாகியிருக்கும் முக்கிய வழக்குகளுள் ஒன்று பாப்ரி மஸ்ஜித் தகர்ப்பு வழக்கு. இவ்வழக்கில் மத்திய அமைச்சர்கள் அத்வானி, ஜோஷி, உமாபாரதி உள்ளிட்ட எட்டு பேர் குற்றம் சாட்டப்பெற்றிருப்பதைச் சமீபத்தில் நிராகரித்துள்ளது அலஹாபாத் உயர்நீதிமன்றம்.

இதற்கு வழங்கப்பட்டுள்ள காரணம் என்னவென்று பார்த்தால், இவர்கள் பேரில் வழக்கு தொடுக்க உ.பி. அரசு தயாரித்த நோட்டீஸ் முறையாக அமையவில்லை என்பதுதான்!


இந்த எட்டுபேரும் குற்றம் செய்யவில்லை என்றோ, அவர்கள் பேரில் குற்றம்சாட்ட ஆதாரம் இல்லை என்றோ அலஹாபாத் உயர்நீதிமன்றம் கூறிவிடவில்லை.

இன்னும் சொல்லப்போனால் தனி நீதிமன்றத்தில் முறையாக நோட்டீஸ் கொடுத்து வழக்கு தொடரும்படி சி.பி.ஐயிடம் கேட்டுக் கொண்டிருக்கிறது அலஹாபாத் உயர்நீதி மன்றம்.

ஆனால், இந்தத் தீர்ப்பை அப்படியே திரித்து அர்த்தம் செய்து கொண்டு, 'எனக்கு நீதி கிடைத்துவிட்டது' என்று உமாபாரதி அறிக்கை கொடுத்திருக்கிறார். விச்வ ஹிந்து பரிஷத் அமைப்போ, அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது தேசிய உணர்வின் வெளிப் பாடே ஆகும் என்று பிரதமர் முன்பு விடுத்த அறிக்கை இத்தீர்ப்பினால் நியாயப்படுத் தப்பட்டிருப்பதாகக் கொக்கரிக்கிறது.

அத்வானியும் ஜோஷியும் மௌனம் காத்தாலும் அவர்களைச் சுற்றியிருப்பவர்கள் இவ் வாறு தம்பட்டம் அடிப்பது மிகத் தவறான அபிப்பிராயத்தையே எளிய மக்களிடையே ஏற்படுத்தும்.

ராம ஜன்ம பூமி பிரச்னையானது உணர்ச்சிகள் சார்ந்தது. நீதிமன்றத்தில் அதற்கொரு தீர்வு நாடுவது என்பது உணர்ச்சிகளிடமிருந்தும் அவ்வுணர்ச்சிகள் ஊடுருவும் அரசியல் சிக்கல்களிடமிருந்தும் அப்பிரச்னையை விடுவித்து, அறிவுபூர்வமாக அதை அணுகி ஆராய




வழி செய்வதற்குத்தான்.

சி.பி.ஐயும் சரி, நீதிமன்ற வட்டாரங்களும் சரி, இதை உணர்ந்து, உரிய வேகத்துடன் இவ்வழக்கில் செயல்படாதது மிகவும் வேதனைக்குரியது. இப்பிரச்னைக்கான தனி நீதிமன்றம் 1993ல் நிறுவப்பட்டது. நாற்பது நபர்கள் பேரில் குற்றம் சாட்ட முறையாக நோட்டீஸ் வழங்கிய உ.பி. அரசு, இந்த எட்டு பேர் விஷயத்தில் மட்டும் நோட்டீஸ் வழங்குவதில் தவறு இழைத்திருக்கிறது. இதை தனி நீதிமன்றமும் கவனியாது விட்டிருக்கிறது.

இப்போது, ஏழு வருடங்களுக்கு மேல் ஆன பிறகு, இந்தச் சிறு தவறு காரணமாக மீண்டும் புதிதாக நோட்டீஸ் விடுத்து வழக்குத் தொடர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய அநியாய காலதாமதங்களைத் தட்டிக்கேட்க இயலாதபடிக்கும், அநீதி இழைத்தவர்கள் காலம் கடத்தியே தண்டனை பெறாமல் தப்புவதற்கும் நமது சட்ட அமைப்பு சாதகமாக அமைந்திருக்கிறது. இதற்கிடையே நடக்கும் ஆட்சி மாற்றங்களும் சட்டத்தின் பிடியிலிருந்து நழுவ அரசியல்வாதிக்கு உதவுகிறது.

குற்றம் நிரூபிக்கப்படாதவரை ஒருவர் நிரபராதிதான் என்கிற அடிப்படையில் அமைந்துள்ள சட்டம், நிரபராதிகளுக்குத் தகுந்த பாதுகாப்பை அளிப்பதாக இருக்கலாம். ஆனால், அதே சட்டம்தான் குற்றவாளிகளுக்கும் தகாத பாதுகாப்பை அளித்து, அநியாய காலதாமதங்களுக்கும் வழி வகுத்து அவர்களைத் தண்டனையிலிருந்து தப்புவிக்கிறது!

அமெரிக்காவில் கிளின்டன் பேரில் குற்றம் சாட்டப்பட்டபோது, அவரே முன்வந்து தவறை ஒப்புக் கொண்டுவிட்டார். காரணம், அங்கே குற்றம் சாட்டப்பெற்றவர் தாம் நிரபராதி என்பதை நிரூபிக்க இயலாவிட்டால் தண்டனை அனுபவித்தாக வேண்டும். நம் நாட்டிலும் சட்ட அமைப்பு இவ்வாறு மாறாத வரையில், பொதுவாழ்வு குற்றங்கள் குறையாது. வடிகட்டின கிரிமினல்கள் அரசியலுக்கு வருவதும் குறையாது; நேர்மையான மக்களுக்கு நீதி கிடைப்பது எட்டாத கனவாகவே இருக்கும். ○



# அறுபது நிமிட க்ளோனிங்!

"அப்பா! நான் ஒரு படம் போட்டிருக்கேன் பாரு!" தனது சிலேட்டுப் பலகையைத் தந்தையின் கண்களுக்கு நேராய்க் காட்டினான் ஐந்து வயது சங்கர். உச்சி முகர்ந்து பாராட்டுவார் என்று எதிர்பார்த்த குழந்தையின் பிஞ்சுக் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை விழுந்தது. "முளைச்சு மூணு இலை விடலை, அதுக்குள்ளே பிடி பிடிக்கிற மாதிரி படம் போடறியா?"

தனது முதல் படத்துக்குக் கிடைத்த கடுமையான விமர்சனம் சங்கருக்கு மீண்டும் வரையும் துணிவைக் கொடுக்கவில்லை. ஆனால் அப்பா என்ன நினைத்தாரோ, அடுத்த நாள் ஒரு கலர் பாக்ஸையும், கலரிங் புத்தகத்தையும் வாங்கிவந்து சங்கரிடம் தந்தார். வீட்டின் வறுமையையும் மீறி தரப்பட்ட பரிசு. சங்கருக்குப் பரவசம். சிறகுகள் முளைத்த பரவசம்.

கலர் பாக்ஸுக்குள் ஒரு புதிய உலகத்தையே சிருஷ்டித்தான். சின்ன கிராமம்; அழகான வீடுகள்; நிறைய மரங்கள்; சலசலக்கும் ஆறு; அதில் அமைதியே உருவாக, தூண்டில் போடும் ஒரு ஆள்; இரண்டு மாடுகள்; வானத்தில் சிறகடிக்கும் பறவைகள்; இவற்றின் பின்னணியில் சூரிய உதயம்– சங்கருக்கு மட்டுமே சொந்தமான இந்த வண்ண உலகம் பிரதிபலிக்க ஆரம்பித்

தது அவனுடைய பாடப்புத்தகங்களிலும் வீட்டுச் சுவர்களிலும்தான்.

"பள்ளிக்கூடத்தில் எப்போதும் என்னைச் சுற்றி மாணவர் கூட்டம் இருக்கும். வகுப்பறையின் அமைதியைக் கெடுத்த குற்றத்துக்காக எனக்கு ஆசிரியர் தந்த அடிகள், ஒரு ஜோடிப் பறவைகளை வரைந்து தரும்படி என்னை சதா நச்சரித்துக் கொண்டிருந்த என் இரண்டாம் வகுப்புத் தோழி





அனிதாவின் ஸ்நேகம்-இவைகள்தான் எனக்குள் இருந்த ஓவியனை எனக்குக் காட்டிக் கொடுத்தன!" என்கிற இருபத்தைந்து வயது சங்கர் இன்று 'மில்லிபோன்'என்கிற ஃபிரெஞ்ச் நாட்டு மல்டிநேஷனல் நிறுவனத்தின் முதன்மை ஓவியர்.


மின்பணியாளரான அப்பா தமக்குக் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் அரை டஜன் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தைக் காப்பாற்ற திணறியதைப் பார்த்து, தனது



ஓவியக் கல்லூரி கனவுகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு இருபது வயதில் விளம்பரப் பலகைகள் எழுதப் போய்விட்டார் சங்கர். அவரது கைவண்ணத்தில் உருவான ஓவியங்களில் இருந்த உயிரோட்டம் அந்த வட்டா



• சங்கர்



"இருந்தாலும் கமலா ரொம்ப திமிர் பிடிச்சவ.''
"எப்படி?''
"ஒரு வருஷமா அவ வீட்டு வேலைக்காரி சொன்ன வம்புச் செய்திகளைத் தொகுத்து, புத்தகமாக வெளியிட்டிருக்காளே!''
— வந்தவாசி பா. ஜெயக்குமார்

ரத்தில் இவரை விரைவிலேயே பிரபலமாக்கி விட, உள்ளூர் அரசியல்வாதிகள் மாநாடுகளில் அரசியல் தலைவர்களின் படங்களை வரைய இவரை வளைத்துப் போட்டிருக்கிறார்கள்.

"கோவையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டுக்கு வந்த சோனியா தன்னுடைய கட்-அவுட்டுகளைப் பார்த்துவிட்டு, 'அந்த ஓவியரை நான் பார்க்க வேண்டும், கூப்பிடுங்கள்!'' என்று சொல்லி அனுப்ப, "அந்த நேரத்தில் தஞ்சையில் இதயம் நல்லெண்ணெய் விளம்பரத்தைச் சுவரில் வரைந்து கொண்டிருந்தேன்!'' என்று சொல்லிச் சிரிக்கிறார் சங்கர்.

கும்பகோணத்தில் உள்ள ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளியின் விளம்பரப் பலகையில் இவர் வரைந்து கொண்டிருந்த அன்னை தெரஸா படத்தைப் பார்த்துவிட்டு, "தம்பி, நீ ஃபைன்-ஆர்ட்ஸ் படித்தது கும்பகோணத்திலா, சென்னையிலா?" என்று கேட்டிருக்கிறார் அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த கும்பகோணம் ஓவியக் கல்லூரி முதல்வர் கோபால்.

"அந்த பாக்கியம் எனக்கில்லை ஸார்!'' என்று சங்கர் சொல்ல, "முறையாகப் படித்தால் கலை இன்னும் சோபிக்கும்! அடுத்த ஆண்டு என்னுடைய கல்லூரியில் உனக்கு ஓர் இடம் உறுதி. அவசியம் வந்துவிடு!'' என்று அன்புக் கட்டளையிட, 'ஓவியக் கல்லூரி படிப்பு' என்ற கனவு நனவாகி விட்டது.

படிப்பு முடிந்ததும் பழையபடி விளம்பரப் பலகை எழுதும் பணியில் இவர் சுறுசுறுப்பாகிவிட திடீரென்று மில்லிடோன் நிறுவனத்திலிருந்து ஒரு கடிதம். 'உங்கள் ஓவியங்களின் மாதிரிகள் சிலவற்றைக் கண்டோம். எங்களது அனிமேஷன் நிறுவனத்தில் ஓவியர் பணியில் சேர அழைக்கிறோம். உடனே வர முடியாவிட்டாலும் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். வரவேற்க காத்திருப்போம்!'

சங்கரால் நம்பமுடியவில்லை. மாதம் பத்தாயிரம் ஊதியத்தில் ஒரு சர்வதேச நிறுவனத்திலிருந்து அழைப்பு என்றால் சும்மாவா?

"என்னுடைய படங்களை இவர்களுக்கு யார் அனுப்பி வைத்திருப்பார்கள்'' என்று குழம்பினேன். பிறகுதான் தெரியவந்தது, அது என்னுடைய ஓவியக் கல்லூரி நண்பனுடைய வேலை என்று!'' விசுவாசத்துடன் நினைவு கூர்கிறார்.

வேலைக்குப் போகும் நேரம் போக மீதி நேரத்தில் தலைவர்கள் மற்றும் கலைஞர்களின் படங்களை வரைந்து அவர்களுக்கே பரிசாக அனுப்புவதைப் பொழுதுபோக்காகச் செய்து வருகிறார்.

"இதுவரை மண்டேலா, கிளிண்டன், இளையராஜா, எம்.எஸ். என்று ஐம்பது பேருக்கு போர்ட்ரெய்ட் அனுப்பி வைத்திருக்கிறேன்.... அனுப்பிக் கொண்டே இருப்பேன். விரைவில் அவற்றின் அசல்களைக் கண்காட்சியாக வைக்க ஆசை!'' என்று நம்மிடம் சிலவற்றைக் காண்பிக்கிறார்.

தூரிகை எதுவுமின்றி கலர் பென்சில்களை மட்டுமே கொண்டு கண்களில் ஓடும் நுண்ணிய இரத்த நாளங்களையும் தலை முடிப் பிசிறுகளையும் கூட கலை உணர்வோடு தீட்டும் இவரது ஆற்றல் பிரமிக்க வைக்கிறது. ஒரு போர்ட்ரெயிட் ஓவியத்துக்கு இவர் அதிக பட்சம் எடுத்துக் கொள்ளும் அவகாசம் அறுபதே நிமிடங்கள் தானாம்!

"அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் வால்ட் டிஸ்னி ஸ்டுடியோவில் ஓவியனாகச் சேர்ந்து ஹாலிவுட்டின் மெகா -ப்ராஜெக்டுகளில் பணியாற்றுவதுதான் என் தற்போதைய இலட்சியம்!'' என்று ஆர்வத்துடன் சொல்லுகிறார் சங்கர்.

சந்திப்பு: ஜெயந்தன்
படம்: ஜரிஸ்



# மேடம் மேக்யவெல்லி..?

இத்தாலியில் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் மேக்யவெல்லி. ராஜதந்திரி; அரசியல் சிந்தனையாளர். 'பிரின்ஸ்' என்ற புத்தகத்தை அவர் எழுதியிருக்கிறார். ஒரு மன்னன் தனது ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள, என்னென்ன தகிடுதத்தங்கள், சூழ்ச்சிகள் செய்யலாம் என்பதை அதில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருக்கிறார். சர்வாதிகாரி முசோலினி தனது டாக்டரேட் ஆராய்ச்சிக்கு அந்த நூலைத்தான் எடுத்துக் கொண்டாராம். 'எமர்ஜென்ஸி பிரகடனப்படுத்தும் ஐடியா எப்படி வந்தது?'' என்று பி.பி.ஸி நிருபர் இந்திராகாந்தியைக் கேட்டபோது ''மேக்யவெல்லியின் 'பிரின்ஸ்' படித்ததன் விளைவுதான் அந்த முடிவு'' என்றாராம். சாணக்கியம் நிறைந்த கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திரம்' நூலுக்கு இணையாக 'பிரின்ஸ்' நூலைக் குறிப்பிடுபவர்களும் உண்டு. அப்படிப்பட்ட மேக்யவெல்லியின் 'பிரின்ஸ்' புத்தகத்தை ஜெயலலிதா படித்துள்ளாரா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவரது நடவடிக்கைகளும் செயல்திட்டங்களும் மேக்யவெல்லியை மிஞ்சி விடுவாரோ என்றுகூட வியக்க வைக்கின்றன.

எதிரியை வலுவிழக்கச் செய்ய அவரது நண்பருடன் அவருக்கு மனஸ்தாபம் ஏற்படுத்துவது ஒரு யுக்தி. அ.தி.மு.கவுடன் கொள்கையளவில் முரண்பட்ட பா.ம.க இன்று அதே கட்சியுடன் தேர்தல் கூட்டணிக்கு முன் வருவதுடன் ஜெ என்ன சொன்னாலும் ஏற்கத் தயார்! இந்தத் தலைமை விசுவாசம் தி.மு.க. கூட்டணியிலிருந்தபோது ஏன் ராமதாஸுக்கு இருக்கவில்லை? இப்படியொரு பகிரங்க பிரகடனத்தை ராமதாஸிடமிருந்து பெற ஜெ என்ன யுக்தி கையாண்டார்...? என்ற கேள்விகள் எழுகின்றன.

தேசிய ஜனநாயக முன்னணிக்கு ஆதரவை விலக்கி அ.தி.மு.கவுடன் பா.ம.க இணைந்த




போது அந்த நடவடிக்கை தமக்கே ஆச்சர் யமளித்ததாகக் கூறினார் ஜெ. ஆனால், அ.தி.மு.கவை மீண்டும் பா.ஜ.க அணியில் சேர்த்துவிட ராமதாஸ் பெரிதும் முயன்று தோற்றதாகவும் அதன் பின்னரே அவர் வில கியதாகவும் குட்டை உடைத்துக் கூறியுள்ளார் பி.ஜே.பி கட்சித் தொடர்பாளர் வெங்கையா நாயுடு.

'கருணாநிதி ஆட்சிக்கு வந்தாலே பணப் புழக்கம் இருக்காது; வியாபாரம் படுத்துவிடும்' என்கிற பிரசாரம் அ.தி.மு.க மேடைகளிலும் ஜெயா டீ.வியிலும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் செய்யப்பட்டு வருகிறது. பொரு ளாதாரம் அறிந்தவர்களிடையே இந்தப் பிரசாரம் எடுபடாது என்றாலும் பாமரர் களிடம் பரவலாக விலை போகிறது.

1999 பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் கூடுதலாக நண்பர்களைச் சேர்த்துக் கொண் டால்தான் சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. வுக்குச் சரியான போட்டியாக இருக்க முடியும் என்று உணர்ந்து, காய்களை நகர்த்தத் துவங்கி விட்டார் ஜெயலலிதா. மூன்றாவது அணி அமைத்து தோல்வியைச் சந்தித்த மூப்பனாரை உடல்நலம் சரியில்லாதபோது சென்று பார்த்து அரசியல் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண் டார். ஒருநாளும் இல்லாத திருநாளாக திடீ ரென்று சோவைச் சந்தித்தார்.

1996ல் அவரது ஆட்சியை வீட்டுக்கு அனுப்பியதில் மூப்பனாருக்குப் பெரும் பங்கு உண்டு என்பது ஒரு உறுத்தலான விஷயமாக



ஜெயலலிதாவுக்குத் தோன்றவில்லை. 'அரசி யலில் நிரந்தர நண்பர்களும் இல்லை; எதிரி களும் இல்லை' என்ற வசனம் மிகவும் உதவி யாக இருந்தது.

தி.மு.க.வோடு, பா.ஜ.க கூட்டு சேர்ந்திருப்ப தால், 'மதச்சார்பற்ற அணி' என்ற அழைப்பு உருவாக்க ஜெக்கு வசதியாக இருந்தது. இரண்டு கம்யூனிஸ்ட் இயக்கங்கள், முஸ்லிம் அமைப்புகள், த.மா.கா, காங்கிரஸ் என்று சகலரையும் அதில் வளைத்துப் போட்டு, கருணாநிதிக்கு எதிராக வலிமையான ஒரு அணி உருவாக்கியிருப்பதைப் போன்ற தோற்றத்தை உருவாக்கிக் கொண்டார். 1998ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில், அதே ஜெயலலிதாதான் பா.ஜ.க தமிழகத்தில் காலூன்றுவதற்கு வசதியாக தோழமை வைத்துக்கொண்டார் என்பது மதச்சார்பற்ற அணி தலைவர்களுக்கு 'மறந்து' போய்விட் டது! நெல்லிக்குப்பம் இடைத்தேர்தலில் த.மா.கா ஆதரவும் கிடைத்து நெருக்கம் அதிக மாயிற்று. எல்லோரையும் பெரியார் விழாவில் மேடையேற்றினார். மத்தியில் இரண்டு அமைச்சர்களை வைத்திருந்த பா.ம.க.வை, தேசிய ஜனநாயக முன்னணியை விட்டு வில கச் செய்து, தமது பக்கம் இழுத்துக் கொண்டது கிளைமேக்ஸ்!

'தென் மாவட்டங்களில் முக்குலத்தோர் ஆதரவு கார ணமாக ஏற்கெனவே செல்வாக் கோடு இருக்கிறோம்; பா.ம.க வந் ததன் காரணமாக இனி தமிழகத்தின் வட மாவட்டங் களிலும் 'ஸ்வீப்' செய்து விட லாம்' என்று அ.தி.மு.க. தலைவி மனக்கணக்குப் போட்டிருப்பது தெளிவு.

“ஜெயலலிதா அவர்கள் நினைப்பது போல பா.ம.க அவ் வளவு வலிமையானது அல்ல” என்கிறார் 'விடுதலைச் சிறுத்தை' திருமாவளவன்.

“1989, 1991 மற்றும் 1996 தேர்தல்களில் சிதம் பரம் நாடாளுமன்றத் தொகுதியில் தனியாக நின்று பா.ம.க பெற்ற வாக்குகள் அதிக பட்சம் ஒன்றே கால் லட்சம்தான். ஆனால் நாங்கள் 1999ல் பெற்ற வாக்குகள் இரண்டே கால் லட் சம். பா.ம.க செல்வாக்கு என்பது ஒரு மாயை



தான். அவர்களுக்குத் தமிழ்நாட்டில் இரண்டு முதல் ஐந்து சதவிகித வோட்டுகளுக்கு மேல் கிடையாது. மதவாதத்தை எதிர்க்கிறேன்', என்று ஒரு பக்கம் கூறிக்கொண்டு, மறு பக்கம் ஜாதீயம் பேசும் பா.ம.கவை ஆதரிக்கத் துவங்கியிருக்கிறார் ஜெயலலிதா. இதன்மூலம் தாழ்த்தப்பட்டவர்களின் ஆதரவை அவர் இழந்து விட்டார். 'தாழ்த்தப்பட்டவர்கள் அ.இ.அ.தி.மு.க.வின் வாக்கு வங்கிகள் என்பதும் தவறு. ஜெயலலிதாவோடு மீண்டும் கூட்டணி வைத்துக் கொள்வதை ஒழுக்கக் கேடான செயலுடன் ஒப்பிட்டவர்தான் ராமதாஸ். தேர்தலுக்குத் தேர்தல் 'அந்தர் பல்டி' அடிக்கும் ராமதாஸின் முகமூடி இந்தத் தேர்தலில் கிழிக்கப்படும்'' என்று ஆவேசப்படுகிறார் திருமாவளவன்.

அ.இ.அ.தி.மு.க வட்டாரத்தில் இப்போதே ஆட்சிக்கு வந்து விட்டதைப் போல ஒரே துள்ளலும், துடிப்பும்தான் கோலோச்சி நிற்கிறது. சில மூத்த ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகள் இப்போது அம்மாவுடன் நட்பைப் புதுப்பிக்கத் துவங்கி விட்டார்களாம்.

"தமிழக மக்களின் எண்ண ஓட்டத்தைப் புரிந்துக் கொள்ளாமல் பத்திரிகையுலகம் 'கருணாநிதியே சரணம்' என்ற கோஷத்தில் இறங்கியிருக்கிறது. அம்மா சிறிய தவறு செய்தாலும் மலை போல் பெரிது படுத்திய பத்திரிகைகள் இன்று கோபாலபுரத்தில் கைகட்டிச் சேவகம் செய்கின்றன. நடுநிலையாகச் செயல்பட வேண்டிய சபாநாயகர் தி.மு.க.வுக்கு ஆள் பிடிக்கும் புரோக்கராகச் செயல்படுவதைக் கண்டிக்க எந்தப் பத்திரிகைக்கும் திராணி இல்லை. தமிழகம் முழுவதும் கடுமையான அரசு எதிர்ப்பு அலை வீசிக் கொண்டிருக்கிறது. த.மா.கா எங்களுடன் வந்தால் தப்பிக்கலாம். இல்லையேல் அவர்களும் அந்த அலையில் கரை சேராமல் காணாமல் போய் விடுவார்கள். தி.மு.க.வின் கோட்டையான சென்னையேகூட இந்த முறை கலகலத்துப் போய்விடும்'' என்று முகம் நிறைய சிரிப்புடன் சொல்கிறார் அம்மாவுடன் நெருக்கத்தில் உள்ள முன்னாள் அ.இ.அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர்.

இப்படி கூட்டணிகளை அமைத்து ஒரு வெற்றித் தோற்றத்தை உருவாக்கிக் காட்டியிருக்கும் ஜெ தனது பிரசாரத்துக்கு ஜெயா தொலைக்காட்சியையும் முழுக்க முழுக்க பயன்படுத்தி வருகிறார். 1996ல் சன் தொலைக்காட்சி, வளர்ப்பு மகன் திருமணத்தை அடிக்கடி காட்டி அவருக்கு எதிரான கருத்தை மக்களிடம் உருவாக்கியதை 'வாக்காளர்கள்



மறக்கும் அளவுக்கு ஜெயா டி.வி செயல்படுகிறது. முதல் கட்டமாக ஸ்டாலின் மீது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு பற்றிய செய்தி வரும்போதெல்லாம் வேளச்சேரியில் உள்ள ஸ்டாலின் பங்களாவையும், அவர் மகன் துவங்கியுள்ள போலிங் சென்டரையும் அடிக்கடி ஜெயா தொலைக்காட்சியில் காட்டத் துவங்கியிருக்கிறார்கள்.

'இவர் மட்டும் என்ன யோக்கியமா?'' என்ற கருத்தை மக்களிடம் உருவாக்கும் முயற்சி இது. ஆனால் ஸ்டாலின் தாமாகவே கோர்ட்டுக்கு வந்து தமது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் என்றும் தமது சொத்துக்கள் பற்றி நீதிமன்றம் ஆய்வுக்கு உத்தரவிட்டால் அதை வரவேற்போம் என்றும் கூறியதற்கு ஜெ டி.வி முக்கியத்துவம் தராது.

ஏற்கெனவே மாநகராட்சி த.மா.கா. தலைவர் வெற்றிவேல் மூலம், 'சென்னையில் கட்டப்பட்டுள்ள பாலங்களில் ஊழல் நடந்துள்ளது' என்று தொடர்ச்சியாக பலநாள் நிகழ்ச்சிகளை நடத்தியது ஜெயா தொலைக்காட்சி. தி.மு.கவின் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் பற்றியும் படக்காட்சிகள் எடுத்து வைத்திருக்கிறார்களாம். தேர்தல் நேரத்தில் அதிர்ச்சியடைய வைக்கும் விதத்தில் அவை காட்டப்படும் என்று சொல்கிறார்கள்.

சன் தொலைக்காட்சியின் நடுநிலைமையைக் கண்டு தி.மு.க தொண்டர்களே நொந்து கட்சித் தலைமையிடம் புகார் செய்ததாகவும் கட்சித் தலைமை, மீடியா சுதந்தரத்தில் தலையிட மறுத்ததாகவும் ஒரு பக்கம் செய்தி வர, இன்னொரு பக்கம் ஜெயா டி.வியில் நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி திட்டமிட்டு தி.மு.க எதிர்ப்புப் பிரசாரம் நடக்கிறது.



இது ஒரு பக்கம் இருக்க, மதச்சார்பற்ற அணி என்று சொல்வதாலும், வீரமணியின் தோழமையில் இருப்பதாலும் பா.ஜ.க தன்னை இந்துக்களின் விரோதியாக சித்திரித்துக் காட்டும் ஆபத்து இருப்பதையும் அம்மா உணர்ந்திருக்கிறாராம். எனவேதான் கோயில், கோயிலாகப் படையெடுக்கிறாராம்.

பக்தியும் பாரம்பர்ய கோட்பாடுகளும் உள்ளதாகக் காட்டிக் கொள்வதன் மூலம் வெகுஜன அனுதாபமும் ஆதரவும் பெறலாம் என்று கணக்கிட்டுச் செயல்படுவதாகவே தோன்றுகிறது. அவரது ஒற்றை எழுத்து ஆலோசகர் பிரசார யுக்தியை வகுக்கிறாராம். தேர்தல் பிரசாரத்தில் கட் அவுட், மற்றும் ஆடம்பரம் அதிகம் இருக்காதாம்.

'தம் மீது ஊழல் குற்றச்சாட்டு சொன்னவர்களை வைத்தே தமக்கு நற்சான்றிதழ் தருமாறு செய்துவிட்டால் மக்கள் நம்பிக்கை

# "இதுக்கெல்லாம் மக்கள்

**ஜெ-சசியின் பக்தி யாத்திரைகள், பிரார்த்தனைகள் குறித்து பொதுமக்கள் கருத்து:**

**எஸ். அழகிரிசாமி (எலக்ட்ரீஷியன்) :**

சாமி கும்பிட்டு, பூஜை நடத்தி ஆட்சியைப் பிடிக்க முடியும்னா நான்கூட செய்வேன். ஆனால் அம்மாவோட கோயில் விஜயமெல்லாம் ஒரு சாராருடைய கவனத்தைக் கவருவதற்குத்தான். 'கோயில் கோயிலா போறாங்களே... பாவம்'ங்கற பரிதாபம் ஏற்படுத்தறதுக்காகத்தான். இதுல வேறென்ன இருக்க முடியும்?

**ஜான் ஜெயப்பிரகாஷ் (என்ஜினியர்):**

அவங்க சாமியை நம்பலாம். ஆனால் வாக்களிக்கப் போறது மக்கள்தானே... சுருக்கமா சொன்னா அவங்க மக்களைப் பார்த்துக் கும்பிடறதுதான் நல்லது.

**ஆம்பல் அரங்கசாமி (அச்சகத் தொழிலாளி):**

ஜெயலலிதாவுக்கு பக்தி இருக்கா இல்லையான்னு தெரியாது. ஆனால் தேர்தல் நேரத்துல மட்டும் இப்படிக் கோயில் கோயிலா போறது வேற எதை எதிர்பார்த்து இருக்க முடியும்? தேர்தலை மனசுல வச்சுதான். அப்படியாவது ஆண்டவன் நமக்குக் கைகொடுத்துட மாட்டானான்னுதான். ஆனா கண்டிப்பா மக்கள் இதுக்கெல்லாம் மயங்க மாட்டாங்க.

**ஜீவா:**

ஐந்து வருஷ ஆட்சியில சொகுசா வாழ்ந்தவங்க

# மயங்க மாட்டாங்க!"

அந்த ருசியில எப்படியாவது மீண்டும் ஆட்சியைப் பிடிச்சட மாட்டோமான்னு அலையறாங்க. இவங்க நல்லெண்ணத்துலதான் கோயிலுக்குப் போறாங்கன்றதை எப்படி நம்பறது சொல்லுங்க.

**திருமதி லலிதா ஸ்ரீராம் (குடும்பத் தலைவி):**

தெய்வ வழிபாடு என்பது பெண்களுக்குள்ள இயல்பான குணம். விசேஷ காலங்களில் விரதமிருந்து கோவிலுக்குப் போகும் வழக்கமும் புதிது இல்லை. ஜெயலலிதா, சசிகலா கோவில்களுக்கு விஜயம் செய்வதை ஏன் யதார்த்தமாக எடுத்துக் கொள்ளக் கூடாது?

**திருமதி ரஜினி:**

பக்தியுடன் கோவிலுக்குப் போவதே பெண்களுக்குப் பணிவைத் தருகிறது. பெண்கள் சுய நலமாக, தனக்கு மட்டும் பிரார்த்தனை செய்வதைவிட, மற்றவர்களுக்காக, குடும்பத்திற்காக செய்யும் பிரார்த்தனைகளே அதிகம்! செல்வி ஜெயலலிதா கோவில்களுக்குப் போவதைப் பெரிதாக விளம்பரப்படுத்தி, அதற்கு அரசியல் முத்திரை இடுவது எதற்காக? சோனியா காந்தி கூட கும்பமேளாவில் புனித நீராடவில்லையா...?

— அப்பு - லட்சுமி

படங்கள்: ஜரிஸ்



• ஜான்



• அரங்கநாதன்



• லலிதா



• அழகிரி



• ரஜினி



• ஜீவா

யைச் சுலபத்தில் பெறலாம்' என்பது ஒரு கணக்கு. எனவே த.மா.கா தமது கூட்டணியில் இருந்தால், மக்களிடம் நல்ல மதிப்பு, மரியாதை கிடைக்கும் என்று திடமாக நம்புகிறார் ஜெ.

"தி.மு.க ஆட்சியில் சரியான ஆதாயங்கள் கிடைக்காததால் எங்கள் கட்சி இடைநிலைப் பிரமுகர்களும் கோபத்தில் இருக்கிறார்கள். யாரை விரட்டினோமோ அவர்களுடனேயே மீண்டும் ஆட்சி அமைக்க அணி சேர்வது மிகவும் துரதிர்ஷ்டமான ஒன்றுதான். 'நாட்டுக்கு நல்லது எது' என்று பார்த்துச் செயல்படும் பொறுப்பு எங்கள் தலைவருக்கு இருக்கிறது" என்கிறார் த.மா.கா.வின் மூத்த பிரமுகர் ஒருவர்.

இந்த 'மேக்யவெல்லியிஸத்தை' ஜெ.வைவிட புத்திசாலித்தனமாகச் செயல்படுத்துபவர் கலைஞர்தான் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். 'தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த பா.ம.கவைத் தானாக ஓட வைத்ததும் ஒரு யுக்திதானே?' என்கிறார்கள். கலைஞரின் சாணக்கியத்தால், தமிழக அரசியலில் ஏற்கெனவே பல கட்சிகள் பிளவுபட்டு இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்கள். "எங்களுக்கெதிராக மகாக் கூட்டணி அமைக்கும் ஜெயலலிதாவின் நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு நாங்கள் சும்மா இருக்க முடியுமா? ஏற்கெனவே 'புதிய தமிழகம்' கட்சி எங்கள் அணியில் இணைந்தாகி விட்டது. தலித் இனத்துக்கு எதிரானவர் ஜெயலலிதா என்று காட்டும் முயற்சியில் இறங்குவோம். த.மா.கா. அ.தி.மு.க கூட்டணிக்குச் சென்றால், அது பிளவுபடும் வாய்ப்பு கூட இருக்கிறது" என்கிறார் தி.மு.க பிரமுகர் ஒருவர்.

இப்படி இரண்டு அணிகளிலும் யுக்திகளுக்கும், செயல் திட்டங்களுக்கும் பஞ்சமில்லை.

"ஐந்து வருட காலமாக அரசு கஜானாவைக் கொள்ளையடித்து, மேக்யவெல்லியின் பக்தர்களான ஹிட்லர், முசோலினி போல பாசிஸ வெறியாட்டம் ஆடிய ஜெயலலிதா மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வர முடியாது" என்று உறுதியாகச் சொல்கிறார் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ.

வோட்டுப் பெட்டிகளைத் திறந்து எண்ணும்போது தானே உண்மை தெரிய வரும்!

— சஞ்சயன்

படங்கள்: ராஜன்

# அவர்களும் 500 ரூபாய் நோட்டும்!

குளித்துக் கொண்டிருந்த சபேசனுக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது.

முதல் நாள் ஆபீஸிலிருந்து திரும்பும் போது முருகேசு ஐந்நூறு ரூபாயை ஒரே நோட்டாகக் கொடுத்தான். எப்பொழுதோ அவனுக்கு சபேசன் கைமாற்றாகக் கொடுத்த பணம். திரும்பி வராது என சபேசன் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான். இப்போது அவனாகத் தேடி வந்து கொடுத்து விட்டுப் போனான்.

பணத்தை வாங்கி, சட்டையின் உள்புற பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்தவன் அப்படியே மறந்தும் போனான்.

வீட்டிற்கு வந்தவன் சட்டையை அதற்குரிய கொக்கியில் மாட்டினான். ஊரிலிருந்து மாமா வந்திருந்தார். அவன் வருவதற்காகவே காத்திருந்தார். அவருடன் பேசப்போனவனுக்குச் சட்டை உள்பையில் வைத்திருந்த பணத்தைப் பத்திரப்படுத்த வேண்டும் எனத் தோன்றவில்லை.

இப்போது எல்லாம் அவன் உடைகளை தினம் தோய்க்க வேண்டியிருந்தது. தொழிற்சாலையை ஒட்டிய அலுவலகம் ஆதலால் சட்டை, பாண்டை ஒரு நாளைக்கு மேல் அணிய முடியாது.

அவன் மனைவி சிவகாமி தான் தோய்க்கிறாள். காலை ஐந்து மணிக்கெல்லாம வாஷிங்மெஷினில் போட்டு விடுவாள். ஆறு மணிக்கு உலர்த்த துணிகள் தயாராகிவிடும். அப்படியானால் அவன் சட்டை?

அவசர அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு கொல்லைப்புறம் எட்டிப் பார்த்தான். அவன் நினைத்தபடி அவன் சட்டை தோய்க்கப்பட்டு காற்றில் இலேசாக ஆடிக் கொண்டிருந்தது.

கல்லில் ஓங்கி ஓங்கி அடித்



துத் தோய்த்திருந்தால் நோட்டு கூழாகிப் போயிருக்கும். வாஷிங்மெஷின் வருடித்தான் கொடுத்திருக்கும். நோட்டு ஊறிப் போயிருக்குமே ஒழிய சேதம் ஆகி இருக்காது.

ஈரத்தலையைக் கூடத் துவட்டாமல் சட்டைப் பைகளைத் துழாவிப் பார்த்தான்.

நோட்டு இல்லை.

அங்கிருந்தே குரல் கொடுக்க யத்தனித்த சபேசன் அடக்கிக் கொண்டான். கூட்டுக் குடும்பம். அப்பா, அம்மா, இரு தம்பிகள், தங்கை.. கத்திப் பேசுவது பக்கத்து வீடுகளுக்குக் கேட்கும்.

சிவகாமியைத் தேடிக் கொண்டு சமையலறைக்குப் போனான். அவள் அவனுக்கு மதியச் சாப்பாடு எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"நல்ல வேளை! நீ பார்த்து எடுத்து வைத்திருக்கிறாய்!" என்று சபேசன் அவளைப் பாராட்டப் போக..


"எதை?" என கேட்டாள் சிவகாமி.

"என் சட்டைப் பையில் வைத்திருந்த ஐந்நூறு ரூபாய் நோட்டைத்தான் சொல்கிறேன்."

"நான் சட்டையைத் தோய்க்க எடுத்த போது அதில் எதுவுமே இல்லையே?" என்றாள் அவள் பதற்றத்துடன்.

"சும்மா விளையாடாதே... அப்படி எல்லாம் பணத்தை அஜாக்கிரதையாக வைக்கக் கூடாது என்று எனக்கும் தெரியும். ஏதோ மறதியில்..."

"விளையாட்டும் இல்லை, ஒரு மண்ணும் இல்லை. சட்டை, பாண்ட் பாக்கெட்டை



# அன்னம்

யெல்லாம் நன்றாகத் திருப்பிப் பார்க்காமல் நான் தோய்க்கப் போட மாட்டேன். எனக்கு அந்தப் பழக்கம் சின்ன வயதிலிருந்து உண்டு. உங்க சட்டைப் பையில் நைந்து போன ஒரு 'பஸ் டிக்கெட்டைத் தவிர வேறு ஏதும் இல்லை."

"ஆமாம், இருந்திருக்கும். நேற்று நான் எலெக்ட்ரிக்

ரயிலில் வரவில்லை. 'வா' என்று அழைப்பது போல் பஸ் பக்கத்தில் வந்தது. சட்டென ஏறிவிட்டேன், அப்படியானால் அந்த நோட்டு?''

''சட்டைப் பையில் தான் வைத்தீர்களா?''

''நிச்சயமாக, பஸ் பக்கம் வரும்போது முருகேசு கையில் நோட்டைக் கொடுத்தான். கைப்பையைத் திறந்து வைக்க நேரமில்லை. சட்டையின் உள்பாக்கெட்டில் வைத்துப் பத்திரமாக இருக்கிறதா எனத் தடவிக் கூடப் பார்த்தேன்.''

'யார் எடுத்திருப்பார்கள்?'- சிவகாமியின் மனம் கேட்டது.

எப்படிக் கேட்பது... கூட்டுக் குடும்பம் தான். ஆனால் சீட்டுக்கட்டு வீடு மாதிரி... கொஞ்சம் அசைத்தாலும் போச்சு!

சபேசன் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தான். சிவகாமி பல மடங்கு தவித்தாள். ஒன்றா, பத்தா? சுளையாக ஐந்நூறு ரூபாய்.

சமையலறைக்குள் வந்தாள் அவன் மாமியார்.

''என்ன காணோம்?'' என விசாரித்தாள்.

''சட்டைப் பையில் ஐந்நூறு ரூபாய் வைத்திருந்தாராம். அது எங்கே போச்சு என்று தெரியவில்லை'' என மெதுவாகச் சொன்னாள்.

மாமியாருக்கு எப்போதுமே பெரிய குரல். ''என்னங்க... சபேசன் சட்டைப் பையில் ஐந்நூறு ரூபாய் வைத்திருந்தானாம். பார்த்தீங்களா...?''

தினசரிகளைப் புரட்டிக் கொண்டிருந்த பெரியவர் அதை விரல்களுக்கு இடையே இடுக்கிக் கொண்டே வந்தார்.

''எங்கே வைத்தாய்? நன்றாக ஞாபகம் இருக்கிறதா? வழியில் யாருக்காவது கொடுத்தாயா? நீயே பத்திரமாக எங்கேயாவது எடுத்து வைத்தாயோ என்னவோ'' - பல குறுக்குக் கேள்விகளைக் கேட்டு விட்டு அவர் 'நான் பார்க்கவில்லை' என்றார்.

யார்தான் எடுத்திருப்பார்கள்?

சிவகாமி சட்டையை எடுக்கப் போன சமயம் அது ஹாங்கரில் இல்லை. கீழே விழுந்து கிடந்தது.

பெரிய மைத்துனர் ஏதோ சீட்டுப் பணம் கட்ட ஐந்நூறு ரூபாய் குறைகிறது எனத் தன் அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தது ஞாபகம் வந்தது.

அவர் தான் எடுத்திருப்பார், சொல்ல வேண்டும் என நினைத்து மறந்திருப்பார்.

மாலையில் அவர் வந்தபிறகு கேட்க வேண்டும். இதுவரை அப்படி அவர் பணம் எடுத்ததில்லையே... ஒருகால் எடுத்திருக்காவிட்டால்... ஏற்கெனவே மனைவியைப் பறிகொடுத்த துக்கத்திலிருந்து மீளவில்லை. தனியாகப் போகிறவரை இழுத்துப் பிடித்து வைத்து நிறுத்தியிருக்கிறார்கள். இதுதான் சாக்கு எனப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விடுவார், சிவகாமிக்கு அவரைக் குற்றம் சாட்ட மனம் ஒப்பவில்லை. சினிமாவிற்குப் போகும் போது கூட தன் டிக்கெட்டுக்குப் பணம் தனியாகத் தரும் சுபாவம்.

ஒரு வேளை சின்னவன் எடுத்திருப்பானோ? ஐந்து, பத்து என எடுத்திருக்கிறான். ஆனால் சொல்லிவிட்டு தானே போவான். அவனுடைய

''இந்தாங்க, அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்! உங்களுக்குச் சம்பளம் செக்கா வேணுமா? கேஷா வேணுமா?''

''அட்வான்ஸா வேணும் சார்!''

**- குமார்ஜி, மானாமதுரை.**





"ஏன் அந்த எழுத்தாளர் டென்ஷனா இருக்காரு?"

" 'காபி குடிச்சுட்டுதான் கதை எழுதுவேன்'னு பேட்டி கொடுத்ததை 'காபி அடிச்சுதான் கதை எழுதுவேன்'னு போட்டுட்டாங்களாம்!"

- பா. ஜெயக்குமார், வந்தவாசி

விருப்பத்துக்குரிய நடிகர் நடித்த படம் நூறு நாளைத் தாண்டியிருந்தது. அதற்காக நண்பர்களுக்கு விருந்து கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். தரையில் கிடந்த சட்டையிலிருந்து அவன்தான் எடுத்திருக்க வேண்டும்.

அப்படி ஒரு வார்த்தை சொல்லி விட்டால் மாமியார் உண்டு இல்லை எனப் பண்ணி விடுவாள். கடைசிப் பிள்ளை அத்தனை செல்லம். 'மூதேவி, விடியா மூஞ்சி' என அவள் மட்டும்தான் திட்டலாம். மாமனாருக்குக் கூட அந்த உரிமை இல்லை.

வீட்டுக்குத் தெரியாமல் என்ன பழக்கமோ? எத்தனை டீ.வி. ஸீரியல்களில் காட்டுகிறார்கள். சொல்ல முடியுமா? புழுங்கினாள் சிவகாமி.

மாமியார்? நினைப்பதே பாவம்! கையில் ஒரு பைசா கிடையாது. வாசலில் அரை கிலோ கத்தரிக்காய் வாங்கிவிட்டு சில்லறை கொண்டு தர, நாலு வீடு கேட்கும்படி கணவரைக் கூப்பிடுவாள்.

**மா**மியார் துடைப்பத்தை எடுத்து பீரோ, கட்டில் அடியில் பார்த்தாள். மாமனாரும் அலமாரி அலமாரியாகத் தேடினார்.

காலேஜுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த தங்கை "அண்ணா, நான் அந்தப் பணத்தைப் பார்க்கவில்லை" என்றாள்– யாரோ தன்னைச் சந்தேகிப்பது போல.

"உன்னை யார் என்ன சொன்னா? உனக்கு வீடு, காலேஜ், டீ.வி.– மூன்று தானே தெரியும்!" என்றான் சபேசன் ஆற்றாமையுடன்.

சபேசன் விரக்தியுடன் ஆபீஸ் புறப்பட்டான்.

எஞ்சி நின்றவள் வேலைக்காரி சின்னம்மாதான்!

அவளுக்கு எப்போதும் முடைதான். அவள் வாங்கி வைத்திருக்கும் பணக் கணக்கு ஒரு டயரியில் சிவகாமி ஞாபகமாகக் குறித்து வைத்திருப்பாள். அவள் வேலையை விட்டு நின்றால் இரண்டாயிரம் ரூபாய் நஷ்டம்.

காலையில் அந்த அறையைப் பெருக்கியவள்– கொஞ்சம் வெளியே போய்விட்டு வந்தாள். சாதாரணமாக அவள் செய்வது தான். இன்று அதற்குப் புது அர்த்தம் தெரிந்தது.

நிச்சயமாக அவள்தான் எடுத்திருக்க வேண்டும்.

மாமியாருக்கு எதுவுமே நேரடித் தாக்குதல்தான்.

புழக்கடையில் பாத்திரம் துலக்கிக் கொண்டிருந்த சின்னம்மா முன் போய் உட்கார்ந்தாள்– தோய்க்கிற கல்லின் மேல்.

"பெரிய தம்பி சட்டைப் பையிலிருந்து எடுத்த பணம் எங்கே?" எனக் கேட்டாள்.

சின்னம்மா இதற்கெல்லாம் அஞ்சுபவள் இல்லை. பணங்காட்டுநரி.

"இந்தா அம்மே... யார் அத்தை எடுத்தது? வூட்டுலே ஒரு துடப்பக் குச்சி காணாமல் போனாலும் வேலைக்காரி மேலே பழியைப் போட்டுடுவீங்களே."

"பின்னே அது எப்படிப் போகும். இறக்கை முளைச்சா?"

"இறக்கை முளைச்சப் போச்சோ... ஏரோப்ளேன்லே போச்சோ, எனக்குத்

தெரியாது. நான் எடுக்கலே" என்றாள் சின்னம்மா.

இனிமேல் பேசினால் தெருவே திரண்டு விடும். சின்னம்மா தொண்டையில் இரண்டு ஒலிபெருக்கிகளை இறைவன் வைத்திருந்தான்.

சிவகாமி தன் மாமியாரைச் சமாதானப் படுத்தி உள்ளே அழைத்து போனாள்.

ஆபீஸில் சபேசனுக்கு வேலை ஓடவில்லை. அண்ணனையோ தம்பியையோ விசாரிக்க விரும்பவில்லை. வீண் ரசாபாசம்தான். பஸ்ஸில் அமர்ந்த பிறகுதான் அந்த ரூபாய் நோட்டைப் பையில் பத்திரப்படுத்தியதாகவும் அது தனக்கு மறந்து விட்டது என்றும் சொல்லி விடலாம் எனத் தீர்மானித்தான். அப்பாவும் அம்மாவும் திட்டுவார்கள். எத்தனையோ சிக்கல்கள் ஏற்படாமல் தவிர்க்க அதுதான் வழி!

மாடியில் படுத்துக் கொண்டிருந்த சிவகாமியும் யோசித்தாள்! மாலையில் பெரிய மைத்துனர், சின்னவர் இவர்களைக் கேட்டு பெரிய பிரளயம் வருவதை அவள் விரும்பவில்லை.

மாமனார்– மாமியார் தூங்குவதை வசதிப்படுத்திக் கொண்டு கணவரை டெலிபோனில் அழைத்தாள்.

"பணம் கிடைச்சுடுச்சுங்க. அலமாரியில் இரண்டு காஸெட் நடுவே செருகி வச்சிருந்தீங்க.. நான் பத்திரமா எடுத்து வச்சிருக்கேன்" என்றாள்.

பிறந்தகம் போனபோது அவள் அப்பா கொடுத்த ஐந்நூறு ரூபாய் நோட்டு கைவசம் இருந்த தைரியம்!

அவள் மாமியாரும் மாமனாரும் குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள்.

'பெரியவனுக்கு முன்கோபம்; சின்னவனுக்கு வாய்த் துடுக்கு. ஏதாவது தகராறு, கைகலப்பு என்று ஆகிவிட்டால்...

மருமகள் பால் வாங்கப் போனபோது பிள்ளையை டெலிபோனில் கூப்பிட்டார் சபேசனின் அப்பா. "உன் பணம் கிடைச்சிடுச்சு. புஸ்தக அலமாரியிலே பேப்பருக்கு அடியிலே வச்சுட்டு மறந்துட்டியே முட்டாள்!" என்றார்.

சபேசனுக்குப் புரிந்தது. அவனைப் போல் எல்லோரும் வீட்டில் நாடகம் ஆடுகிறார்கள்.

எப்படியோ பிரச்னை தீர்ந்தால் சரி...!

ஆனால் உண்மையில் அந்தப் பணம் எங்கே?

அன்றிரவு, கிட்டத்தட்ட மணி பத்து. ஊரிலிருந்து மாமாதான் பேசினார்.

"என்னடா சபேசா! நேற்று ராத்திரி புறப்பட்டு வரப்போ உன் சட்டையை மாற்றிப் போட்டுக் கொண்டு வந்து விட்டேன். உன் மாமி தான் அதைச் சலவைக்குப் போட்டா. அப்போதான் உன் பாக்கெட்டில் ஒரு ஐந்நூறு ரூபாய் இருந்ததைப் பார்த்தாள். இரண்டு வருஷம் முன்னால தீபாவளிக்கு ஒரே மாடலில் நாம் சட்டை எடுத்துக் கொண்டோமே... அதனால் ஏற்பட்ட குழப்பம்" எனச் சிரித்தார்.

"ரொம்ப தாங்க்ஸ் மாமா" என்றான் சபேசன்.

"என்ன சொன்னார் மாமா...?"

ஐந்நூறு ரூபாய் கேள்வி மூன்றால் பெருக்கப்பட்டு அவன் முன்பு நின்றது! ○



## சிம்லா சூப்பர் ஸ்டார்!

" 'மிஷன் காஷ்மீர்' இந்திப் படத்துக்காக ஹ்ரித்திக் ரோஷனும் நானும் சிம்லா போயிருந்தோம். ஹ்ரித்திக், பதானி சூட் அணிந்து, காஷ்மீரத்துக் காஸ்ட்யூமில் இருந்ததால், அவரை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை. யாரோ உள்ளூர் ஆசாமி என்று நினைத்து விட்டார்கள். அருகிலிருந்த எனக்கு தடபுடல் உபசாரம்! என்னைச் சூழ்ந்து கொண்டு, 'ஆட்டோகிராப்' வாங்கிக் கொண்டார்கள். பாவம்! ஹ்ரித்திக்கை யாரும் கண்டுக்கவேயில்லை. எனக்கு ஒரே குஷி... உலக மகா சூப்பர் ஸ்டார் போல செம பந்தா செய்து வெறுப்பேத்தினேன். ஹ்ரித்திக் நொந்து போயிட்டார்" என்று கன்னக் குழியில் ரோஜா சிவக்க சிரிக்கிறார் ப்ரீத்தி ஜிந்தா.

- அபி

# அந்த 7 நாட்கள்!

**கல்கி– ரமணி Vs ரமணி இணைந்து நடத்திய 'தம்பதி தமாஷ்' போட்டியில் ரூ. 2000 மதிப்புள்ள பட்டுப் புடைவையை ஆறுதல் பரிசாகப் பெறும் கட்டுரை.**



'கல்கி'யின் உணவு ஸ்பெஷலில் வெளியான 'எடைக்கு விடை கொடுங்கள்' என்பதை 'எடைக்கு வடை கொடுங்கள்' என்று தப்பாகப் படித்து ஆனந்தப்படும் அப்புசாமி மாதிரி, மகிழ்ந்து கொண்டிருந்த என்னை, உணவுக் கட்டுப்பாட்டு முறையை, முறையாக கடைபிடிக்கச் சொல்லி என் மனைவி சுந்தரி வற்புறுத்தியபோது 'ஒருவாரம் மட்டும்' என்று சம்மதித்தேன்.

ஒரு வார உணவு முறையைத் திட்டமிட்டு அந்த ஏழு நாட்களுக்குத் தேவையான பழங்கள், காய்கறிகள் வாங்கி வந்தோம். நாகேஷ், ஒரு சினிமாவில் திடீர் பணக்காரனாகி, எல்லா பழங்களையும் பந்தாவாக வாங்கும் காட்சி தான் ஞாபகத்திற்கு வந்தது.

முதல் நாள் 'பழங்கள் தினம்' கொண்டாடினோம். ஏனென்றால் அன்று பழம் மட்டும்தான் உணவு- அத்துடன் பத்து தம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டியது கட்டாயம்.

இரண்டாவது நாள் காய்கறிகளை வேக வைத்துச் சாப்பிட்டோம்.

மூன்றாவது நாள் பழங்களுடன், காய்கறி சேர்ந்த ஆகாரம். இதற்குள் திருவிளையாடலில் 'பாட்டும் நானே' பாடல் காட்சியில், எல்லாம் அசையாமல் இருக்குமே, அந்த மாதிரி வீடு ஆகிவிட்டது. பால் பாக்கெட்டுகள்

ஃப்ரிஜ்ஜில் அப்படியே கிடந்தன. குக்கர் சப்தம் இல்லை. வேலைக்காரிக்குத் தேய்க்க பாத்திரம் இல்லை. நாங்கள் டயட்டில் இருப்பது தெரிந்து அக்கம் பக்கத்தில் விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். இப்படியாக, நான்காம் நாள் வாழைப்பழம், பாலுடன் உண்டோம். ஐந்தாம் நாள் ஒரு கிண்ணம் சாதம், தக்காளி பழத்துடன் சாப்பிட, அமிர்தம் போங்கள்! ஆறாம் நாள் காய்கறிகளுடன் ஒரு கிண்ணம் சோறு. ஏழாம் நாள் சாதம், காய்கறிகளுடன் பழச்சாறும் சாப்பிட்டு உண்ணும் விரதத்தை முடித்துக் கொண்டோம்-

எப்படி இந்த டயட்பிளானைக் கடைபிடிக்கப் போகிறோம் என்று மலைத்திருந்த எங்களுக்கு, ஒரு வாரம் ஓடியதே தெரியவில்லை. முடிவில் நல்ல பலன் கிடைத்தது என்னவோ உண்மை. காபிக்கு அடிமையான நாங்கள் பால் இல்லாமல் காபி சாப்பிட பட்டபாடு, சாதம் எப்படா சாப்பிடலாம் என்று தினமும் அட்டவணையைப் பார்த்து ஏங்கிய ஏக்கம், டீவியில் சாப்பாட்டு ஐட்டங்கள் பற்றிய விளம்பரங்களைப் பார்த்து விட்ட பெருமூச்சு போன்றவை விநோதமான அனுபவங்கள்- இதையெல்லாம் நினைக்கும் போது சிரிப்பு வந்தாலும், எங்கள் அனுபவம் மட்டும் நினைவில் ஸாரி, நாக்கில் நிற்கும்- அன்றும், இன்றும், என்றும்!

— நா. பட்டாபிராமன்

## குரோர்பதிதான் காரணமா?

உலகப் புகழ்பெற்ற கலைக்களஞ்சிய மான என்சைக்கிளோபீடியா பிரிட்டானிகா நிறுவனத்தினரிடமிருந்து, ''பிரிட்டானிகா க்விஸ் மாஸ்டர்' என்று பதினாறு வால்யூம் கொண்ட பொது அறிவு வினாவிடை புத்தகங்கள் வெளிவரப் போகின்றன. ஆங்கிலம் மட்டுமின்றி தமிழ், தெலுங்கு, கன்னடம், குஜ்ராத்தி, இந்தி, உருது என்று இந்திய மொழிகளிலும் இவை வெளிவருகின்றன என்பதுதான் விசேஷம்!

என்சைக்கிளோபீடியா பிரிட்டானிகாவின் ஆசிரியர் டேல் ஹோய்பர்க் சென்னை வந்திருந்தார். அவரிடம் டெலிவிஷனில் வரும் குரோர்பதி நிகழ்ச்சிகள்தான் இந்தப் புத்தகத்தை வெளியிட்டதற்கு காரணமா? என்று கேட்டபோது அவரது பதில்:

''இல்லை... முப்பதாயிரம் விலை கொண்ட பிரிட்டானிகா கலைக் களஞ்சியம் இங்கே ஆண்டுக்கு ஆயிரம் பிரதிகள்தான் விற்பனை யாகின்றன. மாணவர்களுக்கென்று தயாரிக்கப் பட்ட பிரத்யேக பிரதிகளின் விற்பனை கூட மந்தமாகத்தான் உள்ளது. எனவே அதிலுள்ள பொது அறிவு விஷயங்கள், இன்னும் பரவலாகச் சென்றடையவேண்டும் என்ற அடிப்படையில் யோசித்ததன் விளைவுதான் இந்த குவிஸ் புத்தகங்கள்!'' என்றார்.

– மௌலி



• டேல் ஹோய்பர்க்



# “திட்டமிட்டுச் சதி செய்தார்கள்!”

"விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றிருக்கும் பி.டி. உஷா, தற்போது சுயசரிதையை எழுதிக் கொண்டிருக்கிறார். அது விரைவில் புத்தகமாக வெளிவர இருக்கிறது. 'சத்தியசோதனை' என்ற அந்த நூல் வெளிவந்தால், இந்திய விளையாட்டுத் துறையின் மானம் கப்பலேறும் என்கிறார்கள். காரணம், கோபமும், வலியும் கொப்பளிக்க உஷா பல விஷயங்களைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறாராம்.

"என்னைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள். எல்லா மொழிகளிலும் கவர்ஸ்டோரிகளும், கட்டுரைகளும் வெளியாகியுள்ளன. ஆனால் அதெல்லாம் உஷாவின் உண்மையான கதை அல்ல.

"நான் பிறந்த ஊரின் பெயரைக் கூட தவறாக எழுதினார்கள். நான் விளையாட்டுத் துறையில் சந்தித்த சவால்களை, பெண்ணாகப்பட்ட துன்பங்களை யாரும் எழுதவில்லை. அதை நான் எழுதியிருக்கிறேன்" என்று முன்னுரை தருகிறார்.

"என்னை அதிர்ஷ்டசாலி என்று வர்ணிப்பார்கள். உண்மையில் நான் ரொம்ப துரதிருஷ்டசாலி. என் வளர்ச்சியை விரும்பாதவர்களுடனேயே நான் வாழ வேண்டியதாயிற்று. என் திறமையை ஊக்குவிக்க வேண்டியவர்களே என்னை மிதித்து அழுத்தினார்கள்" என்று உணர்ச்சிவசப்பட்டு பல இடங்களில் அழுதிருக்கிறார் உஷா.

"1985ம் வருடம் லாஸ் ஏஞ்சல்ஸில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் நான் தோற்றுப் போனேன். அதற்குப் பிறகு அமெரிக்காவில் உள்ள சாண்டா மோனிகா கிளப்பில் இருந்து, தடகளப் பயிற்சிக்கு வருமாறு அழைத்திருந்தார்கள். ஆனால் அந்த விஷயம் எனக்குத் தெரிவிக்கப்படவேயில்லை. கடைசிவரை, என்னிடமிருந்து இதை மறைத்து விட்டார்கள். எத்தனை கௌரவமிக்க அழைப்பு! நான் ஏற்றுக் கொண்டிருந்தால், எவ்வளவு பயனுள்ளதாக இருந்திருக்கும்? இந்த விஷயம் பற்றி, நான் சமீபத்தில்தான் கேள்விப்பட்டேன். என் வளர்ச்சியைத் தடுக்க இன்னும் என்னவெல்லாம் செய்தார்களோ?" என்று இந்திய விளையாட்டுத் துறை அதிகாரிகளின் மீது பாய்கிறார்.

"அதுமட்டுமா? 1995ல் எஸ்.ஏ.எஃப் போட்டிக்கு முன்பாக பெங்களூரில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது, என்னுடைய கோச் என்னை வினோதமான பயிற்சி ஒன்றைச் செய்யச் சொன்னார். இருபது கிலோ பளுவைத் தோளில் தாங்கி, கால்களை மடக்கிய வண்ணம் குதிக்கச் சொன்னார். அதற்கு நான் சம்மதிக்காதபோது, கோபப்பட்டார். கடைசியில் பளு இல்லாமல் அவர்

## – மீண்டும் சர்ச்சையில் பி.டி. உஷா

சொன்ன மாதிரி குதித்தேன். அடுத்த விநாடி, எனது இடது கால் முட்டி உடைந்தது. நான் கத்தி அழுதேன். வலியால் துடித்தேன். ஆனால் யாருமே உதவிக்கு வரவில்லை. அந்த விபத்துக்குப் பிறகு என்னைப் பார்க்க யாரும் மருத்துவமனைக்குக்கூட வரவில்லை. இதை நான் சாதாரண நிகழ்ச்சியாக நினைக்கவில்லை. என்னை நிரந்தர ஊனமாக்க யாரோ திட்டமிட்டுச் சதி செய்திருக்கிறார்கள்" என்று குமுறுகிறார்.

'மகாத்மாகாந்தி தமது சுயசரிதைக்கு வைத்த பெயரையே நீங்களும் உங்க புத்தகத்துக்கு வைச்சிருக்கீங்களே?' என்று கேட்டால் 'சுள்'ளென்று பதில் வருகிறது.

"வேண்டுமென்றேதான் அந்தப் பெயர் வைத்தேன். காந்தியைப் போலவே உண்மைகளைத் தோலுரித்து எழுதியிருக்கிறேன். அதுதான் 'எக்ஸ்பெரிமெண்ட் வித் ட்ரூத்' என்று பெயரிட்டிருக்கிறேன். இதனால் பலர் காயப்படுவார்கள். ஆனால் நான் கவலைப்படவில்லை. ஐ ஜஸ்ட் டோன்ட் கேர்" என்று ஆவேசப்படுகிறார் உஷா.

— ஆதர்ஷ்

நன்றி: சொஸைட்டி

# அம்மா!




ஆலப்பாக்கத்தில் வசிக்கும் விஜயகுமாரி வித்தியாசமானவர். இரண்டு குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொண்டிருக்கிறார். இதிலென்ன 'வித்தியாசம்' என்கிறீர்களா...?

பார்வையில்லாத, பேச முடியாத, நடக்க வராத, மூளை வளர்ச்சி குன்றிய பெண் குழந்தையையும், ஆறு வயதாகியும் இயல்பான வளர்ச்சியின்றி, எந்தச் சலனமும் இல்லாமல் சதா காலமும் தொட்டிலில் தூங்கும் ஆண் குழந்தையையும், சட்டப்படி தத்தெடுத்து, 'மீரா', 'விக்னேஷ்' என்று பிரியமுடன் பெயரிட்டு, வளர்த்து வருகிறார் விஜயகுமாரி. இன்னும் ஒரு விஷயம்... இவர் திருமணம் செய்து கொள்ளாத 27 வயது பெண்!

விஜயகுமாரியின் சொந்த ஊர் கேரளா பக்கம். வசதியான குடும்பம். பாசமுள்ள பெற்றோர்கள். நல்ல இடமாக பார்த்துக் கல்யாணம், குழந்தைன்னு செட்டில் ஆகாமல், ஏன் இப்படி ஒரு எண்ணம்?

"நான் கேரளாவில் உள்ள சில கோயில்களுக்குப் போகும் போது, அங்கே மனநிலை பாதிக்கப்பட்டவர்களைச் சிகிச்சைக்காக அழைத்து வருவதைப் பார்த்திருக்கிறேன். அவர்களின் நிலைமை ரொம்ப பரிதாபமாக இருக்கும். கூட வந்திருப்பவர்களுக்கு முகத்தில் அருவருப்பும், பயமும் இருக்குமே தவிர, அவர்களைப் பரிவுடன் நடத்த மாட்டார்கள். மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளானால் நிலைமை இன்னும் மோசம்! அந்தக் கண்களில் தெரியும்

• விக்னேஷ், விஜயகுமாரி, மீரா



சோகத்தை என்னால் தாங்க முடியவில்லை. ஏதாவது செய்ய வேண்டும் என்று பரபரத்தேன். அம்மனின் முகத்தைப் பார்த்தேன். அது எனக்கு ஏதோ சொல்வது போல இருந்தது. உடனே என்னுடைய பாதை என்ன என்று தெளிவாகத் தெரிந்து விட்டது'' என்கிறார் விஜயகுமாரி.

ஐதராபாத்தில் உள்ள 'ஐ.எம்.எச்' என்ற மையத்தில், மனவளர்ச்சி குன்றியவர்களுக்காக நடத்தப்படும் பிரத்யேக பயிற்சியில் சேர்ந்து 'டிப்ளமா' வாங்கிய போது பலரும் ஏளனம் செய்தார்களாம்.

"ஏன் இந்த வேண்டாத வேலை? பேசாமல் நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொண்டு போ'' என்று அறிவுரை சொன்னார்களாம்.

ஆனால் விஜயகுமாரி அதையெல்லாம் அலட்சியப்படுத்தி விட்டாராம்.

"தினமும் ஒரு சமூக சேவை மையத்திற்குப் போய் அது எப்படிச் செயல்படுகிறது என்று கண்காணித்தேன். அன்றாடப் பிரச்னைகள், மருத்துவ அணுகுமுறைகள் என நிறைய தெரிந்து கொண்டேன். வாலண்டியர்ஸ் கிடைப்பது ரொம்ப கஷ்டமாக இருந்தது. தெய்வம் என்னைக் கைவிடவில்லை. என் முயற்சி பலிக்க ஆரம்பித்தது'' என்கிறார் விஜயகுமாரி.

இன்றைக்கு ஆலப்பாக்கத்தில், அமைதியான சூழ்நிலையில் முப்பதுக்கும் மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியவர்களைப் பராமரிக்கிறார்.




"இங்கே பலவிதமான நிலைகளில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் உள்ளனர். இவர்களை முழுமையாகக் குணப்படுத்துவது சாத்தியமில்லைதான். ஆனால் பயிற்சிகள் மூலம், மாற்றங்கள் தெரியும். மீரா, விக்னேஷ் இருவருமே பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்ட குழந்தைகள். இவர்களைக் குணப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற வேகம் எனக்கு இருக்கிறது. குணப்படுத்திய பிறகு பெற்றோர்கள் இவர்களை மீண்டும் சொந்தம் கொண்டாடி வரலாம். அதற்குத்தான் சட்டப்படி தத்தெடுத்துக் கொண்டுவிட்டேன்'' என்கிறார் விஜயகுமாரி.

"மீராவுக்கு இப்போது இலேசாகப் பார்வை தெரிகிறது. வெறும் பால் மட்டுமே குடித்து கொண்டிருந்தவள் இப்போது திரவ உணவும் சாப்பிடுகிறாள். விக்னேஷ் அசையக் கூட முயற்சி செய்யாமல் இருந்தான். இப்போது தேவலை. தொட்டிலிலிருந்து இறக்கி விட்டால், உருண்டு, புரண்டு, ஏதாவது ஆதாரம் கிடைத்தால் பிடித்துக் கொண்டு நிற்க முயற்சி செய்கிறான். நானே இந்த முன்னேற்றத்தை எதிர்பார்க்கவில்லை'' என்று மகனைப் பாசத்துடன் முத்தமிடுகிறார் விஜயகுமாரி.

**- லக்ஷ்மி ஸ்ரீனிவாஸ்**

# பொன்னியின் செல்வன்



அறுபத்து ஒன்றாம் அத்தியாயம்

## நிச்சயதார்த்தம்

வெளியில் காலடிச் சப்தம் கேட்டதும் பூங்குழலி அச்சிறு குடிலின் வாசற் கதவை நோக்கிப் போனாள்.

அவள் தன்னை விட்டு விட்டு அடியோடு போய் விடப் போகிறாள் என்று சேந்தன் அமுதன் எண்ணிப் பெருமூச்சு விட்டான். அவள் அவ் வாசற்படி வழியாக வெளியேறும்போது தன் உயிரும் தன் உடலை விட்டு வெளியேறி விடும் என்று கருதினான்.

பூங்குழலி கதவைச் சற்றுத் திறந்து வெளியே பார்த்து விட்டு மறுபடியும் கதவை அடைத்துத் தாளிட்டதை சேந்தன் அமுதன் பார்த்தான். இது என்ன விந்தை? தாளிட்டது மட்டுமல்லாமல் திரும்பவும் தன்னை நோக்கி வருகிறாளே?

அவனுடைய உள்ளம் சிறிது இளகி விட்டதோ! இளகினால்தான் என்ன? மறுபடியும் தன்னை வீரனாக வேண்டும் என்றும், இராஜ்யத்தைப் பிடிக்க வேண்டும் என்றும், சிங்காதனம் ஏறி அரசாள வேண்டும் என்றும், - இவ்வாறு போதனை செய்து கொண்டுதானிருப்பாள். உலக ஆசைகள் என்னும் புயற்காற்றினால் அலை வீசிக் கொந்தளிக்கும் கடல் அவனு

அமரர் கல்கி

டைய உள்ளம். சிவபெருமானுடைய பக்தியில் திளைத்து அமைதியுற்றிருக்கும் இனிய புனல் வாவியை ஒத்தது தன் மனம். அதில் எழுந்த சிறிய கொந்தளிப்பு இவளால் நேர்ந்ததுதான். பூங்குழலிக்கும் தனக்கும் ஒருநாளும் ஒத்து வரப் போவதில்லை. அதைப்பற்றி வீண் மனோராஜ்யம் செய்வதில் என்ன பயன்?

பூங்குழலி அவன் அருகில் வந்ததும் அவனைத் தன் குவளை மலர்க் கண்களால் உற்றுப் பார்த்தாள். சேந்தன் அமுதனின் நெஞ்சம் தத்தளித்தது.

''கதவை ஏன் சாத்தினாய்? யார் வந்தனர்? ஒருவேளை அம்மாதானோ, என்னமோ?'' என்றான் அமுதன்.

''யாராயிருந்தாலும் சிறிது நேரம் காத்திருக்கட்டும். நம்முடைய பேச்சு முடியும் வரையில் வெளியில் இருக்கட்டும். ராஜாவும் ராணியும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கே வந்து யாரும் தடை செய்யக் கூடாது அல்லவா?'' என்றாள்.

''ராஜா - ராணி - யார் ராஜா? யார் ராணி?'' என்று தடுமாறினான் அமுதன்.

''நீ ராஜா; நான் ராணி! இத்தனை நேரம் சொன்னதெல்லாம் உன் மனத்தில் ஏறவே இல்லையா?''

''இல்லை, பூங்குழலி! எனக்கு நீ போதனை செய்வதில் சிறிதும் பயனில்லை என்றுதான் சொன்னேனே? உன் உள்ளப் போக்கும் என் உள்ளப் போக்கும் முற்றும் மாறானவை. அவை ஒத்து வர மாட்டா!'' என்றான் அமுதன்.

''ஒத்து வரும்படி நாம்தான் செய்ய வேண்டும்'' என்றாள் பூங்குழலி.

''அது முடியாத காரியம்!''

''உன்னால் முடியாவிட்டால், என்னால் முடியும். அமுதா! நான் தீர்மானம் செய்துவிட்டேன். அரசகுமாரனைக் கலியாணம் செய்துகொண்டு அரியாசனம் ஏறும் எண்ணத்தை விட்டு விட்டேன். அரண்மனை வாழ்வையும் அரச போகத்தையும் காட்டிலும் உன்னுடைய அன்பு கோடி மடங்கு எனக்குப் பெரிது. நீ என் வழிக்கு வர மறுப்பதால், நான் உன்னுடைய வழிக்கு வருவேன். உன்னையே நான் மணந்து கொள்வேன்...''

சேந்தன் அமுதன் பரவச நிலையை அடைந்தான். ''பூங்குழலி! பூங்குழலி! எனக்கு இப்போது சுரம் அடிக்கவில்லையே? நான் கனவு காணவில்லையே? இப்போது நீ சொன்ன வார்த்தைகள் என் காதில் தவறாக விழவில்லையே? நான் தவறாகப் பொருள் கொள்ளவில்லையே?'' என்றான்.

''இன்னொரு தடவை சொல்கிறேன், கேள்! நீ என் வழிக்கு வர மறுப்பதால் நான் உன்னுடைய வழிக்கு வரத் தீர்மானித்து விட்டேன். உன்னையே நான் மணந்து கொள்வேன். என் பெரிய அத்தையின் வாழ்க்கையைப் பற்றி நான் அறிந்து கொண்டிருந்த விவரங்கள் என் உள்ளத்தில் வீண் ஆசைகளை உண்டாக்கியிருந்தன. நியாயமாக அவள் சிங்காதனத்தில் வீற்றிருக்க வேண்டியவள் என்று அடிக்கடி எண்ணி, நானும் ஏன் சிங்காதனம் ஏறக்கூடாது என்ற ஆத்திரத்தை எனக்கும் உண்டாக்கி விட்டது. என் அத்தை கொலைகாரனுடைய வேலினால் மரணமடைந்தபோது, என்னுடைய ஆசையும் மடிந்துவிட்டது. அரண்மனையில் வாழ்கிறவர்கள் படும் அவதிகளையும் வேதனைகளையும் அறிந்துகொண்டேன். அலைகடலில் படகு ஓட்டிக் கொண்டு ஆனந்தமாகக் கழிக்கும் வாழ்க்கைக்கு அரண்மனை வாழ்வு ஒருநாளும் இணையாகாது என்று அறிந்தேன். அமுதா! உனக்கு உடம்பு சரியானதும் இருவரும் கோடிக்கரை செல்வோம். அங்கே காட்டுக்கு நடுவில் உள்ள கோயிலில் குழகர் தன்னந் தனியாகத் துணை எவருமின்றி இருக்கிறார். நாம் இருவரும் கோடிக்கரைக் குழகருக்குப் புஷ்பத்திருப்பணி செய்வோம்.

சில சமயம் படகில் ஏறிக் கடலில் செல்வோம். ஈழ நாட்டின் ஓரத்தில் இனிய தீவுகள் எத்தனையோ இருக்கின்றன. அந்தத் தீவுகளில் ஒன்றில் சில சமயம் இறங்குவோம். அங்கே நீ ராஜாவாகவும் நான் ராணியாகவும் இருப்போம். அந்த ராஜ்யத்துக்கு யாரும் போட்டிக்கு வர மாட்டார்கள். அமுதா! இதற்கெல்லாம் உனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லையே?''

''ஒரே ஆட்சேபந்தான், பூங்குழலி! இவ்வளவு பெரிய பாக்கியத்துக்கு நான் அருகதை உள்ளவனா என்னும் ஆட்சேபந்தான். இதையெல்லாம் நீ உண்மையாகத்தானே சொல்லுகிறாய்? பிறகு பெரிய ஏமாற்றத்துக்கு என்னை உள்ளாக்குவதற்காகச் சொல்லவில்லையே? இல்லை, இல்லை! நீ உண்மையாகத்தான் சொல்கிறாய். எப்போது கோடிக்கரைக்குப் புறப்படலாம்?''

''உனக்கு உடம்பு நேரான உடனே புறப்படலாம்.''

''எனக்கு உடம்பு நேராகி விட்டது. பூங்குழலி! நான் வேணுமானால் இப்போது எழுந்து நடக்கிறேன். பார்க்கிறாயா?'' என்று கூறிவிட்டுச் சேந்தன் அமுதன் எழுந்திருக்க முயன்றான்.

பூங்குழலி அவன் கையைப் பிடித்து எழுந்திருக்காமல் தடுத்து, ''வேண்டாம்; இன்று ஒருநாள் மட்டும் பொறுத்துக் கொள்!'' என்றாள்.

வாசற் கதவை யாரோ இலேசாகத் தட்டும் சப்தம் கேட்டது.

''அம்மா கதவைத் தட்டுகிறாள். திறந்து விடு! அம்மாவிடம் இந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொல்வோம்'' என்றான் அமுதன்.

பூங்குழலி போய்க் கதவைத் திறந்தாள். வாசலில் கண்ட காட்சி அவளைச் சிறிது வியப்புறச் செய்தது.

அவள் எதிர்பார்த்தபடி கதவைத் தட்டியவள் வாணி அம்மை அல்ல.

அரண்மனைச் சேவகன் ஒருவன் கதவைத் தட்டியிருக்க வேண்டுமென்று தோன்றியது. கதவு திறந்ததும் சேவகன் ஒதுங்கி நின்றான்.

அப்பால், செம்பியன் மாதேவியும் இளவரசர் மதுராந்தகரும் நின்றார்கள்.

இன்னும் சிறிது தூரத்துக்கு அப்பால், பல்லக்குகள் இரண்டு இறக்கி வைக்கப்பட்டிருந்தன. சிவிகை தூக்கிகளும் காவலர்களும் மரத்தடியில் நின்றார்கள். அவர்களில் ஒருவன் பிடித்துக்கொண்டிருந்த தீவர்த்தி வெளிச்சத்தில் இவ்வளவு காட்சியையும் கண்ட பூங்குழலி செம்பியன் மாதேவியின் முன்னால் தலைவணங்கிக் கும்பிட்டு, ''தாயே! வர வேண்டும்!'' என்றாள்.

''உன் அத்தை மகனுக்கு உடம்பு எப்படியிருக்கிறது, பூங்குழலி! வாணி அம்மை எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே மழவரையன்மா மகளாகிய முதிய எம்பெருமாட்டி அந்தக் குடிசைக்குள்ளே பிரவேசித்தாள்.

மதுராந்தகன் வெளியிலேயே நின்றான். ஆனால் அவனுடைய குரோதம் ததும்பிய கண்கள் ஆர்வத்துடன் குடிசைக்கு உள்ளே நோக்கின.

வருகிறவர் சிவபக்த சிரோமணியும் தங்களுக்கு மானியம் அளித்துக் காப்பாற்றி வருகிறவளுமான செம்பியன் மாதேவி என்று அறிந்ததும் சேந்தன் அமுதனும் எழுந்தான்.

''தாயே! நல்ல சமயத்தில் வந்தீர்கள். முதன்முதல் சந்தோஷமான செய்தியைத் தங்களிடம் தெரிவித்து ஆசி பெறும் பாக்கியம் எங்களுக்குக் கிட்டியிருக்கிறது. சிவபெருமானுடைய திருவருளாலேயே இது நடந்திருக்க வேண்டும். இன்னும் என் அன்னையிடம் கூடச் சொல்லவில்லை. அன்னையே! இத்தனை காலங் கழித்துப் பூங்குழலி மனமிரங்கி என்னை மணம் புரிந்து கொள்ள இசைந்திருக்கிறாள். தாங்கள்தான் கூட இருந்து எங்கள் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும். நாங்கள் திருமணம் செய்து கொண்ட பிறகு கோடிக்கரைக் குழகர்

கோயிலுக்குப் போய் அங்கே பூமாலைக் கைங்கரியம் செய்ய எண்ணியிருக்கிறோம்!" என்றான்.

செம்பியன் மாதேவியின் முகத்தோற்றம் இச் செய்தியினால் அந்த மாதரசி மகிழ்ச்சி அடைந்தாளா, கலக்கமடைந்தாளா என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது. அவருடைய இதழ்களில் மகிழ்ச்சிப் புன்னகை தோன்றியது. ஆனால் கண்களிலோ கண்ணீர் ததும்பி நின்றது.

அமுதனும் பூங்குழலியும் அவர் முன்னால் வணங்கியபோது, மாதரசி தழுதழுத்த குரலில், "குழந்தைகளே! இறைவன் அருளால் உங்கள் இல்வாழ்க்கை இன்பமயமாக இருக்கட்டும்!" என்று ஆசி கூறினார்.

அந்தச் சமயம் வாணி அம்மை அங்கு வந்து சேர்ந்தாள். அவளிடம் செம்பியன் மாதேவி சமிக்ஞையினால் அமுதனுடைய உடம்பைப் பற்றித் தெரிந்துகொள்ள வந்ததாகக் கூறினார். வந்த இடத்தில் அவர்களுக்குத் திருமணம் நடக்கப் போகிற செய்தியை அறிந்து மகிழ்ச்சி அடைந்ததாகவும் தெரிவித்தார்.

அச் சமயம் வாணி அம்மையின் முகபாவமும் கலக்கத்தையும் களிப்பையும் ஒருங்கே காட்டுவதாயிருந்தது.


மேலும் சிறிது நேரம் சேந்தன் அமுதனுடனும் பூங்குழலியுடனும் பேசிக் கொண்டிருந்த பிறகு செம்பியன் மாதேவி வெளிக் கிளம்பினார்.

அவரும் மதுராந்தகனும் பல்லக்குகள் இரண்டும் இறக்கி வைத்திருந்த இடம் நோக்கிச் சென்றார்கள்.

வழியில் ஒரு மரத்தடியில் முதிய பிராட்டியார் நின்று, சுற்று முற்றும் பார்த்தார். அருகில் ஒருவரும் இல்லை என்பதைக் கண்ட பிறகு, மதுராந்தகனை நோக்கி, "பார்த்தாயா, மதுராந்தகா! என் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மகன் அதோ அக் குடிசையில் வாழும் சேந்தன் அமுதன். அவனுக்கு ஐந்து வயதானபோதே எனக்கு இச் செய்தி தெரிந்துவிட்டது. அவன் எட்டு நாள் குழந்தையாயிருந்தபோது மூச்சுப் பேச்சற்றுக் கிடந்ததைப் பார்த்து இறந்து விட்டதாக எண்ணினேன். பிள்ளைப் பாசத்தினால் உன்னை என் குழந்தையாக ஏற்றுக் கொண்டு இவனைக் கொண்டு போய்ப் புதைத்து விடச் சொன்னேன். இவனை எடுத்துப் போன வாணி வெகு காலம் திரும்பி வரவே இல்லை. ஐந்து ஆண்டு கழிந்த பிறகு இவளையும் இப்பிள்ளையையும் பார்த்ததும் உண்மை தெரிந்துகொண்டேன். ஆயினும், உன்னை நான் கைவிடவில்லை. அவன் என் வயிற்றில் பிறந்த மகன் என்பதற்காக அவனை அரண்மனைக்கு வரவழைத்துக் கொள்ளவுமில்லை. எல்லாம் இறைவன் திருவிளையாடல் என்று எண்ணி உன்னை என் வயிற்றில் பிறந்த மகனைக் காட்டிலும் பதின் மடங்கு அருமையாக வளர்த்து வந்தேன். அதற்காகவெல்லாம் எனக்கு இப்போது இந்த வரத்தை நீ கொடு! சோழ சிங்காதனம் வேண்டாம் என்று சொல்லிவிடு! நீ சிங்காதனம் ஏறுவதற்குக்கூட நான் ஆட்சேபிக்க மாட்டேன். ஆனால் உன் வம்சத்தில் பிறக்கும் பிள்ளைகள் ஊமைகளாக இருந்துவிட்டால் என்ன செய்கிறது என்றுதான் அஞ்சுகிறேன்!" என்றார்.

இவ்விதம் செம்பியன் மாதேவி கூறி வந்தபோது மதுராந்தகனுடைய முகம் பேயடித்த முகமாகக் காணப்பட்டது.

அவன் மணம் செய்து கொண்டிருந்த



சின்னப் பழுவேட்டரையரின் மகளுக்கு ஒரு பெண் மகவு பிறந்திருந்தது. அதற்கு இரண்டு பிராயம் ஆகியும் இன்னும் பேசத் தொடங்கவில்லை என்பது அவனுடைய நினைவுக்கு வந்தது.

பிரமை பிடித்து மரத்தோடு மரமாக நின்ற மதுராந்தகனைப் பார்த்து அவனை வளர்த்த அன்னையாகிய மாதரசி, "குழந்



தாய்! ஏன் இப்படியே நின்றுவிட்டாய்? வா, போகலாம்! அரண்மனைக்குப் போய் நன்றாக யோசித்து நாளைக்குப் பதில் சொல்லு!'' என்றாள்.

மதுராந்தகன் தட்டுத் தடுமாறி, "தாயே! யோசிப்பதற்கு இனி என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. தாங்கள் போங்கள்! என்னுடைய இடத்தில் அரண்மனையில் வளர்ந்திருக்க வேண்டிய தங்கள் குமாரனிடம் சிறிது பேசி விட்டுப் பிறகு வருகிறேன்!'' என்றான்.

''அப்படியே செய்! வரும்போது பல்லக்கின் திரைகளை நன்றாக மூடிக் கொண்டு வா! கொடும்பாளூர் வீரர்கள் உன்னைப் பார்த்துவிட்டால் ஏதேனும் கூச்சல் போட்டாலும் போடுவார்கள்!'' என்று சொல்லிவிட்டு அம்மாதரசி மேலே பல்லக்கை நோக்கி நடந்தார்.

மதுராந்தகனுடைய முகம் முன்னை விடக் குரோதமும் மாத்சரியமும் நிறைந்த பயங்கர மாறுதலை அடைந்ததை அப்பெருமாட்டி கவனியாமலே அங்கிருந்து சென்றுவிட்டார்.

## அறுபத்து இரண்டாம் அத்தியாயம்

# ஈட்டி பாய்ந்தது!

சற்று நேரம் நின்ற இடத்திலேயே நின்றான் மதுராந்தகன். குடிசைக்குப் போகலாமா, கோட்டைக்குப் போகலாமா என்று அவன் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்தது போலத் தோன்றியது. பின்னர் அவன் தன்னைச் சுமந்து வந்த பல்லக்கின் அருகில் சென்று, சிவிகைத் தூக்கிகளிடமும் காவலர்களிடமும் ஏதோ சொன்னான். சிவிகைக்கு உள்ளேயிருந்து ஏதோ ஒரு பொருளையும் எடுத்துக்கொண்டான். சிவிகையைத் தூக்கிக் கொண்டு ஆட்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுடன் தீவர்த்தி வெளிச்சமும் சென்றது.

மதுராந்தகன் திரும்பக் குடிசையை நோக்கி வந்தபோது, அவனும் மாதேவடிகளும் எந்த மரத்தின் ஓரமாக நின்று பேசிக் கொண்டிருந்தார்களோ, அதே மரத்தின் பின்புறத்திலிருந்து திடீரென்று ஒரு மனிதன் வெளிப்பட்டு வந்ததைக் கண்டு மதுராந்தகன் ஒரு கணம் திடுக்கிட்டான்.

அவன் வேறு யாரும் இல்லை. பாதாளச் சிறையிலிருந்து தப்பித்து வந்தியத்தேவனோடு வந்திருந்த 'பைத்தியக்காரன்' கருத்திருமன்தான்.

இன்னமும் அவன் பார்ப்பதற்குப் பைத்தியக்காரனைப் போலவே இருந்தான். அவனுடைய தோற்றமும் அவன் திடீரென்று அந்த இடத்தில் வெளிப்பட்டதும் மதுராந்தகனுக்குத் திகிலை உண்டாக்கியதில் வியப்பில்லைதானே!

அடுத்தகணம் மதுராந்தகன் சிவிகையிலிருந்து எடுத்து வந்த கூரிய குத்துவாளை ஓங்கினான்.


கருத்திருமன் அவனைக் கையமர்த்தி, ''ஐயா! நில்லுங்கள்! நான் தங்கள் விரோதி அல்ல!'' என்றான்.

"விரோதி அல்லவென்றால், பின்னே நீ யார்? என் நண்பனா?'' என்று மதுராந்தகன் கேட்டான்.

"ஆம், ஐயா! நண்பன்தான்!"

மதுராந்தகன் குரோதமும் துயரமும் ததும்பிய குரலில் மெல்லிய சிரிப்புச் சிரித்து விட்டு, "நல்ல நண்பன் கிடைத்தாய்! உலகமே என்னை விட்டு நழுவிச் செல்லும்போது, நீயாவது கிடைத்தாயே?'' என்றான்.

''ஆம், ஐயா! உலகத்தில் யாரும் தங்களுக்குச் செய்ய முடியாத உதவியைத் தங்களுக்கு நான் செய்ய முடியும்!'' என்றான் கருத்திருமன்.



''அது என்ன, சொல் பார்க்கலாம்! நேரமாகி விட்டது. சொல்லுவதைச் சீக்கிரம் சொல்லு!''

''எதற்கு நேரம் ஆகிவிட்டது?'' என்று கருத்திருமன் கேட்டுவிட்டு, மதுராந்தகனை உற்று நோக்கினான்.

''அரண்மனைக்குப் போவதற்குத் தான். வேறு எதற்கு?''

''தங்களுக்கு உரிமை இல்லாத அரண்மனைக்குத் தாங்கள் திரும்பிப் போகப் போகிறீர்களா?''

மதுராந்தகன் மறுபடியும் அதிர்ச்சி அடைந்து, ''அடே! என்ன சொல்லுகிறாய்? உனக்கு என்ன தெரியும்? எப்படித் தெரியும்? விரைவிலே சொல்லு! இல்லாவிடில்...'' என்று கையிலிருந்த குத்துவாளை ஓங்கினான்.

''ஐயா! வாளை ஓங்க வேண்டாம். தங்கள் பகைவர்கள் எதிர்ப்படும்போது உபயோகிப்பதற்குத் தீட்டி வைத்துக் கொள்ளுங்கள். சற்று முன் தாங்களும் தங்களை வளர்த்த பெரிய மகாராணியும் இந்த மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்தீர்கள். நான் மரத்தின் பின்னால் நின்றதை நீங்கள் இருவரும் கவனிக்கவில்லை...''

''ஆகா! ஒட்டுக் கேட்டு இரகசியத்தை அறிந்து கொண்டாயா? அந்தத் துணிச்சலுடனேதான் என்னை வழி மறித்து நிறுத்தினாயா?''

''இல்லை, இல்லை! மகாராணி தங்களிடம் சொன்ன செய்தி எனக்கு

முன்னமே தெரியும். அதைவிட அதிக மாகவும் தெரியும். அந்த மாதரசி தங்களை வயிற்றில் வைத்து வளர்த்த அன்னை அல்லவென்றும், கண்டராதித்தர் தங்கள் தந்தை அல்லவென்றும் அவர் தங்களிடம் கூறினார். தங்களுடைய அன்னை யார் என்றும் சொல்லி இருப்பார். ஆனால், தங்கள் தந்தை யார் என்று சொல்லியிருக்க மாட்டார்.''

மதுராந்தகன் அவனை வெறித்து நோக்கி, ''உனக்கு அது தெரியுமா?'' என்று கேட்டான்.

''ஆம், தெரியும்.''

மதுராந்தகன் அந்தப் பைத்தியக்காரத் தோற்றமுடையவன்தான் அவன் தந்தை என்று உரிமை கொண்டாடப் போகிறானோ என்று பீதி அடைந்தான். அருவருப்பும் ஆத்திரமும் நிறைந்த குரலில், ''உனக்கு எப்படித் தெரியும்? நீ யார்?'' என்று கேட்டான்.

''நான் தங்கள் தந்தையின் ஊழியன்!'' என்று கருத்திருமன் கூறியதும், மதுராந்தகன் முகம் தெளிவு பெற்றது.


கருத்திருமன் சற்று அருகில் நகர்ந்து வந்து ''ஐயா! தங்கள் தந்தை...'' என்று மெல்லிய குரலில் கூறினான்.

மதுராந்தகன் காதில் அவன் கூறியது விழுந்தது. மதுராந்தகனுடைய தலை சுற்றியது. கீழே விழப் பார்த்தவன் சமாளித்துக்கொண்டு, கருத்திருமனுடைய புஜங்களை உறுதியாகப் பற்றிக் கொண்டு, ''நீ கூறியது உண்மைதானா? உண்மையாகவே நான் இராஜகுமாரன் தானா?'' என்று கேட்டான்.

''ஆம், ஐயா! இதைத் தங்களிடம் சொல்வதற்காகவே பல வருஷங்களுக்கு முன்பு நான் இங்கு வந்தேன். தங்களை அந்தரங்கமாகப் பார்த்துப் பேசுவதற்குச் சமயம் நோக்கிக் கொண்டிருந்தேன். துரதிர்ஷ்டவசமாகச் சின்னப் பழுவேட்டரையர் என்னை அரண்மனைத் தோட்டத்தில் பார்த்துவிட்டார். பிடித்துப் பாதாளச் சிறையில் போட்டு விட்டார்.''

''எப்போது தப்பினாய்? எப்படி?''

''இன்றைக்குத்தான் வந்தியத்தேவன் என்னும் வாலிபன் ஒருவனுடைய உதவியினால் தப்பித்து வெளி வந்தேன்...''



"ஆகா நானும் கேள்விப்பட்டேன். கரிகாலரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவன் அல்லவா அவன்?"

"ஆம்; ஐயா! ஆனால் உண்மையில் ஆதித்த கரிகாலரைக் கொன்றவன் அந்த வாலிபன் அல்ல!"

"அதைப் பற்றி நமக்கு என்ன கவலை? கொன்றவனாகவே தான் இருக்கட்டுமே? இப்போது எங்கே அவன்?"

"அதோ சற்றுத் தூரத்தில் தெரியும் வேலியின் [illegible]ல் இருக்கிறான். [illegible]க்கும் இரண்டு குதிரைகளுடன் காத்திருக்கிறான். நான் நேரம் செய்வது பற்றி அவன் இப்போது கோபம் அடைந்திருப்பான். அதைப் பற்றி நான் சிறிதும் கவலைப் படவில்லை. எதிர்பாராத விதத்தில் தங்களைச் சந்தித்து விட்டேன்."



"எப்போது நீங்கள் இங்கே வந்தீர்கள்?" என்றான் மதுராந்தகன்.

"சற்று முன்னாலேதான் வந்தோம். இந்தக் குடிசைக்கு அருகில் இரண்டு குதிரைகள் இருக்கின்றனவென்று தெரிந்துகொண்டு வந்தோம். குதிரைகளைத் தேடிக் கொண்டிருந்தபோது தாங்களும் தங்களை வளர்த்த அன்னையும் தீவர்த்திகளுடன் சாலையில் வந்தீர்கள். அந்த வெளிச்சத்தில் குதிரைகளைக் கண்டுபிடித்தோம். நான் பல வருஷங்களுக்குப் பிறகு வாணியைப் பார்த்தேன். அவளுடன் ஊமைப் பாஷையில் பேசிக் கொண்டிருக்கும்போதே நீங்கள் இந்தக் குடிசைப் பக்கம் திரும்பி வந்தீர்கள். நீங்கள் இந்தக் குடிசைக்குத்தான் வருகிறீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. வந்தியத்தேவன் வேலி மறைவுக்கு ஓடி விட்டான். நானும் வாணியும் இம் மரத்தின் பின்னால் சிறிது நேரம் நின்றோம். பிறகு அவளும் குடிசைக்குள் போய் விட்டாள். நான் மட்டும் இங்கு நின்று கொண்டிருந்தேன். அதன் பலனாகத் தங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது..."

"சரி, இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாய்?"

"தாங்கள் எவ்விதம் சொல்லுகிறீர்களோ, அவ்விதம் செய்கிறேன், ஐயா! தங்கள் பிறப்பைக் குறித்த உண்மையை அறிந்த பிறகும் தஞ்சை அரண்மனைக்குத் திரும்பிப் போகப் போகிறீர்களா? ஒன்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் சோழ குலத்து இளவரசர் அல்லவென்பது இன்னும் சிலருக்கும் தெரியும். முதன்மந்திரிக்கும் அவருடைய ஒற்றன் ஆழ்வார்க்கடியான் என்பவனுக்கும் தெரியும். என்றைக்காவது ஒரு நாள்..."

"ஆமாம், ஆமாம்! தஞ்சை அரண்மனைக்குப் போக எனக்கும் விருப்பமில்லைதான். நீ என்ன யோசனை சொல்லுகிறாய்?"

"அந்த வேலி மறைவில் இரண்டு குதிரைகள் இருக்கின்றன. தாங்கள் குடிசைக்குள் போவது போல் போய்விட்டு அந்த வேலிப்பக்கம் வாருங்கள். நான் வந்தியத்தேவனுடன் சிறிது பேசிக் காலந் தாழ்த்திக்கொண்டிருக்கிறேன். தங்கள் கையிலுள்ள வாளை அவன் மீது எறிந்து கொன்று விடுங்கள். இரண்டு குதிரைகள் மீது நாம் இருவரும் ஏறிப் போய்விடுவோம். கோடிக்கரை சென்று இலங்கைக்குப் போவோம். இலங்கை அரசர், சோழ குலத்தின் பகைவர்; பாண்டிய குலத்துக்குப் பரம்பரை சிநேகிதர். நான் இலங்கை மன்னரை நன்கு அறிவேன். பாண்டிய குலத்தின் மணிமகுடமும் இரத்தின ஹாரமும் இருக்குமிடமும் அறிவேன். என்ன சொல்லுகிறீர்கள்?"

மதுராந்தகன் சிறிது நேரம் யோசனை செய்தான். அவனுடைய உள்ளம் அந்தச் சில வினாடி நேரத்தில் எத்தனையோ கோட்டைகள் கட்டியது.

"ஐயா! நேரம் போகிறது. தங்கள் முடிவு என்ன? வந்தியத்தேவன் இனி இங்கேயே வந்துவிடுவான்."

"அவனைக் கொல்ல வேண்டும் என்றா சொல்லுகிறாய்?"

"தங்களுக்குத் தயக்கமாயிருந்தால் தங்கள் கையிலுள்ள குத்துவாளை என்னிடம் கொடுங்கள்!"

"வேண்டாம்; இந்த வாளுக்கு வேறு வேலை இருக்கிறது. வந்தியத்தேவனைப் பற்றி எனக்குத் தெரியும். அவன் நல்ல வீரன். அவனையும் நம்முடன் அழைத்துக்கொண்டு போகலாமே?"

"அழைத்துப் போகலாம்; ஆனால் இன்னொரு குதிரை?"

"குதிரைக்கு என்ன குறைவு? நான் இன்னமும் பட்டத்து இளவரசர் மதுராந்தகன்தானே!" என்று கூறிவிட்டுக் கோபச் சிரிப்புச் சிரித்தான்.

பிறகு, "நீ போ! அவனைச் சற்று நேரம் பொறுமையாக இருக்கச் சொல்! இந்தக் குடிசைக்காரனைப் பார்த்து ஒரு வார்த்தை பேசிவிட்டு விரைவில் வந்துவிடுகிறேன்!" என்றான்.

கருத்திருமன், வந்தியத்தேவன் மறைந்து நின்ற வேலியைத் தேடிக்கொண்டு போனான். நல்ல இருட்டு. தூரத்தில் இராஜபாட்டையில் அவ்வப்போது சிலர் தீவர்த்தி பிடித்துக்கொண்டு போனபோது சிறிது வெளிச்சம் வந்தது. வெகு தூரத்திலிருந்து வந்த அந்த மங்கலான வெளிச்சத்தில் இரண்டு கம்பீரமான புரவிகள் வேலிகளில் கட்டப்பட்டு நிற்பது தெரிந்தது. ஆனால் வந்தியத்தேவனைக் காணவில்லை. மெல்லிய குரலில் கூப்பிட்டும் பார்த்தான். பதிலுக்குக் குரல் கேட்கவில்லை.

"சரி; அவனாகத் தொலைந்து போனால் நல்லதாய்ப் போயிற்று" என்று கருத்திருமன் எண்ணிக்கொண்டான்.

வந்தியத்தேவனும் கருத்திருமனும் முதலில் நந்தவனக்குடிசையருகில் வந்தபோது அங்கே இருள் சூழ்ந்திருந்தது. குடிசைக்குள் எரிந்த சிறிய விளக்கிலிருந்து சில ஒளிக்கிரணங்கள் வெளியே எட்டிப் பார்த்தன.

தாமரைக் குளத்திற்குத் தண்ணீர் மொள்ளச் சென்ற வாணி அம்மை யாரோ இருவர் இருட்டில் வருவதைக் கண்டு தயங்கி நின்றாள். முதலில் வந்தியத்தேவனுடைய முகம் அவள் பார்வையில் தென்பட்டது. உடனே அவளுடைய முகம் மலர்ந்தது. முன்னொரு தடவை சேந்தன் அமுதன் அவனை அழைத்து வந்ததை அவள் மறந்துவிடவில்லை. வரவேற்புக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

பின்னால் தொடர்ந்த வந்த கருத்திருமனைக் கண்டதும் பேய் பிசாசைக் கண்டவளைப் போல் பீதி அடைந்து செயலற்றுப் பிரமித்து நின்றாள்.

கருத்திருமன் அவளுடன் சமிக்ஞை பாஷையில் பேச முயன்று, அவளு

டைய பீதியை ஒருவாறு போக்கினான்.

அவர்களிருவரையும் தனியாக விட்டு விட்டு வந்தியத்தேவன் குடிசையை அணுகினான். வாசற் கதவு அப்போது தான் தாளிடப்பட்டது. பலகணி வழியாக எட்டிப் பார்த்தான். சேந்தன் அமுதன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக முக மலர்ச்சியுடன் பூங்குழலியுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவனுக்குச் சிறிது நிம்மதி ஏற்பட்டது.

அவர்களுடைய பேச்சினிடையில் குறுக்கிட்டு விடைபெற்றுக் கொண்டு போக முயல்வது உசிதமா என்று யோசித்துக் கொண்டிருக்கையிலேயே, செம்பியன்மாதேவியும் மதுராந்



தகனும் அவர்களுடைய பரிவாரங்களும் வந்துவிட்டார்கள்.

உடனே அவன் குடிசையை விட்டு நகர்ந்து வேலியைத் தாண்டி அப்பால் குதித்தான். அங்கே கட்டியிருந்த குதிரைகளைக் கண்டதும் ஆழ்வார்க்கடியான் அந்த வரைக்கும் தன்னை ஏமாற்றி மோசம் செய்யவில்லையென்று உறுதி பெற்றான். கருத்திருமன் வரவுக்காக அங்கேயே காத்திருந்தான்.

சிவிகைகள், பரிவாரங்கள், தீவர்த்திகள் எல்லாம் போன பிறகும் கருத்திருமன் வராதிருக்கவே, வந்தியத்தேவன் பொறுமை இழந்தான்.

மீண்டும் வேலியைத் தாண்டிக் குதித்து வந்தான். மரத்தடியில் மதுராந்தகனும் கருத்திருமனும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். மதுராந்தகன் கண்ணில்பட அவன் விரும்பவில்லை. கருத்திருமனுக்கும் மதுராந்தகனுக்கும் என்ன அந்தரங்கப் பேச்சு என்ற ஐயமும் அவன் உள்ளத்தில் உதித்தது. அவர்களுடைய பேச்சில் ஒரு பகுதி அவன் காதில் விழுந்தது.

மதுராந்தகன் குடிசையை நோக்கிப் போனபோது, அவனையறியாமல் வந்தியத்தேவனும் பின் தொடர்ந்து போனான்.

மதுராந்தகன் குடிசை வாசலில் சென்று கதவை இடிக்கலாமா, வேண்டாமா என்று தயங்கி நின்றான். அப்போது உள்ளிருந்து கலகலவென்று சிரிப்புச் சப்தம் கேட்டது. அந்தச் சிரிப்பின் ஒலியினால் மதுராந்தகதேவனுடைய மனம் மாறிவிட்டதோ, அல்லது எண்ணி வந்த காரியத்துக்குத் துணிவு வரவில்லையோ, தெரியாது. உடனே திரும்பிக் கருத்திருமன் சென்ற திசையை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

வந்தியத்தேவன் அவன் கண்ணில் படாமல் தப்புவதற்காக அப்பாலிருந்த ஒரு மரத்தின் மறைவுக்குப் பாய்ந்தான். அப்படிப் பாயும்போது அவன் கண்ணில் ஒரு விபரீதமான காட்சி தென்பட்டது. குடிசைக்குப் பின்புறச் சுவரில் ஒரு பலகணி இருந்தது. அதன் வழியாகக் குடிசையில் எரிந்த விளக்கின் ஒளி சிறிது வெளியே வந்துகொண்டிருந்தது. அந்த ஒளியில் ஒரு மனித உருவம் கையில் ஒரு குட்டையான ஈட்டியுடன் பயங்கரமாக நிற்பதைக் கண்டான்.

குடிசையின் பலகணி வழியாக அந்த உருவம் உள்ளே உற்றுப் பார்த்தது.

பின்னர், ஈட்டியைப் பலகணி வழியாக உள்ளே எறியும் நோக்குடன் குறி பார்க்கத் தொடங்கியது. ஆனால் உடனே எறிந்து விடவில்லை. குறி பார்ப்பதும் மறுபடி கீழே தழைப்பதுமாக இருந்தது.

அதே சமயத்தில் குதிரைகள் புறப்படும் காலடிச் சப்தம் கேட்டது.

வந்தியத்தேவன் ஒரு கண நேரம் தத்தளித்தான். குதிரைகள் இரண்டும் போய்விட்டால் அவன் தப்பிச் செல்வது அசாத்தியமாகிவிடும்.

குதிரையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போனால் இங்கே இந்தக் கரிய நிழல் உருவம் என்ன கொடிய காரியம் செய்ய எண்ணுகிறதோ, அதைத் தடுக்க முடியாமற் போகும்.

வந்தியத்தேவனுடைய தத்தளிப்பு ஒரு நிமிட நேரத்துக்கு மேல் நீடிக்கவில்லை.

குதிரைகள் போனால் போகட்டும்; அவன் கடமை இப்போது இங்கேதான்.

கையில் ஈட்டியுடன் நின்ற கரிய உருவத்தை நோக்கி மெள்ளச் சென்றான்.

குடிசைக்குள்ளிருந்து 'வீல்' என்று ஒரு குரல், - பீதி நிறைந்த பெண் குரல், தெளிவாகக் கேட்டது.

வந்தியத்தேவன் ஜாக்கிரதையை விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்.

ஈட்டியை உள்ளே எறிய இருந்தவன் வந்தியத்தேவன் ஓடி வரும் சப்தம் கேட்டுத் திரும்பினான்.

திரும்பிய வேகத்துடன் அவன் மீது ஈட்டியை எறிந்தான்.

ஈட்டி வந்தியத்தேவனுடைய விலாவில் பாய்ந்தது. அவன் கீழே விழுந்தான்.

அவன் என்ன ஆனான் என்று கூடப் பாராமல் ஈட்டியை எறிந்தவன் அங்கிருந்து ஓட்டம் எடுத்தான்.

(தொடரும்)

சென்னை வானொலி நிலையத்தில் பண்பலை வரிசையில் தற்போது மிகவும் பிரபலமாகியுள்ள நிகழ்ச்சி 'சினிமா நேரம்'. தினமும் காலை எட்டு மணிக்கு இந்நிகழ்ச்சியைக் கேட்கும் நேயர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த நிகழ்ச்சியின் பின்னணியில் இரண்டு பேர். நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என்.ஸி. ஞானப்பிரகாசம். அவரது உதவியாளர் பனப்பாக்கம் கே. சுகுமார்.

ஜனவரி மாதம் 17ஆம் தேதி காலை எட்டு மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியதுமே நேயர்களுக்குத் தாங்க முடியாத வியப்பு. எம்.ஜி.ஆர். பேட்டியளித்துக்



# எம்.ஜி.ஆர். அளித்த பேட்டி!

கொண்டிருந்தார். அன்று அவரது பிறந்த நாள். ஞானப் பிரகாசத்தின் கேள்விகளுக்கு எம்.ஜி.ஆர். பதிலளித்துக் கொண்டிருந்ததைக் கேட்டவர்களின் மனத்தில் 'எப்படி இந்த நிகழ்ச்சியைத் தயாரித்தார்கள்?' என்ற கேள்வியே பிரதானமாக இருந்தது.

இதை ஞானப்பிரகாசத்திடமே கேட்டபோது 'கொஞ்சம் யோசனை, நிறைய பொறுமை' என்றார். அவர் தந்த முழு பதிலுக்குப் போகுமுன்பாக 'சினிமா நேரம்' தொடங்கிய கதையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஒருநாள் எங்கள் நிலைய இயக்குநர் பி.ஆர். குமார் எனக்கு அதிரடியாக ஒரு கட்டளையிட்டார். 'சினிமாவை மையமாக வைத்து நாளையிலிருந்து ஒரு நிகழ்ச்சியை நீங்கள் தினமும் காலையில் தயாரித்து வழங்க வேண்டும்' என்றார்.

"ஒரே நாள் அவகாசம் கொடுங்கள்' என்று இயக்குநரிடம் கேட்டு அன்று முழுவதும் மண்டையை உடைத்துக் கொண்டேன். மறுநாள் நான் எழுதிக் கொண்டு போய்க் கொடுத்த இருபது தலைப்புகளிலிருந்து அவர் தேர்வு செய்ததுதான் 'சினிமா நேரம்'.

**'சினிமா நேரம்' பகுதியில் ஒலிபரப்பப்பட்ட எம்.ஜி.ஆர். பேட்டியிலிருந்து ஒரு பகுதி.**

***''ஆண்டவனிடம் நாம் எனக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்கிறோமே... இது சரியா?''***

ஆண்டவனை வேண்டுவதில் தவறில்லை. நம்முடைய குறைக்கு ஆண்டவன் மீது பாரத்தைப் போடுவதுதான் தவறு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

***''சினிமாப் பாட்டுன்னா எப்படி இருக்க வேண்டும்?''***

பாட்டுன்னா அதுல பொருள் இருக்கணும். அதோடு இசையும் கலந்து இருக்கணும். 'கியாம் மூயாம்னு' வெறும் மெட்டு கேட்கறதில் சுவையில்லை. கருத்தில்லாத வெறும் வார்த்தைகளைக் கேட்கறதிலையும் பயன் இல்ல. எந்தப் பாட்டானாலும் அதுக்கு இளம் உள்ளங்களின் வரவேற்பு வேணும். பெரியவர்களின் ஆசியும் வேணும்!

***''கவிஞர் கண்ணதாசன் பற்றி தங்கள் கருத்தென்ன?''***

கவிஅரசு என்றும் அரசு கவி என்றும் புகழோடு மக்கள் மனத்திலே தனக்கென்று தனியிடம் பெற்ற கவிஞர் கண்ணதாசன் அவர்கள் உலக மக்களுக்கும் எல்லா தரப்பினருக்கும் தேவையான தத்துவங்களை மிக எளிமையாக ஆனால் உறுதியாக சொல்லி விட்டுச் சென்று இருக்கிறார்.

இந்த நூற்றாண்டில் கவிஞர் கண்ணதா

''முன்னணி கதாநாயக, நாயகியர் மட்டுமே சினிமா அல்ல. அது ஒரு கூட்டு முயற்சி. தாம் வெளிச்சத்துக்கு வராமலேயே நடிக நடிகையரை வெளிச்சம் போட்டுக் காட்டும் அந்தக் கலைஞர்களைப் பிரதானமாக இந்த நிகழ்ச்சிக்குக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன். இயக்குநரும் ஊக்கமளித்தார்.

''ஒளிப்பதிவாளர், லைட்பாய், மேக்கப்மேன் போன்ற சகலரையும் தினம் ஒருவராக நிலையத்துக்கு வரவழைக்கிறேன். இது ஒரு நேரடி ஒலிபரப்பு நிகழ்ச்சி. நடிக நடிகையரையும் அழைக்கிறேன். அவர்களும் வந்து மகிழ்ச்சியுடன் கலந்து கொள்கிறார்கள்'' என்கிறார் ஞானப்பிரகாசம்.

''நிகழ்ச்சி ஆரம்பிக்கும் முன் அவர்கள் வந்துவிட வேண்டுமே என்ற டென்ஷன் இருக்குமே?''

''நிறைய. எட்டு மணிக்கு நிகழ்ச்சி. ஏழேகால் மணிக்கு வந்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன். முதல் நாள் இரவு போன் செய்து நினைவூட்டுவேன். மறுநாள் காலையில் போன் செய்து அவர் நிலையத்துக்குக் கிளம்பி விட்டாரா என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டபின்தான் சற்று பதற்றம் குறையும். சிலர் நிகழ்ச்சி தொடங்கியபின்பு கூட வந்து கலந்து கொண்டதுண்டு.''

''யாரேனும் வராமல் இருந்ததுண்டா?''

''ஓரிரு முறை. அப்படி ஏற்பட்டால் என்ன செய்வது என்று நானே யோசித்து அதற்கு ஒரு ஐடியா வைத்திருப்பேன். வராவிட்டாலும் ஏதாவது சினிமா தொடர்பான விவரங்களைச் சொல்லி சமாளித்து விடுவேன்.''



• ஸ்ரீப்ரியா

''சரி... எம்.ஜி.ஆர். பேட்டி விஷயத்துக்கு வருவோம்.''

''எம்.ஜி.ஆர். பிறந்த நாளுக்கு என் கேள்விகளுக்கு அவர் பதில் சொல்லுவது மாதிரி நிகழ்ச்சி அமைய வேண்டும் என்று விரும்பினேன். நண்பர்களிடம் சொன்னபோது 'அடி சக்கை... எம்.ஜி.ஆர். சமாதிக்கும், வானொலி நிலையத்திற்கும் 'ஹாட் லைன்' போடப் போறியாக்கும்' என்று கிண்டலடித்தார்கள். நான் அதைச் சவாலாகவே எடுத்துக் கொண்டேன். எங்கள் நிலைய வானொலிக்

சனைப் போல் பல்லாயிரக்கணக்கான பாடல்களை, உரைநடை இலக்கியங்களை, கவிதைகளைப் படைத்த கவிஞர்கள் வேறு யாருமே இல்லை.

காப்பியங்களைப் படைத்த கம்பனாக, இளங்கோவாக, ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் இணைத்த வள்ளலாராக, புதுமைக் கவிதை படைத்த பாரதியாக, புரட்சிக் கவிதை படைத்த பாரதி தாசனாக, தேவாரம், திருவாசகம் திருப்பாசுரம், என்ற ஆன்மிக நெறிகளைப் பாடிய அரும் பெரும் புலவர்களாக, இப்படி பல கோணங்களில் பலரும் வியக்கும் வண்ணம் தமிழ்க் கவிதைகளைப் படைத்தவர் என்ற பெருமை கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கே உண்டு.

இணைத்து, சரியாக எடிட் செய்தேன். நிகழ்ச்சி பெரிய வெற்றி. நூற்றுக் கணக்கில் போன்கால்கள். மகிழ்ச்சியும் வியப்பும் கலந்த பாராட்டுகள். அரசியல் கட்சிப் பிரமுகர்கள் உள்ளிட்ட பலபேர் அந்த ஒலிப்பதிவுத் தங்களுக்குத் தேவை என்று கேட்டிருக்கிறார்கள்."

ஸ்ரீப்ரியா, டெல்லி கணேஷ், நாசர், கார்த்திக்ராஜா, ஸ்ரீவித்யா, எம்.என். ராஜம், 'சித்தி' புகழ் யோகி (அஜய்ரத்னம்), ஒலிப்பதிவாளர் செந்தில் குமார், தமிழக அரசின் விருது பெற்ற திரைப்படக் கல்லூரி மாணவ மாணவியர் என்று சினிமா நேரத்தில் பங்கேற்றுள்ளவர்களின் பட்டியல்



• சுகுமார் • அஜய்ரத்னம் • ஞானப்பிரகாசம்

களஞ்சியத்தில் தஞ்சமடைந்தேன். அங்கே பாதுகாக்கப்பட்டு வரும் ஏராளமான ஒலிப்பதிவு நாடாக்களில் எம்.ஜி.ஆர். பல்வேறு சமயங்களில் ஆற்றிய உரைகள் அடங்கிய டேப்களில் இருந்து முக்கியமானவற்றைத் தேர்வு செய்து அதை பொறுமையுடன் போட்டுக் கேட்டேன். அவற்றுக்கேற்ப கேள்விகளை உருவாக்கி என் குரலில் பதிவுசெய்து கொண்டேன். பின்னர் அவற்றுக்குப் பொருத்தமான பதில்களை எம்.ஜி.ஆர். உரைகளிலிருந்து எடுத்து மறு ஒலிப்பதிவு செய்து என் கேள்விகளோடு

நீளுகிறது.

'இந்த நிகழ்ச்சியைத் தயாரிப்பதில் எனக்கு ஒரு வகையில் திருப்தி' என்கிறார் ஞானப்பிரகாசம்.

"நான் சினிமாவில் பின்னணிப் பாடகனாக ஆசைப்பட்டு சென்னை மண்ணில் கால் வைத்தவன். இப்போது சினிமாப் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறேன். எப்படியோ திரைப்பாடல்களோடு எனக்கு உறவு இருந்து கொண்டிருக்கிறது."

— ராணி மைந்தன்

**மா**நகராட்சித் திடல் சுத்தம் செய்யப்பட்டுத் தோரணங்களும் வளைவுகளுமாக அமைச்சரின் வருகைக்காக காத்திருந்தது.

திடலின் ஒரு பக்கம் 'ப' வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்த கடைகளில் வெவ்வேறு பதிப்பகத்தார் ஏராளமான புத்தகங்களை அடுக்கியிருந்தனர்.

மறுபக்கம் மேடை, ஷாமியானா பந்தல்.

மேடையில் சில ராஜபார்ட் நாற்காலிகள். பல பிரம்புப் பின்னல் நாற்காலிகள். பின்பக்க ஷாமியானாவில் 'படிக்கும் பழக்கத்தை விரிவு படுத்தும் விழா' என்ற வாக்கியம் பெரிய எழுத்து பேனராக பொருத்தப்பட்டிருந்தது.

விழாவில் சிறப்புரையாற்றி, புத்தக விற்பனையைத் துவக்கி வைக்க அமைச்சர் வருவதாயிருந்தது. எல்லோரையும் விழாவுக்கு வரும்படி அழைக்க பத்திரிகை விளம்பரங்கள் முழு பக்கங்களில் முழங்கியிருந்தன. அதைப் படிக்காதவர்களின் கவனத்தைக் கவர தெருவெல்லாம் வண்ணச் சுவரொட்டிகள். மாலை விழாவிற்குக் காலையிலிருந்தே போலீஸ் காவல். ஜீப்களும், வேன்களும் டீசலைத் தண்ணீராகச் செலவழித்தன. அதிகாரிகள் அணி அணியாக வந்து ஆளுக்கொரு உத்தரவு போட்டுச் சென்றார்கள்.

மதியத்திற்கு மேல் சிவப்பு, பச்சை, நீலம், வெள்ளை என்று வெவ்வேறு வண்ணங்களில் சீருடை அணிந்த மாணவ, மாணவிகளை பஸ்கள் இறக்கின. அவர்களது 'மேய்ப்



# விழா


பர்'களும், கூடவே வந்தார்கள். கல்லூரி மாணவ மாணவிகள், பொதுமக்கள், தொண்டர்கள் என்று திடல் நிரம்பி வழிந்தது.

அமைச்சரின் கை படும் பாக்கியத்திற்காக புத்தகங்கள் காத்திருந்தபோது அவர் முக்கியமான வேலையினால் வர இயலவில்லை என்றும், விழாவை எம்.எல்.ஏ. தொடங்கி வைப்பார் என்றும் பேச்சு பரவியது.

முக்கியமான வேலை, நடிகையின் அக்காவுக்கு நிச்சயதார்த்தம் என்று பேசிக் கொண்டார்கள்.

"மந்திரி பேச்சு ஜாலியா இருக்கும்னு வந்தா, எம்.எல்.ஏ.வ்லா பேசப் போறானாம். அவன் டிங்கரிங் கடை வச்சிருந்த பயலாச்சே! அவனுக்கு என்ன பேசத் தெரியும்?" என வருத்தப்பட்டது பொது ஜனம் ஒன்று.

அவர் பயந்தது போலவே எழுதித்தந்த



பேச்சை மேடையில் பார்த்துப் படிக்கும் பழக்கத்தை விரிவுபடுத்த பிள்ளையார் சுழி போட்டார் எம்.எல்.ஏ. படிப்புக்காக மத்திய மாநில அரசுகள் எத்தனை கோடிகளைச் செலவழிக்கின்றன என்ற புள்ளிவிவரங்களும், நூலகங்களுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என்ற விவரத்தையும் வாய்ப்பாடு ஒப்பிப்பதுபோல ஒப்பித்து முடித்து, வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.


இந்தப் பணமெல்லாம் எங்கே போகிறது என்று பதிப்பகத்தார்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் போதே முதல் கடையில் கட்டியிருந்த ரிப்பனை வெட்டி சம்பிரதாயமாக புத்தக விற்பனைக்குக் கடைகளைத் திறந்து வைத்தார் எம்.எல்.ஏ. காமிரா வெளிச்சங்கள் மின்னி மின்னி மறைந்தன.

புத்தம் புது காகிதங்களின் மணத்தை நுகர்ந்து கொண்டே கடையினுள் மெல்ல தன் பார்வையை ஓட்டினார் எம்.எல்.ஏ.

ஒரு பளபளப்பான அட்டைப் படத்தைப் பார்த்து ஆவலாக புத்தகத்தைப் புரட்டினார். வேறு படங்களே காணாததால் அசுவாரஸ்யமாக அதை மூடினார். அதற்குள் பல 'பளிச்'கள். மறுநாள் பிரசுரத்திற்கு எம்.எல்.ஏ. புத்தகம் படிப்பது போன்ற படம் கிடைத்ததில் சில பத்திரிகைகாரர்களுக்கு மெத்த மகிழ்ச்சி.

டிங்கரிங் கடையைப் போன்ற எந்தக் கவர்ச்சியும் இதில் இல்லாததால் முதல் கடையோடு எம்.எல்.ஏ. வெளியேறினார்.

பேருந்து மாணவ மாணவிகளை அள்ளிச் செல்ல, போலீசார் காப்பி சிகரெட்டுக்கு ஒதுங்க, புத்தகங்களைப் பார்க்க சிலரும், வெட்டியாகப் பலருமாக ஸ்டால்கள் நிரம்பின. இன்னும் இருட்டவில்லை, அதனால் நிதானமாகப் பார்த்து புத்தகம் வாங்க வேண்டும் என்று நினைத்திருந்த கந்தசாமி, நாளை, கூட்டமில்லாத சமயத்தில் வரலாம் என்று தீர்மானித்து வெளியே வந்தான்.



பஸ் ஸ்டாப்பில் ஓரளவு கூட்டம் இருந்தது. கந்தசாமி ஆறாம் நம்பர் பேருந்தை எதிர்பார்த்து நின்றான். பெரும் இரைச்சலோடு ஒரு பேருந்து வந்து நின்றது. "ஐயா, இது எத்தனாம் நம்பர் பஸ்? எங்க போகுது?" முப்பது முப்பத்தி ஐந்து வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி கந்தசாமியிடம் கேட்டாள்.

"சாந்தி நகர் போகுது."

"கண்டனூர் போகாதா?"

"போகாது."

இருட்டுவதற்குள் பேருந்து கிடைக்க வேண்டுமே என்ற கவலை அந்தப் பெண்ணின் முகத்தில் தெரிந்தது.

கந்தசாமி ஒரு சிகரெட் பற்ற வைப்போமா என்று நினைத்தபோது ஆறாம் நம்பர் பேருந்து உறுமிக் கொண்டு வந்தது.

"சாமி, இது எத்தனாம் நம்பர்? எங்க போகுது?"

"பேங்க் காலனி" பதில் சொல்லிவிட்டுப் பேருந்தில் ஏறி அமர்ந்தான் கந்தசாமி.

பேருந்து புறப்பட்டபோது பின்னால் வந்து கொண்டிருந்த அடுத்த பேருந்து எங்கே போகிறது என்று புதிய ஆள் ஒருவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். எம்.எல்.ஏ. மேடையில் அள்ளித் தெளித்த புள்ளி விவரங்கள் அவன் காதில் திரும்பவும் ஒலித்தன. ○



"அருமையான காதல் கதை ஒண்ணு வச்சிருக்கேன் சார்..."

"இப்பல்லாம் அம்மன் படங்கள் தான் சார் ஓடுது..."

"அதனால் என்ன சார்.... படத்துக்கு 'காதல் அம்மன்'னு டைட்டில் வச்சிட்டாப் போகுது!"

– சீர்காழி வி. ரேவதி

# சென்னை டு சைனா 7

'மெட்ரோ' ஷாப்பிங் சென்டரில் அரை நாள் போனது தெரியவில்லை. அத்தனை பிரும்மாண்டம். உள்ளே பொருள்களை அடுக்க ஃபோர்க் லிஃப்ட் வண்டியை (குட்டி டிராக்டர்தான்!) அநாயாசமாக ஓட்டி வரும் பெண்மணி, 'சடக் சடக்'கென்று அதை இயக்கி, ஸூட்கேஸ்களையும், கனமான அட்டைப் பெட்டிகளையும் மகா உயரத்தில் அடுக்குவது சாதாரணக் காட்சி. (வியாபாரக் கூடங்கள், விமானக் கூடங்கள், ஓட்டல்கள் என்று எங்கே போனாலும் பெண்கள்தாம்!

இரவு ஏழரை மணிக்கு சீன அக்ரோபாடிக்ஸ் காட்சிக்கு முதல் வரிசையிலேயே, டிக்கட் வாங்கி வைத்திருந்ததால், நான்-ஜிங்-ஸி சாலையில் ஷாங்காய் சென்டர் தியேட்டருக்குப் பறந்தோம்.

ஜிமே முழுக்க முழுக்க இயற்கை எழில் சூழ்ந்த மாதிரி நீர்வீழ்ச்சி; சுற்றிலும் கண்ணைக் கவரும் வகையில் அலங்கரிக்கப்பட்ட அலுவலகங்கள்-அமெரிக்க கான்ஸலேட் உட்பட.

எஸ்கலேட்டரில் முதல் தளத்துக்குப் போனால், சுமார் 1500 பேர் உட்காரக் கூடிய வசதி கொண்ட பளபளப்பான ஆடிட்டோரியம்.

உருளையில் ஏறி நின்று பாலன்ஸ் பண்ணியபடியே ஒன்றன் மீது ஒன்றாக மேசையில் நான்கு தட்டுக்களை விளிம்பில் நிற்கிறாற்போல் சுழற்றிவிட்டுவிட்டு, அடுத்த மேசை அடுத்த மேசை என்று பத்து



# பேரம் பேசினாலும் நன்றி!

பீங்கான் கப்புகளைக் குறிபார்த்து அடுக்கி வைத்துக் கொண்டுவிட்டு, கடைசியாக ஸ்பூனைக் கூடக் காலால் மேலே எறிந்து கப்பில் விழவைக்கிற போது அரங்கம் கைதட்டலில் அதிர்கிறது.

இதில் நகைச்சுவை அம்சங்களையும் சேர்த்துக் கரகோஷம் பெறுகிறார்கள். ஒரு மேசைகளில் தட்டுக்களைச் சுழல விடுகிறார் உதவிக்கு இருக்கும் பெண்மணி. ஏழாவது மேசையைச் சுற்றிவிட்டு, எட்டாவது மேசைக்குப் போவதற்குள் முதல் மேசையில் உள்ள தட்டுக்கள் சுழலுவதை

**சாருகேசி**












நிறுத்த. அங்கே ஓடு கிறார் பெரியவர். அவற்றை விழாமல் மறுபடி சுழல வைப்பதற்குள், ஒன்பதாவது மேசையைத் தட்டுகளோடு இழுத்துக் கொண்டு வந்து, 'உம்' என்கிறார் உதவிப் பெண் மணி!

இரண்டு மணி நேரம் 1500 பார்வையாளர்களைக் கட்டிப் போட்டுவிடுகிறது நிகழ்ச்சி. உள்ளூர்வாசிகளைவிட டூரிஸ்ட்டுகள்தாம் ஏராளம்.

**ம**றுநாள் ஷாங்காய் மியூசியம்.

ரென்-மின்-டா சாலையில் இருக்கும் ஷாங்காய் மியூசியத்தில் நிலப்பரப்புக்குக் கீழே இரண்டு தளங்கள். மேலே ஐந்து தளங்கள். அனுமதிச் சீட்டுக்கு 20 யுவான். க்யூவில் நிற்க வேண்டும்! ஆமாம், இங்கேயும் டூரிஸ்ட்டுகள் மயம். (பரிதாபமாய் ஹோவென்று காலியாய்ப் பார்த்துப் பழகிய நம் நாட்டு மியூசியங்கள் நினைவுக்கு வந்து வதைத்தன) எந்த எந்த தளத்தில் என்னென்ன இருக்கின்றன என்பதை அறிய



## ராமேஸ்வரம் கும்பாபிஷேகத்தில் ரகுமான்கான்!

ஐந்து லட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்த்த ராமேஸ்வரம் குடமுழுக்கு விழாவில் ஒரு லட்சத்திற்கும் குறைவானவர்களே கலந்து கொண்டனர்.

"இந்துக்கள் அல்லாதவர்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை" என்பதால் அமைச்சர் ரகுமான்கான் சுற்றுப் பிராகாரத்திற்கு வெளியே இருந்து குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டார். அமைச்சர் தமிழ்க்குடிமகன் சுவாமி சந்நிதி விமானத்தின் மேல் ஏறி நின்றார். "திருக்கோயில் திருப்பணி வேலைகள் சரிவர நடைபெறாமல் குடமுழுக்கு விழா நடந்து விட்டது" என்பதே கலந்து கொண்டவர்களின் பேச்சு...

**— கி. சிங்காரவடிவேல்**

அழகான கையேடு கொடுத்து விடுகிறார்கள். 40 யுவான் கொடுத்தால் இயர்ஃபோன் மற்றும் ரிமோட் கன்ட்ரோல் சாதனம் கையோடு தருகிறார்கள். அந்தந்தப் பகுதிகளில் போய், ரிமோட்டில் அந்தச் சிலை அல்லது பொருள் அல்லது பெயின் டிங்கின் எண்களைத் தட்டினால் அவை பற்றிய சகல விவரங்களும் ஆங்கிலத்தில் நம் காதில் பொழிகின்றது!

வெண்கல காலரி, சிற்ப காலரி, பீங்கான் காலரி, நாணயங்கள் காலரி, சீனச் சிறுபான்மையினர் காலரி, ஜேடு (மரகதம்) காலரி, ஃபர்னிச்சர் காலரி என்று ஒவ்வொன்றுமே விசாலமானவை. இவை தவிர எக்ஸிபிஷன் ஹால்கள்.

செராமிக் (பீங்கான்) பகுதியில், ஜே.எம்.ஹூ என்ற தனிநபர் ஒருவர் 1911 முதல் 1995 வரை சேர்த்த ஐட்டங்களை வைத்திருக்கிறார்கள்! இவற்றில் காங்-ஸி காலத்து சிவப்பு, நீல, மஞ்சள், பிரவுன், கறுப்பு நிற பீங்கான் கலைப் பொருட்களைப் பார்த்தால், சீனக் கைவினைக் கலைஞர்களின் திறமை நம்மைப் பிரமிக்க வைக்கிறது.

நியோ-லீதிக் காலம் தொட்டு, மிங், க்விங் சக்ரவர்த்திகளின் காலம் தாண்டி, இன்றைய நவீன படைப்புக்களையும் எல்லா அரங்குகளிலும், தங்கள் கலாசாரப் பரம்பரையைப் பறைசாற்ற என்றே வைத்திருக்கிறார்கள்.

ஷாங்காயிலிருந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள 'வாட்டர் வில்லேஜ்' இன்னொரு டூரிஸ்ட் ஸ்பாட். யாங்-ஸி நதி பாயும் ஐந்து குட்டி நகரங்களில் நாங்கள் போன ஸூ-ஜியா-ஜ்யோவ் வித்தியாசமாய் இருந்தது.

வெனிஸ் போல, ஊருக்குள்ளேயே நதி ஓடுகிறது. படகில் ஒரு சுற்றுச் சுற்றிக் காட்டி வர டிக்கட், ஒரு நபருக்கு 10 யுவான்.

நகர் முழுக்கக் கடைகள், கடைகள், கடைகள்! ஒவ்வொரு

## பரபரப்பில் அரவக்குறிச்சி

ஒரே கூட்டணியிலிருக்கும் மூன்று கட்சிகள் அரவக்குறிச்சியில் போட்டியிட மல்லுக்கு நின்று கொண்டிருக்கின்றன. வைகோ தனிக்கட்சித் துவங்கியது இந்த மண்ணில்தான் என்பதால் தொகுதியைக் தாங்கள் கைப்பற்ற மதிமுக சுறுசுறுப்புடைய மற்றக் கட்சிகளும் தங்கள் பங்குக்கு சுறுசுறுப்பைக் காண்பிக்கத் தொடங்கி விட்டன.

இத்தொகுதியின் இப்போதைய எம்.எல்.ஏவும் தமிழ் மாநில தேசிய லீக் பிரமுகருமான முகமது இஸ்மாயில், திமுக கூட்டணியில் தொகுதியை மீண்டும் கைப்பற்றிவிடத் துடிக்கிறார். திமுக மட்டும் சளைத்ததா என்ன? இந்த முறையாவது அரவக்குறிச்சியைத் தங்கள் பக்கம் இழுத்துவிட கங்கணம் கட்டிக் கொண்டு பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருக்கின்றனர் உடன்பிறப்புகள்.

**— திருநாவுக்கரசு**

குட்டித் தெருவிலும் சிறுசிறு கடைகள். அதிலும் சாப்பாட்டு நேரம் என்றால், என்னென்னவோ மணங்கள் நாசியைத் துளைக்க, ஒவ்வொன்றிலும் விதவிதமான தயாரிப்புகள்!

எம்பிராய்டரி, பெயின்டிங் என்று கைவினைப் பொருள் வியாபாரம். மூங்கிலில் கைவினைப் பொருட்கள், அவை மூங்கில்தானா அல்லது பிளாஸ்டிக் போன்ற வேறு ஏதாவதா என்று யோசிக்க வைக்கும் அளவுக்கு வர்ணத்தில் பளபளக்கின்றன...

**ஷா**ங்காய் நகரில் வேறு எந்தச் சுற்றுலா இடத்தையும்விட, யோயுவான் ஷாப்பிங் ஏரியா இருக்கிறதே, அது தனி அந்தஸ்து பெற்றது.

கார் நிறுத்த தனி இடம். அதில் அதிர்ஷ்டம் இருந்து இடம் கிடைப்பது நம் பாக்கியத்தைப் பொறுத்த விஷயம். ஒரு திருவிழா நடப்பது மாதிரியான சூழ்நிலை தான்.

கடைகளோடு கடைகளாக, சீன டாக்டர்களும் தங்கள் கிளினிக்கைத் தெருவுக்குக் கொண்டுவந்து விடுகிறார்கள்.

புராதனப் பொருட்கள்-விற்பனை செய்யும் இடங்கள் என்று தனியாக ஒரு கீழ்த் தளம் முழுக்க. பேரம் பேசினால் கோபித்துக் கொள்ளாத நட்பான வியாபாரிகள். கடைசியாக, நாம் கேட்கிற விலைக்குக் கொடுத்தாலும்கூட முகத்தில் புன்சிரிப்புடன், 'ஷெஷெ!' என்று விடை கொடுக்கிறார்கள்.

நகரின் ஒரு பகுதி முழுக்க, இப்படி வியாபார ஸ்தலமாகவே இருப்பது வியப்பாகத் தானிருக்கிறது.

இங்கே அலைமோதும் கூட்டம் பெரும்பாலும் ஜப்பானிய, ஐரோப்பிய, அமெரிக்கச் சுற்றுலாப் பயணிகள்.

இத்தனை கூட்டம் தினசரி கூடுகிறதே, அப்படியானால் தெருக்கள் எப்படி இருக்குமோ என்று கவலைப்பட வேண்டாம். நகர வீதிகள் எத்தனை சுத்தமாக இருக்கின்றனவோ, அத்தனை சுத்தமாக இருக்கின்றன!

2008ல் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பெய்ஜிங்கில் நடைபெற, இப்போதே தங்கள் குரல்களை உயர்த்தியிருக்கிறார்கள் சீனர்கள்.

பத்திரிகைகள் அதற்கான தகவல்களை இப்போதே கொடுக்க ஆரம்பித்துவிட்டன!

— அடுத்த வாரம்

## அன்பளிப்பு:

இந்த இதழுடன்
**கர்ப்பரக்ஷாம்பிகை** வண்ணப்படம்.
அடுத்த வார அன்பளிப்பு:
**ஊத்துக்காடு காளிங்க நர்த்தன கிருஷ்ணன்**
வண்ணப்படம்

## சுகப்பிரசவம் ஏற்பட சுலோகம்

ஹே சங்கர சமரஹ
பிரமதாதி நாகரி மன்னாத
சரம்ப சரிசூட ஹரதிரிசூலின்
சம்போ சுகப்பிரசவ
கிருத்பவமே
தயாளோ
ஹே மாதவி வனேச பாலயமாம்
நமஸ்தே!

இந்தச் சுலோகங்களை ஜபித்து வந்தால் திருக்கருகாவூரில் உறையும் கர்ப்பரக்ஷாம்பிகையின் அருள் பரிபூரணமாக கிடைக்கும். புத்திரபாக்கியம் நிலைக்கும்.

## கருவைக் காக்கும் சுலோகம்

ரக்ஷ ரக்ஷ மகாதேவ
பக்த அநுக்ரஹ காரஹ
பக்ஷி வாஹன கோவிந்த
சாபத்யாம் ரக்ஷ கர்பிணீம்!

# மின்னலே



கல்லூரி நாட்களில் எதிரும் புதிருமாக இருந்துவிட்டு, இனி நாம் சந்திக்கவே வேண்டாம் என்று தொண்டை நிறைய கசப்போடு 'குட்பை' சொல்லிப் பிரிந்து விடுகிறார்கள் மாதவனும் அப்பாஸும். ஆனால் திரும்பச் சந்திக்கிறார்கள். திரும்ப மோதிக் கொள்கிறார்கள். இரண்டாவது இன்னிங்ஸ் மோதலுக்குக் காரணம் காதல். ரீமாவின் மேல் காதல்.

தேவதை சாயலில் இருக்கும் பெண் ஒருத்தியைச் சந்தித்தால் மட்டுமே காதலிப்பது என்று விரதம் எடுத்துக் கொள்கிற மாதவன் ஒரு மழை நாளில் மின்னலாய் வந்து மறைந்து போகிற ரீமாவால் சபதத்தை முடித்துக் கொள்கிறார். (டைட்டில் ஜஸ்டிஃபிகேஷனைக் கவனிக்க!). ஃபாஸ்ட்-புட் ஜாயிண்ட்டில் சிக்கன் வறுவலுக்கு ரீமா ஆர்டர் செய்ய, சுத்த சைவமாகிய மாதவன் காதலுக்காக அதைக் கஷ்டப்பட்டு சாப்பிடும் பொழுது அருவருப்பும் சமாளிப்புமாக ஜமாய்க்கிறார்.

ரீமா ஏற்கெனவே அழகு. போதாதற்கு சேத்தனின் டேஸ்ட்ஃபுல் காஸ்ட்யூம்கள். போனஸாக நடிக்கவும் செய்திருக்கிறார்.

ஒரு சில காட்சிகள்தான் என்றாலும் அப்பாஸின் ரோலும் நடிப்பும் கச்சிதம்.

மென் ஆஃப் தி மாட்ச்- 'கொஞ்சம் மணி ரத்னம் + கொஞ்சம் ராஜீவ்மேனன்' கலப்படத்தோடு ஒவ்வொரு 'ஃப்ரேம்'ஐயும் விளம்பரப்பட நேர்த்தியோடு கையாண்டு இருக்கும் இயக்குனர் கௌதமும், இளமையை துள்ளோ துள்ளென்று துள்ளவிட்டிருக்கும் இசையமைப்பாளர் ஜெயராஜும்.

நகைச்சுவையோடு ரவுடித்தனத்துக்கு குடிபெயர்ந்திருக்கிறார் விவேக்!

படத்தின் தொடக்கத்திலேயே காலேஜ் சீக்குவென்ஸ் வந்து விடுவதால் ரீமாவுக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை அப்பாஸ் என்கிற சிதம்பர ரகசியம் ஃபணால்!

தமிழ்ப் பட ஃபார்முலா க்ளைமாக்ஸ் நெருடினாலும் 'மின்னலே' இளசுகளின் நெஞ்சத்தை வருடும்!

— விஷுவல்தாசன்

○ ஃபெயில் ○ ஜஸ்ட் பாஸ் ○ ஆவரெஜ் ● அபவ் ஆவரெஜ் ○ டிஸ்டிங்ஷன்

# குறைவாக வரி செலுத்த 3 வழிகள்




## இணையற்ற திட்டம். இணையற்ற ஆதாயங்கள்.

**திட்டம்** : கால வரம்பற்ற வரிசேமிப்பு மற்றும் காப்பீடு திட்டம்.

**காப்பீடு வரம்பு** : செலுத்தப்படாத ஆனால் காலாவதியாகாத இலக்குத்தொகை வரையிலான ஆயுள்காப்பீடு.

**இரு திட்டங்களின் தேர்வு** : 10 ஆண்டு / 15 ஆண்டு

**இலக்குத் தொகை** : குறைந்தபட்சம் ரூ.15,000/– அதிகபட்சம் ரூ. 75,000/–

**போனஸ்** : முதிர்வின்போது இலக்குத் தொகையில் 5% / 7.5%.

**வரி ஆதாயங்கள்** : முதலீட்டாளர் மற்றும்/அல்லது அவரது துணைவர் மற்றும்/அல்லது அவரது குழந்தை பெயரில் செய்யப்படும் முதலீடுகளுக்கு வரிக்கழிவு.

**கூடுதல் ஆதாயங்கள்** :

- தனி நபர் விபத்துக் காப்பீடு ரூ. 50,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- வாராந்திர என்ஏவியில் விற்பனை/மறுகொள்முதல் 1.5% மேலே/கீழே எனும் நிலை
- முதிர்வின் போது/பின்பு பலவிதத் தேர்வுகள்
- முதிர்வுக்கு பின்பு கூடுதல் போனஸ்

## UTI Retirement Benefit Plan

**யூடிஐ ரிடையர்மெண்ட் பெனிஃபிட் பிளான்** : இப்போது வரிக்கழிவு பெறுவதற்கும், ஓய்வுபெற்ற பின்பு ஓய்வூதியம் பெறுவதற்கும் ஏற்ற இரட்டை ஆதாயத் திட்டம்.

**உடனடியாக வரியில் ஆதாயம்** : ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60,000 வரையிலான முதலீட்டுக்கு வரிக் கழிவு.

**மாதாந்திர ஓய்வூதியம் அல்லது மொத்தமாக தொகை பெறுதல்** : 58 வயது முடிந்தவுடனோ அல்லது 53 வயதிலிருந்து 60 வயதுக்குள் சேர்ந்திருந்தால் திட்டத்தில் சேர்ந்து 5 ஆண்டுகள் ஆன பின்பு பெறலாம்

## UTI Equity Tax Savings Plan

- ஈக்விடிகள் சார்ந்த காலவரம்பற்ற வரி சேமிப்புத் திட்டம்.
- குறைந்தபட்ச முதலீடு : ரூ.500 மற்றும் அதன் மடங்குகளில்
- ஒவ்வொரு முதலீட்டின் தேதியிலிருந்து 3 ஆண்டுகள் லாக்–இன்பீரியட்.
- வரி ஆதாயங்கள் : ஆண்டு ஒன்றுக்கு ரூ.10,000 வரையிலான முதலீட்டுக்கு வரிக்கழிவு.

**பிப்ரவரி 28ம் தேதி வரை முதலீடு செய்வோர் யூனிட்டுக்கு ரூ.1.20 எனடிவிடெண்ட் பெற தகுதியுடையோர் ஆவார்கள்.**

**எந்த ஒரு திட்டத்திலோ அல்லது எல்லா திட்டங்களிலுமோ முதலீடு செய்து வருமான வரிச் சட்டம் பிரிவு 88ன் கீழ் 20% வரிக் கழிவு பெறுவீர்!**

# யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

**இந்தியாவின் மிகப் பெரிய மியூச்சுவல் ஃபண்ட்**

13, சர் விட்டல்தாஸ் தாக்கர்சி மார்க், நியூ மெரைன் லைன்ஸ், மும்பை 400 020.
தொ.பேசி: 2031818. எங்கள் இணையதளம் www.unittrustofindia.com

**கூடுதல் விபரங்களுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவம்/வழங்கு பத்திரம் பெறுவதற்கும் உங்களுக்கு அருகிலுள்ள யூடிஐ அலுவலகம் அல்லது முக்கிய பிரதிநிதி, முகவரை தொடர்பு கொள்ளவும்.**

சட்ட அமைப்பு: யூடிஐ 1963 யூடிஐ சட்ட விதிகளின்கீழ் செயல்படுகிறது **இடர்ப்பாடுகள்**: மியூச்சுவல் ஃபண்ட்கள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் முதலீடுகள் மார்க்கெட் [illegible] மற்றும் செக்யூரிட்டிகள் மார்க்கெட்டை பாதிக்கும் காரணங்களால் திட்டத்தின் யூனிட்களின் என் ஏ வி ஏறவோ, இறங்கவோ செய்யலாம். கடந்த கால செயல்திறன் [illegible] யூஎஸ், யூடிஐ ஆர்பிபி மற்றும் யூடிஐ ஈடிஎஸ்பி போன்றவை ஃபண்ட்களின் பெயர்களே தவிர, எந்த விதத்திலும் ஃபண்ட்களின் தரம், [illegible] ஃபண்டின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது. முதலீடு செய்யும் முன், வழங்கு பத்திரத்தை படிக்கவும்.

**தென் மண்டல அலுவலகம்** : சென்னை தொ.பேசி: (044) 5210347. **கிளை அலுவலகங்கள்**: சென்னை தொ.பேசி: 5210356, 5230985. • கோயம்புத்தூர் தொ.பேசி: 214973. • மதுரை தொ.பேசி: 738186. • திருச்சி தொ.பேசி: 760060. **சேட்டிலைட் அலுவலகம்**: சேலம் தொ.பேசி: 416414. **சிறு கலெக்‌ஷன் மையங்கள்**: குன்னூர் தொ.பேசி: 31037. • கடலூர் தொ.பேசி: 21712. • தர்மபுரி தொ.பேசி: 61012. • திண்டுக்கல் தொ.பேசி: 432244. • ஈரோடு தொ.பேசி: 252494. • காஞ்சிபுரம் தொ.பேசி: 20076. • காரைக்குடி தொ.பேசி: 22277. • மயிலாடுதுறை தொ.பேசி: 26739. • நாகர்கோவில் தொ.பேசி: 40274. • பாண்டிச்சேரி தொ.பேசி: 339080. • ராஜபாளையம் தொ.பேசி: 21360. • தஞ்சாவூர் தொ.பேசி: 31374. • திருநெல்வேலி தொ.பேசி: 339567. • தூத்துக்குடி தொ.பேசி: 325621. **யூடிஐ பாங்க்**: அடையார் தொ.பேசி: 4464442/43/44. • அண்ணாநகர் தொ.பேசி: 6289045. • டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை தொ.பேசி: 8231083. • ராமாபுரம் தொ.பேசி: 2492184/85/86 • தி.நகர் தொ.பேசி: 8239134–35.

**எய்ட்ஸை தடுப்பீர் – அனைவரையும் நேசிப்பீர்.**

009/2-2001 C TAM C

# இல்லை...



'**வெ**னிலா ஐஸ்க்ரீம் என்றால் புதுக் காருக்கு அலர்ஜியா...?'ன்னு மண்டையை உடைச் சுட்டிருக்கிற மன்ற உறுப்பினர்களுக்கு சுமி சொல்லிக்கொள் வது யாதெனில்...

புதுக் கார் உரி மையாளர்–அதான் போன முறை நான் சொன்ன ஐஸ்க்ரீம் ப்ரியர்– டெய்லி ஒரே கடைல போய் ஐஸ்க்ரீம் சாப்டுவார். பட், ஒவ்வொரு நாளைக்கு ஒவ் வொரு ஃப்ளேவர்– அதுல பாருங்க வெனிலா ஃப்ளேவர் மட்டும் உடனே கப்ல போட்டுத் தர்ற மாதிரி கடைக்குள்ள நுழைஞ்சதுமே இருந் தது. மத்த ஃப்ளே வர்கள் கொஞ்சம் தள்ளி வெவ்வேற இடங்கள்ல... நம்ம கஸ்டமர் வெனிலா வாங்கற அன்னிக்கு மட்டும் ரொம்ப குவிக்கா காருக்குத் திரும்பிடு வார். மத்த நாள்ல கொஞ்சம் கூடுதலா டைம் ஆகும். குவிக்கா திரும்பிட்டா எஞ்சின் கூல் ஆகி ரீ ஸ்டார்ட் ஆக டைமிருக்காது– அத னால புதுக்கார்ல ஸ்டார்டிங் டிரபிள்!

உடனே காரை ஸ்மூத்தா ஸ்டார்ட் பண்றதுக்கு உதவுற ஒரு பார்ட்டைச் சரி பண்ணின பிறகு பிராப்ளம் ஸால்வ் ஆயிடுச்சு!

கார் உற்பத்தி பண்ணின கம்பெனில புகார் கொடுக்க, அவங்க ஒரு மெக்கானிக்கை அனுப்பி கூடவே இருக்க வைச்சு இந்த ரீசனைக் கண்டுபிடிச்சிருக்காங்க.

இந்தக் குட்டிக் கதையை எதுல படிச்சேன்னு நினைக் கறீங்க...? 'திங்க் ஐ'ம் பாஸிபிள்' என்ற பேரோட முருகப்பா க்ரூப் வெளியிட்டிருக்கற ஒரு அழகான ஹவுஸ் மாகஸீன்ல! பிரமாதமான கெட்அப்போட இதுமாதிரி சின்ன சின்னதா நிறைய பாஸிடிவ் விஷயங்களோட வந்திருந்தது– பட் இங்க்லிஷ்லதான் முழுக்க...

சுமியையும் அவரோட தமிழ்க் கொலையையும் சோர்வில் லாமல் கண்டித்துக் கொண்டேயிருக்கும் 'மைனாரிடி' கோபித் துக் கொண்டாலும் பரவாயில்லை. இன்னும் இரண்டு இங்க்லிஷ் புக்ஸ் பத்தி இந்த வாரம் சொல்லணும்.

ஒண்ணு: லாஃபிங் டாப்லெட்ஸ்– ஜம்புநாத் என்கிற, ஜம்பு என்கிற, ஜே.எஸ்.ஆர். என்கிற ஜே.எஸ். ராகவனோட சிரிப்புக் கட்டுரைகள். 88 தலைப்புல செல்லப்பனோட சூப்பரான கார்ட்டூன்ஸோட (அட்டையில பிள்ளையார் முழுச்சிக்கிட்டு சிரிக்கறதைக் கவனிங்க) இந்திய–குறிப்பா தென்னிந்திய சிசுவேஷன் சிரிப்பு. அங்கங்க கொஞ்சம் விஷமத்தனத்தோட விறுவிறுன்னு போகுது. நடை, என் லைஃப்ல இதுவரை நான் பார்க்காத காவேரி மாதிரி ஸ்மூத்தா ஃப்ளோ ஆகுது.



இன்னொண்ணு: கவிதைத் தொகுப்பு– ஸைலண்ட் ஸ்ட்ரீம்ஸ். 82 தற்கால தமிழ்ப் புதுக் கவிஞர்களோட கவிதைகளின் மொழிபெயர்ப்பு!

முதல்ல, இப்படி ஒரு வேலை பண்ணணும்னு நினைச்ச மொழிபெயர்ப்பாளருக்குப் பாராட்டு;

அப்புறம் அதைச் சிறப்பா செஞ் சிருக்கறதுக்காக பாராட்டு;

அப்புறம் அதைத் தானே பப்ளிஷும் பண்ணியிருக்கற அவரோட தைரியத்துக்கு ஹாட்ஸ் ஆஃப்!

அப்புறம்... ரொம்ப கியூட்டா படங்கள் போட்டு அழகு படுத்தியிருக்கற அந்த நபருக்கு மானசிகமா மலர்ச்செண்டு, மன்ற உறுப்பினர் சார்பா!

ஓ.கே... யார் அதுன்னுதானே கேக்கறீங்க... அவரும் மன்ற உறுப்பினர்தான்–

வீ. விஜயராகவன்!

ஒரு நல்ல கவிஞராக இருக்கறதால பல நல்ல கவிஞர்களைப் புரிஞ்சுகிட்டு மொழிமாற்றம் செய்ய முடிஞ்சிருக்கு அவரால்.

ஆனா இந்தப் புத்தகத்துக்கு ரியல் டெஸ்ட் என்ன தெரி யுமா...? தமிழ் தெரியாதவங்ககிட்டே கொடுத்துப் படிக்கச் சொல்லி அவங்க கருத்தைத் தெரிஞ்சுக்கறதுதான். அப்படி எதுவும் வீவி சாருக்கு ஃபீட் பேக் கிடைச்சா ஷேர் பண்ணிக் கலாம்.

— சுமி

— சுமி சூப்பர் மார்க்கெட்

கமலா கண் கலங்கி நின்று கொண்டிருந்தாள். "கமலா, என்ன இது? கண் கலங்கி நிற்கிற மாதிரி இப்ப என்ன ஆயிடிச்சி?"

"பத்துமாதம் சுமந்து பெற்ற




பிள்ளைங்க. மனசு கேட்கலைங்க."

"சீ, வாயை மூடுடி! பையனுக்கு நல்ல வேலை கிடைச்சிருக்கு. கை நிறைய சம்பளம். சந்தோஷப்படாமல் கண்ணைக் கசக்கறே. உனக்கு அறிவு இருக்காடி?"

"அவன் குழந்தைங்க. இத்தனை வருஷத்தில் ஒரு நாள்கூட பிரிஞ்சு இருந்ததில்லைங்க. முதல் தடவையா ரொம்பத் தொலைவு போறானேன்னு மனசு சங்கடப்படுதுங்க."

"அதுக்காக ஆயுசு பூராவும் பையனை வீட்டிலேயே வைத்துக் கொள்ள முடியுமா? என்ன தொலைதூரம்? இங்கே இருக்கிற மும்பை. அவசரம்னா இரண்டு மணி நேரத்தில் பறந்து வந்துடலாம். அவனவன் வேலை கிடைக்காமல் கஷ்டப்படறான். ஆண் பிள்ளை, நாலு

இடம் போக வேண்டாமா? இந்தக் காலத்தில் பொண்ணுங்களே அமெரிக்காவிற்குக்கூட தனியாப் போறாங்க. இப்படி அழுது புலம்பி இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்திக்காதே"

"அதெல்லாம் சரிங்க. புது இடம், புது மொழி. பேச்சுத் துணைக்குக் கூட யாரும் இருக்க மாட்டாங்களே. இதெல்லாம் நினைச்சால் என் மனசு 'பக் பக்'னு அடிச்சுக்குது."

"போதும் நிறுத்து. நம்ம பையன் ஒன்னும் குழந்தை இல்லை. ரெண்டு நாள் ஒரு மாதிரி இருக்கும். அப்புறம் சரியாயிடும். மாதுங்காவில் தமிழ்க்காரங்க நிறைய பேர் இருக்காங்க. முதல்ல அங்கே போய்த் தங்கட்டும். அப்புறம் அவன் சௌகரியப்படி செய்யட்டும். ஊரில்



# "மும்பையிலேருந்து பேசறேம்மா..."

இடறிவிழுந்தால் எஸ்.டி.டி. பூத் இருக்கு. நினைச்சப்போ உன்கூட பேசுவான். கண்ணைத் துடைச்சுக்கிட்டு சீக்கிரம் கிளம்பு."

இரயில்வே பிளாட்பாரத்தில் சுந்தருக்கு அறிவுரைக் கூறிக் கொண்டே இருந்தாள். "போய்ச் சேர்ந்ததும் உடனே எஸ்.டி.டி. போட்டு பேசுடா" என்றாள் கமலா.

"அம்மா சொன்னாள்னு நீ அடிக்கடி எஸ்.டி.டி. போட்டு வள வளன்னு உப்பு சப்பில்லாத விஷயமெல்லாம் பேசாதே. மீட்டர் எக்கச்சக்கமாக ஏறிடும். ஒவ்வொரு தடவையும் மீட்டர் நாற்பது ரூபாய் ஆகும் வரை பேசு. சிக்கனமாக இருக்கக் கற்றுக் கொள்" என்றார் கணபதி.

தலையை ஆட்டினான் சுந்தர். ரயில் கிளம்பியது. கண்கள் கலங்க கை அசைத்தனர்.

சுந்தரின் அழைப்பை எதிர்பார்த்து

**ஆதித்யா**



## அருள்வாக்கு!

'எல்லா உயிர்களும் ஒன்றே; எல்லாவற்றிலும் ஈசுவரன் இருக்கிறான்' என்று ஒருத்தன் உணர்கிறபோது தான் அவனுக்கு அருள் உண்டாகிறது. இவன் தன் மநுஷ்யர்களுடன் ஸமமான நிலையில் இருந்து கொண்டு பிரியம் காட்டுவதைவிட இன்னும் ஒருபடி கீழே இறங்கி, தன்னைக் குறைத்துக்கொண்டு, மற்றவனை ஈசுவரனாக நினைத்து தான் ஸேவை செய்கிறான். நைச்சியம் என்று இதை வைஷ்ணவர்கள் விசேஷித்துச் சொல்வார்கள். தன்னைத் தாழ்ந்தவனாக, நீசனாக நினைத்து இன்னொருத்தனுக்கு ஸேவை செய்வது தான் நைச்சியம். இப்படி இவன் தன்னைக் குறைத்துக் கொள்கிறபோதுதான் இவனுடைய அன்பு வெறும் பேச்சாக - எண்ணமாக மட்டுமில்லாமல் அதற்குக் காரிய ரூபத்திலேயே தெய்விகமான சக்தி உண்டாகி, அது 'அருளாக' ஆகிவிடுகிறது! கொஞ்சம்கூட மமதையே இல்லாமல், ''நாம் பெரியவர், உபகாரம் பண்ணுகிறோம்' என்ற அகந்தையே இல்லாமல் இவன் ஸமஸ்த பிராணிகளிடமும் ஈசுவர ஆராதனையாக அன்பைச் செலுத்துகிறபோது, அதுவே இவனை ஸகல பிராணிகளுக்கும் மேலே உயர்த்தி விடுகிறது. இவனுடைய அன்பு வெறும் பேச்சாகவும் எண்ணமாகவும் மட்டுமில்லாமல், காரியத்திலேயே ஈசுவரானுக்ரஹத்தை வாங்கித் தரக் கூடிய அருட்சக்தியைப் பெற்று விடுகிறது.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி**
**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி**
**சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

டெலிபோனுக்குப் பக்கத்திலேயே இரண்டு கைகளாலும் மோவாயைத் தாங்கிக் கொண்டு பழியாகக் காத்திருந்தாள் கமலா.

டெலிபோன் மணி அடித்தது.

கமலா ஆவலுடன் பாய்ந்து ''ஹலோ'' என்றாள்.

சுந்தர்தான்.

"ஹலோ, அம்மா! நான் தான் சுந்தர். மும்பையிலிருந்து பேசறேன்."

"ஹலோ சுந்தரா? அம்மா பேசறேன்டா."

"அம்மா, அதற்குள்ள மீட்டரில் பதிமூணு ரூபாய் காட்டுது. நம்ம ஊர் சூடு வைத்த ஆட்டோ மீட்டர் மாதிரி ஓடுது."

"நீ ஊருக்குப் புதுசுன்னு தெரிஞ்சி எஸ்.டி.டி. பூத்காரன் ஏமாத்தறானா? இல்லே, மீட்டருக்குச் சூடு போட்டிருக்கானா? என்னடா இரண்டு வார்த்தை கூட பேசலை. அதற்குள் பதிமூணு ரூபாயா? அநியாயமாக இருக்குது. அந்த எஸ்.டி.டி. பூத்காரன் நாசமாகத்தான் போவான்." - அம்மா சபித்தாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. இப்போ ஃபுல் சார்ஜ். அதனால்தான் அப்படி காட்டுது. சீக்கிரம் ஏதாவது பேசேன். இருபத்தி நாலு ரூபாய் ஆயிடுச்சு."

"என்ன அதுக்குள்ள இருபத்தி நாலு ரூபாயா? வேண்டாம்டா! நான் ஏதாவது 'வளவள'ன்னு பேசுவேன். அப்பா திட்டுவார்."

"அம்மா, மீட்டர் இப்பவே முப்பத்தி இரண்டு ரூபாய் காட்டுது."

"ஐயோ! அதற்குள் முப்பத்தி இரண்டு ரூபாயா? இன்னொரு நாள் பேசறேன். வைச்சுடறேன்டா."

"சரிம்மா."

கமலா டெலிபோனை வைத்துவிட்டாள்.

"டெலிபோன் யாரிடமிருந்து?" என்று கேட்டுக் கொண்டு வந்தார் கணபதி.

"நம்ப சுந்தர்தான். மும்பையிலிருந்து பேசினான்."

"அப்படியா? என்ன சொன்னான்? பயணம் எப்படி இருந்ததாம்? எப்போது போய்ச் சேர்ந்தானாம்? எங்கே தங்கியிருக்கானாம்?"

"அதெல்லாம் அவனும் சொல்லலை. நானும் கேட்கலைங்க. மீட்டர் சார்ஜ் நாற்பது ரூபாய் ஆயிடுச்சுன்னு சொன்னான். 'சரி'ன்னு டெலிபோனை வைச்சுட்டேன்." ●

# காலத்தை வென்று நிற்பவைகள்

ஒரு புதிய புத்தாயிரமாண்டின் துவக்கத்தில் இருக்கிறோம். எத்தனையோ நூற்றாண்டுகளைக் கடந்தும் தனித்தன்மை இழக்காமல் கலாச்சாரப் பின்னணியுடன் வாழும் சமுதாயம் நமது தமிழ் சமுதாயம். உலக வரலாற்றில் பல கண்டுபிடிப்புகள், சாதனைகள், பழக்கவழக்கங்கள், சிறந்த இலக்கியங்கள்... தமிழுக்கும் தமிழர்களுக்கும் சொந்தமானவை...

உதாரணத்திற்கு, யுகங்களைக் கடந்தும் இளமையுடன் இருக்கும் **தமிழ்மொழி**, தமிழர்களுக்கே உரித்தான **விருந்தோம்பல் பண்பாடு**, உலகமே விரும்பி பின்பற்றும் **சித்தா** போன்ற இயற்கை வைத்திய முறைகள். இன்னும் பற்பல...

மூவாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் தமிழகத்தின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றும், இன்றும் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் அரிய விஷயங்களை கட்டுரை வடிவில் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் எழுதி அனுப்புங்கள். பரிசுகளை வெல்லுங்கள்.

**கட்டுரைப் போட்டி**

- **சிறப்புப் பரிசு :** ஒரு சவரன் தங்க நாணயம்
- **முதல் பரிசு :** 4 கிராம் தங்க நாணயம்
- **இரண்டாம் பரிசு (2):** 2 கிராம் தங்க நாணயம்
- **மூன்றாம் பரிசு (3):** 1 கிராம் தங்க நாணயம்
- **50 ஆறுதல் பரிசுகள்:** வெள்ளி விளக்கு

○ போட்டியில் அனைவரும் பங்கு பெறலாம். ○ உங்கள் புகைப்படத்தை கட்டுரையுடன் இணைத்து அனுப்பவும். ○ நடுவர்களால் தேர்வு செய்யப்படும் கட்டுரைகள் பிரசுரத்துக்கு உரியவை. ○ போட்டிக்கு வரும் கட்டுரைகளை திருப்பி அனுப்ப இயலாது. ○ பரிசு பெற்றவர்களின் விபரங்கள் அஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். ○ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. ○ முற்றிலும் அறிவுத்திறன் போட்டி.

**சீட்டுத் திட்டங்கள். 3 மில்லேனிய இளமை!**

**இன்றைய தேவைக்கும் நாளைய வளமைக்கும்.**

கட்டுரைகள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி: 1.3.2001

வந்து சேரவேண்டிய முகவரி:

**ஸ்ரீராம் சிட்ஸ்**
தமிழ்நாடு லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002. போன்: 8461833 - 39 ◆ www.shriramchits.com

WORDCRAFTS

கேட்கவிருக்கும் வினாக்களையும் சொல்ல வேண்டிய விடைகளையும் முன்கூட்டியே தயாரித்து வைத்துக் கொண்டு, டெண்டுல்கரும், மாதுரி தீட்சித்தும் தலா ஐம்பது லட்சம் ரூபாய் பரிசு (!) பெற்று அதைக் குஜராத் பூகம்ப நிவாரண நிதிக்கு அளித்தார்கள்.

டெண்டுல்கர் தன் சுருள் முடியை ஒட்ட வெட்டிக்கொண்டு வினோதமாகக் காட்சியளித்தார். கிரிக்கெட் மைதானத்தில் காணாமல் போய்விட்ட வினோத் காம்ப்ளியை இங்காவது காட்டலாம் என்று அழைத்து வந்திருந்தவர், சாதாரணக் கேள்விக்குக் கூடத் தடுமாறுகிற மாதிரியும் யோசிக்கிற மாதிரியும் நன்றாகவே நடித்தார்.


நடிகையான மாதுரி தீட்சித் நடிக்கவில்லை. அடிக்கடி முன்னே வந்து விழும் பொன்னிறக் கூந்தலை ஒதுக்கிவிட்டபடி ஸ்டைலாகப் பதில்களைச் சொன்னார். இருதய மாற்று சிகிச்சையை முதன்முதல் செய்தவர் என்ற கேள்விக்கு விடை 'தெரியாமல்'(?) அமெரிக்காவில் இருக்கும் டாக்டர் கணவரைக் கூப்பிட்டுக் கேட்டுப் பதில் சொன்னார்.

எல்லாமே cleverly manipulated சமாசாரம்தான். ஆனால் நல்ல காரியத்துக்காக நடத்தப்பட்ட நாடகம். ஆபிரகாம் லிங்கன் சொன்னதுபோல: With malice toward none, with charity for all, let us strive to bind up the nation's wounds.

வெடுக்கெனப் பேசி, மடக்கெனச் சண்டைகள் போட்டு, மிடுக்குடன் நடித்திருந்தார் பிரபு, 'குரு சிஷ்யன்' படத்தில். (சன் தயவு)

ரஜினியும் பிரபுவும் கௌதமியும் இருந்தபோதும், படிக்கட்டுப் படிக்கட்டாய்க் கிராப் வைத்துக்கொண்டு படபடவென்று காமென்ட் அடிக்கும் சோ தான் மனசில் நிற்கிறார். எதிரெதிராகப் பேசிக் கொண்டிருக்கும் இருவரைச் சமாதானப் படுத்தும் ஒரு காட்சியில், 'நீ செஞ்ச தப்புக்கு இவன் லிஸ்ட் போடறான்; இவன் செஞ்ச தப்புக்கு நீ லிஸ்ட் போடறே. உங்க ரெண்டு பேராலும் பெரிய ரோதனையா போச்சு!' என்கிறார்.

சோ ஒரு தீர்க்கதரிசி என்பது மீண்டுமொரு







# மாதுரி தீட்சித்துக்கு நடிக்கத் தெரியவில்லை!

முறை ருசுவாகிவிட்டது. இன்று சொல்ல வேண்டியதை அன்றே முரட்டுத்தனமாகச் சொல்லி விட்டார். The right people are rude என்று சாமர்செட் மாம் எழுதியது சோ போன்றவர்களுக்காகத்தான்.

'எஸ்வி'யில் முல்லைவளவன் வழங்கும் 'கடிங்கோ கடிங்கோ'வில் 'பிடிங்கோ பிடிங்கோ' என்று கடி ஜோக்குகள் கொட்டுகின்றன. சிலருக்கு இவை பிடிக்காது. A pun is the lowest form of humour when you don't think of it first.

கேட்டவற்றில் சில: (பழசானால் பொறுத்தருள்க)

பஸ்ஸுலே போகிற மந்திரி யார்? பஸ்வான். சிம்ரனுக்குப் பிடித்த தேர்தல் எது? இடைத்தேர்தல். கல்யாணமாகாத ஓட்டல் எது? கன்னிமரா. உட்கார முடியாத தரை எது? புளியோதரை.

'கடி' என்றதும் ஜெயா டீவியின் 'கடி டிவி' ஞாபகம் வருகிறது. விளம்பர நேரம் அதிகமாயும் விஷய நேரம் கம்மியாயும் ஆகிக் கொண்டு வருவதைப் பார்த்தால், இந்த நிகழ்ச்சியின் பாபுலாரிட்டி அதிகரித்து வருகிறதென்று ஊகிக்கலாம்.

இந்த வாரம் சந்தானம் காதில் கடுக்கனுடன் கல்லூரி மாணவராக வந்தார். 'ஒன் ப்ளஸ் ஒன் எவ்வளவு?' என்று கேட்டதற்கு, 'நான் கம்ப்யூட்டர் சயன்ஸ் படிக்கிறவன், சார். என்னிடம் கணக்கெல்லாம் கேட்கலாமா?' என்று தலையைச் சொறிந்துகொண்டு நிற்கிறார். பிறகு ஒரு கல்லூரி மாணவியைக் கேட்டார். அவள் 'நான் கெமிஸ்ட்ரி ஸ்டூடண்ட். எனக்கு இதெல்லாம் தெரியாது' என்றாள். கடைசியில் கணிதப் பேராசிரியருக்கு போன் செய்தார். 'இனிமேல் நீ கல்லூரிக்கு வருவதில்லை என்று சத்தியம் பண்ணிக் கொடு' என்ற நிபந்தனையின் பேரில் அவர் விடையைச் சொன்னார்.

(விடை: ஒன் ப்ளஸ் ஒன் = த்ரீ மைனஸ் ஒன்)

கிண்டலும் கேலியும் வாழ்க்கைக்கு முக்கியம்தான். ஆனால் மனிதாபிமானமும் வேண்டும். Laugh with others, not at them. ஏன் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறதென்றால் –

கொஞ்சம் அழகில்லாத ('அசிங்கமான' என்பது அவர்கள் பயன்படுத்திய வார்த்தை) பெண்ணுக்கும், ரொம்பவும் அழகில்லாத பெண்ணுக்கும் என்னென்ன பெயர் சூட்டியிருக்கிறோம் என்று சந்தானம் சொன்னது bad taste. 'யார் மனசையும் புண்படுத்துவது எங்கள் நோக்கமல்ல' என்று தொடக்கத்தில் ஒரு அறிவிப்பு காட்டினார்கள். ஆனால் இது ரொம்ப பேர் மனசைப் புண்படுத்தியிருக்கும்.

**வினோத்**

## தமிழக இந்து மக்கள் கட்சி மாநிலத் தலைவர்

**ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, பாரதிய ஜனதா... இவை போதாதென்று தமிழக இந்து மக்கள் கட்சி என்றொரு அரசியல் அமைப்பு தமிழகத்திற்குத் தேவைதானா?**

நீங்கள் குறிப்பிடும் மூல வேரான ஆர்.எஸ்.எஸ்.சிலிருந்து படிப்படியாக வெவ்வேறு வடிவங்கள் பெற்று தற்பொழுது தமிழக இந்து மக்கள் கட்சியை உருவாக்கி அரசியல் பணியாற்றி வருகிறோம். திராவிடக் கட்சிகளுக்கு மூலம் திராவிடர் கழகம் என்கிற மாதிரி எங்கள் வேர்களும் ஆர்.எஸ்.எஸ்.ஸில் பதிவானவைதான். அவர்களது செயல்பாடுகள் எங்களுக்கு அதிருப்தி அளித்ததால் இந்த அமைப்பினைத் தோற்றுவித்தோம். வெளிப்படையாகச் சொல்லப்போனால் தி.மு.க. - அ.தி.மு.க. போலத்தான் பி.ஜே.பி.யும் - தமிழக இந்து மக்கள் கட்சியும்!



**பாரதிய ஜனதாவின் செயல்பாடுகளில் அப்படியென்ன அதிருப்தி?**

துவக்க கால பி.ஜே.பி., இந்துக்களுடைய கட்சியாக இருந்து வந்தது. அந்த நம்பிக்கையில் நாங்கள் எங்கள் உழைப்பைத் தந்து பி.ஜே.பி.யை வளர்த்துவிட்டோம். ஆனால், அகில இந்திய பி.ஜே.பி.யினர் தமிழக இந்துக்களை இந்துக்களாகவே கருதவில்லை. மாற்றாந்தாய் மனப்போக்கே அவர்களிடம் இருந்து வருகின்றது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமெனில், மதுரையில் மார்க்சிஸ்ட் லீலாவதி கொலை சம்பவத்திலும், பழனிபாபா கொலை சம்பவத்திலும் துரித விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு நீதிமன்ற தண்டனை வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், அவற்றுக்கு முன்பாக நடந்து முடிந்த இந்து முன்னணி மாநிலத் தலைவர் மதுரை ராஜகோபால் கொலை சம்பவத்திற்கு நீதிமன்றத்தில் இன்னமும் முதல் கட்ட விசாரணைகூட நடைபெறவில்லை. மத்திய ஆளுங் கட்சியான பி.ஜே.பி. மதுரை ராஜகோபால் கொலை வழக்கின் துரித விசாரணைக்கு மாநில அரசை ஏன் தூண்டவில்லை என்பதே எங்கள் கேள்வி.

• ஸ்ரீதரன்

தமிழ்நாட்டு இந்து மக்களைப் பற்றி கவலைப்படக் கூடிய, அதற்காக செயல்படக் கூடிய ஓர் அரசியல் கட்சியாக தமிழக இந்து மக்கள் கட்சியை 1995ல் நாங்கள் பதிவு செய்துள்ளோம்.

## ஸ்.வி. ஸ்ரீதரன் பேட்டி..

**அயோத்தி விவகாரத்தில் தமிழக இந்து மக்கள் கட்சியின் நிலை...**

இராமரை முன் வைத்து தொண்ணூறு கோடி இந்துக்களை வீதிக்கு கொண்டு வந்து நிறுத்திவிட்டது வி.ஹெச்.பி., ஆர்.எஸ்.எஸ். மற்றும் பி.ஜே.பி. அதை வைத்துத்தான் மத்தியில் ஆட்சிக்கு வந்தார்கள். ராமர் கோயில் விவகாரத்தில் அரசியல் கட்சிகள் விலகி நிற்க வேண்டும். கிறிஸ்தவர்களுக்கு வாடிகன் எப்படியோ, இஸ்லாமியர்களுக்கு மெக்கா எப்படியோ அதுபோலவே இந்துக்களுக்கு அயோத்தி. இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள் இந்துக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அயோத்தியை விட்டுக் கொடுக்க வேண்டும். தமிழகத்தில் நாகூர் தர்காவையும், வேளாங்கண்ணி மாதாவையும் இந்துக்கள் எப்படி புனிதத்தலமாகக் கருதி வருகிறார்களோ அதே பார்வை அயோத்தியைப் பற்றியும் இஸ்லாமியர்களுக்கு இருக்க வேண்டும் என்பது எங்கள் எண்ணம்.

**இருக்கிற கோயில்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்...?**

கடவுள் வழிபாடுகளில் கட்டணம் வசூலிக்கப்படுவதை எதிர்க்கிறோம். இதற்கெல்லாம் திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? ஆலயம் சென்று ஆண்டவனை வேண்டிக் கொள்வதென்பது ஆஸ்திக எண்ணம் கொண்ட ஒவ்வொருவரின் தனிமனித உரிமையாகும். கட்டணம் என்கிற பெயரால் ஏழை பக்தர்களைத் தடுத்து நிறுத்துவது என்ன நியாயம்? மற்ற மத ஆலயங்களில் கட்டணம் ஏதுமின்றி எவ்வாறு சுதந்திரமான வழிபாடு உள்ளதோ அதுபோல தமிழக இந்துக் கோயில்களில் பக்தர்கள் யாரிடத்தும் கட்டணம் பெறக் கூடாது என்பது எங்கள் கட்சியின் கோரிக்கை. இது சம்பந்தமாக ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகத்தின் மீது, சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளோம்.

பேட்டி : **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

# ஆண்டவனுக்குத் தண்டனை!

பெரிய கொள்ளை அடித்த ஒருவன் பிடிபட்டு பஞ்சாயத்தார் முன் நிறுத்தப்பட்டான். திருடிய பணத்தில் பாதியைக் கோயில் உண்டியலில் (குருவாயூரப்பன்) போட்ட புண்ணியவான் அந்தத் திருடன். பஞ்சாயத்து இப்படி தீர்ப்பு கூறியது : சூர்யோதயத்துக்கு முன்னால் அந்தக் கோயிலை 108 முறை ஓடி வலம் வரணும்.

மறுநாள் விடியலுக்கு முன்னதாக அந்தத் திருடன் கோயிலைச் சுற்றி ஓடத் துவங்கினான். அவன் கூடவே நிழலாய் ஒருவன் ஓடி வருவதைப் பார்த்து திருடன், "நீ யாரப்பா என் கூட ஓடி வருகிறாய்?" என்று கேட்டான். கூட வந்தவன் சொன்னான், "நான்தானப்பா குருவாயூரப்பன். உன்



திருட்டில் பாதியை என் உண்டியலில் தானே போட்டாய். எனக்கும் தண்டனை உண்டு தானே? உன்னுடன் 108 வலம் ஓடி வரணும்."

ஊரை அடித்து உலையில் போட்ட அரசியல்வாதிகள் அபிஷேகம், ஆராதனை என்று ஊர் ஊராக கோயில்களுக்குப் போய் ஆண்டவனுக்கும் தண்டனை வாங்கிக் கொடுக்காமலிருந்தால் புண்ணியமாகப் போகும்.

**திருச்சி என். பாலசுப்பிரமணியன்**





கல்கி ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

இணைந்து வழங்கும்

# நில், கவனி, வெற்றிகொள்!

“ஒரு காட்டில், தனியாக, ஆடு ஒன்றைத் தோளில் போட்டுக் கொண்டு, நடந்து போய்க் கொண்டிருந்தான் ஒரு பலசாலி. அவனிடமிருந்து அந்த ஆட்டை எப்படியாவது பறித்துவிட வேண்டும் என்று நினைத்தார்கள் நாலு கள்வர்கள். ‘நேரடியாக இவனுடன் மோதினால் எலும்பை எண்ணி விடுவான். எனவே, தந்திரமாகத்தான் இவனை ஜெயிக்க வேண்டும்’ என்று முடிவுக்கு வருகிறார்கள். அவனுக்கு முன்னே சென்று பத்து அடி இடைவெளிக்கு ஒருவராக நின்று கொண்டுவிட்டனர்.

‘அண்ணே! அண்ணே! ஓநாயைத் தோளில் போட்டுக் கொண்டு எங்கே போறீங்க?’ என்றான் முதல் திருடன் உரத்த குரலில்.

“டேய்! இது ஓநாய் இல்லை! ஆடு!” என்று பதில் சொல்லிவிட்டு மேலும் நடந்தான்.

இரண்டாவது திருடன், ‘தோளில் ஓநாய்! ஓநாய்!’ என்று கத்த பலசாலிக்கு, ‘நாம் தூக்கிக் கொண்டு போகிற ஆடு, இவர்கள் கண்ணுக்கு ஓநாய் போலத் தெரிகிறதோ?’ என்று சந்தேகம் வந்தது.

மூன்றாவது திருடனை நெருங்கியவுடன், ‘ஓநாய்! ஓநாய்!’ என்று அவன் அலறவும், பலசாலிக்கு, நாம் தூக்கிக் கொண்டு போவது ஓநாய்தானோ என்றே சந்தேகம் வந்துவிட்டது.

அடுத்து, நாலாவது திருடனை அவன் நெருங்கியபோது ‘ஐயோ! ஓநாய்! ஓநாய்!’ என்று அவன் குரல் கொடுக்க, அவன் சகாக்களும் அவனுடன் சேர்ந்து கொண்டு, ‘ஐயையோ! ஓநாய்!’ என்று சப்தம் போட... ‘நாம் தோளில் தூக்கிக் கொண்டு போவது ஓநாயேதான் போலும்’ என்று பயந்து போய், அதைக் கீழே தள்ளிவிட்டு, ஓட்டம் பிடித்தான் அந்த பலசாலி!

நம் வாழ்க்கையிலும் இப்படித்தான். நம்மால் ஒரு காரியம் முடியும் என்று நம்பிக்கையோடு இருப்போம். ஆனால், கூட இருப்பவர்கள், நேர்மாறாக எதையாவது சொல்லி, நம் நம்பிக்கையைப் பாழடித்து விடுவார்கள். நகைச்சுவை என்ற பெயரிலும், இந்த முயற்சி நடக்கும். யாராவது பாட ஆரம்பித்தால், உடனே ரெடிமேடாக ஒரு ஜோக் அடிப்பார்கள். “டேய்! கழுதை வந்துடப் போகுது!”

“இது போன்ற நெகட்டிவான எண்ணங்கள் உங்களுக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்றால், தயவு செய்து, நெகடிவான கருத்துக்களைச் சொல்கிறவனைப் பார்க்காதீர்கள். அவன் சொல்வதைக் கேட்காதீர்கள். அதுபோன்ற கருத்துக்களைப் பேசாதீர்கள். இதை ஒரு விரதமாகவே எடுத்துக் கொள்ளுங்கள்...”

இந்தக் குட்டிக் கதையைச் சொன்ன பேராசிரியர் பெரியார்தாசன் மேடையில் மேலும் கீழுமாக நடந்தபடி கையிலிருந்த ஒலி பெருக்கிக்குள் கர்ஜித்தார்.

“கமான் கிளாப்!”

‘நில், கவனி, வெற்றிக்கொள்’ நிகழ்ச்சிக்காக வைஷ்ணவா கல்லூரி எஸ்.ஆர்.ஜி. அரங்கை நிறைத்த கூட்டம் மந்திரத்துக்குக் கட்டுண்டதைப் போல் கைதட்டியது!

* கேள்வி நேரத்தில் பங்குபெற்றவர்கள்









கை தட்ட ஆணையிடுவதும் அதை நிறுத்தச் சொல்லி மாற்று ஆணை பிறப்பிப்பதுமாக நூதனமான ஒரு பயிற்சியை பெரியார்தாசன் ஆரம்பித்ததும், "நான் பேராசிரியரின் பேச்சைப் பார்வையாளர்களுடன் அமர்ந்து ரசிக்க விரும்புகிறேன்" என்று சொல்லி எம்.பி.நிர்மல் பார்வையாளர்களுடன் அமர்ந்து கொண்டார்.

"இந்த உலகில், ஒருவருக்கும், இன்னொருவருக்கும் மூளையின் ஆற்றலிலே, மனத்தின் ஆற்றலிலே எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. ஆனால் பலரும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளுவது இல்லை. புரிந்து கொண்ட சிலரும், முயற்சி செய்வது இல்லை. தொடர்ந்து பயிற்சி எடுப்பதில்லை. எல்லாம் சரியாக இருக்குமானால் விண்ணையும் அளக்கலாம். மாணவர்கள் இப்பயிற்சியை எடுத்துக் கொண்டால், வரும் தேர்வுகளில் மிக நல்ல மதிப்பெண் வாங்க முடியும். எவராக இருந்தாலும் அவர் எந்தத் துறையிலே ஈடுபட்டாலும், அதிலே மிகச் சிறந்து விளங்க முடியும். சாதிக்க முடியும்..." தொடர்ந்தார் பேராசிரியர்.

"உலகம் முழுவதும் சென்று நான் அளிக்கும் பயிற்சியை உங்களுக்குத் தரப் போகிறேன். அதற்காக நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், நான் சொல்கிறவற்றைக் கருத்துடன் கேட்டுக் கொண்டு, முழு ஒத்துழைப்பு தருவதுதான்... நான் தயார். நீங்கள் தயாரா?, என்ற நிபந்தனையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. கூட்டம் அதற்கு ஒப்புக் கொண்டு அவர் சைகைகளுக்குக் கட்டுப்பட்டு கைதட்டுவதும் நிறுத்துவதுமாக ஓர் ஆரம்பப் பயிற்சியில் ஈடுபட... மனப் பயிற்சியின் ஆணிவேரைத் தொடக்கத்திலேயே தொட்டுக் காட்டிவிட்டார் பெரியார்தாசன்.


'உங்கள் மனத்தை நீங்களே இயக்கினால், உங்களால் சிகரங்களைத் தொட முடியும். உங்கள் மனத்தை வேறு ஒருவர் இயக்க, ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.'

இந்த ஆதார விதிக்கு உதாரணமாக அவர் சொன்னதுதான் ஆட்டுக்குட்டி கதை!

"என்னைத் தமிழ்நாட்டின் தலைசிறந்த பேச்சாளர் என்று இன்று சொல்கிறார்கள். உங்களுக்கு ஒன்று தெரியுமா?

# ணமே! ாசற்ற மணமே!









உங்கள் முன்னால் நின்று இப்போது பேசிக் கொண்டிருக்கிற பெரியார்தாசனுக்குப் பன்னிரண்டு வயது வரை திக்கு வாய். என்னாலேயே இந்த அளவுக்கு உயர முடியு மென்றால், உங்களால் முடியாதா? முடியும். மனம் வைத்தால் நிச்சயமாக முடியும்...'' என்றவர் மனத்தின் இயக்கம் பற்றி விரிவாகப் பேசினார்.

“நீங்கள் பார்ப்பது, பார்க்கத்தக்கதாக இருந்தால், உங்கள் மனம் சிறக்கிறது; பார்க்கத் தகாததாக இருந்தால் உங்கள் மனம் சிதைகிறது. இது கேட்பது, நுகர்வது, சுவைப்பது, உணர்வது ஆகியவற்றுக்கும் பொருந்தும். மனம், உயர்கிறபோது உள்ள மாகிறது. அது கடலை விட ஆழமானது. வானத்தை விட பரப்பானது. செயல் ஆற்றலில் ஈடு இணையற்றது. ஆனால், நமக்கு, நம் மனத்தை சரியானபடி இயக்கத் தெரியவில்லை. காரணம், மனம் என்பது என்ன என்றே நமக்குத் தெரியவில்லை.

“நீங்கள் காந்தத் துண்டைப் பார்த்திருப் பீர்கள். வடதுருவம், தென்துருவம் இரண்டும் இருக்கும். இரண்டும் எதிரெதிரானவை. நடுவில் வெட்டி, வடதுருவமுனையைத் தள்ளி வைத்தால்கூட, அதன் இன்னொரு முனையில் இன்னொரு தென்துருவம் வந்து உட்கார்ந்து கொள்ளும். அதேபோலத்தான் இந்த மனமும்.

இல்லையென்றால் 'நேரமே இல்லை' என்று ஒரு சமயம் சொல்லுகிற மனம், இன் னொரு சமயத்தில், 'பொழுதே போக வில்லை' என்று சொல் லுமா? திருமண மானவுடன் புது மனைவியை அழகு என்கிற மனம், மூணு வருஷம் கழித்து மூதேவி என்று அழைக் குமா?

“குழந்தையாக இருந்தபோது, மாசற்று இருந்த மனம், வளர்ந்த பின், இரட்டை குணமுடையதாக எப்படி மாறுகிறது? நாம் எவற்றை எல்லாம் மனத்தின் மூலம் பார்த் தோமோ, கேட்டோமோ, நுகர்ந்தோமோ, சுவைத்தோமோ, தொட்டு உணர்ந்தோமோ, அவற்றினால் ஏற்பட்ட பாதிப்புதான் அது.


“இப்படி இரட்டை குணமுடைய மனத்தை தன்னம்பிக்கை மட்டுமே உள்ளதாய், சுறுசுறுப்பு மட்டுமே உள்ளதாய், வெற்றியை மட்டுமே எட்டக் கூடியதாய், அன்பு நிறைந்ததாய் மாற்றிக் கொள்ள எல்லாருக்கும் சம்மதம்தானே! உங்கள் சம்மதத்தை கைத்தட்டல் மூலமாக வெளிப் படுத்துங்கள் பார்க்கலாம்...''


கைதட்டல் ஓய சில நிமிடங்களாகி விட்டன!

தொடர்ந்தார் பெரியார்தாசன்: 'இப் போது உங்கள் மனத்தை நான் மேம்படுத்தப் போகிறேன். உங்கள் மனம், இரட்டைக் குணமுடைய கான்ஷியஸ் லெவலிலிருந்து உயரே சென்று சாரமுள்ள மனமாக மாறப் போகிறது. அதாவது, மாசுபட்ட மனம், மாசில்லாத, உயர்ந்த உள்ளம் என்கிற நிலையை எட்டப் போகிறது.

“மனம் என்பது நம் ஊர் கூவம் போல. ஆனால் நல்லகாலம், கூவம் அளவுக்கு ஏகப்பட்ட மாசு அதில் இல்லை. வெறும் நாலே நாலு மாசுகள்தான். பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் பேசுதல்.

“பொறாமை யாருக்கு இருக்கும்? தன்னம் பிக்கை இல்லாதவனுக்குத்தான். தன்னம் பிக்கை இருந்தால், பொறாமை அங்கே இருக்காது.






''பேராசை, அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படுவது.

''கோபம். எல்லோருக்கும், தன்னை விட ஒரு படி குறைவானவர்கள் மீது தான் கோபம் வருகிறது. எந்த சப் - இன்ஸ்பெக்டராவது, இன்ஸ்பெக்டர் மீது கோபப்படுவாரா? கான்ஸ்டபிள் மேல்தானே தன் கோபத்தைக் காட்டுவார்? இளைத்தவன் மீது கோபப்படுவதற்குப் பெயர் கோழைத் தனம்! தன் கோபத்தைத் தனக்கு மேல் இருப்பவரிடம் காட்டும்போது, அதற்குப் பெயர் வீரம்! எனவே, கோபத்தை மனத்தி லிருந்து விரட்டுவோம்.

''கடைசியாக, அடுத்தவர்க்குத் தீங்கு இழைக்கும் சொற்களைப் பயன்படுத்துவது. மனம்தானே சொற்களை உருவாக்குகிறது. அந்தச் சொற்கள்தான் மறுபடி மனத்துக்குள் நுழைந்து, அதனை வடிவமைக்கிறது. யாரைப் பார்த்தாவது, 'நீ உருப்படுவியா?' என்று சபித்துக்கொண்டே இருப்பவன் உருப்படுவது நிச்சயமில்லை. காரணம், சொற்கள் அத்தனை சக்தி வாய்ந்தவை. கடும் சொற்கள் மனத்தை பாதிக்கும். பாதிக்கப் பட்ட மனம், திரிந்த பாலுக்கு ஒப்பானது. அது எதற்கும் பயன்படாது. கெட்டுப் போன பொருளிலிருந்துதானே, துர்வாசனை வரும். கெட்ட மனத்திலிருந்து தீய சொற்கள் வரும்!

'பொறாமைப்பட மாட்டேன்; பேராசையை விட்டொழிப்பேன்; கோபத்தை விலக்குவேன்; தீய சொற்களைப் பயன்படுத்த மாட்டேன்' என்று வாய்விட்டுக் கூறி, உறுதி மொழி எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனம் தானாக சாரமுள்ள மனமாக மாறும்.''

அடுத்து, மனத்தை மேம்படுத்துவதற்கான பிரத்யேகப் பயிற்சியைத் துவக்கினார் பேராசிரியர் பெரியார்தாசன்.

''நாளைக்கே நீங்கள் இப் பயிற்சியைத் துவக்கலாம்.


முகம் பார்க்கவும், அலங்கரித்துக் கொள்ளவும் தானே, உங்கள் வீட்டில் முகம் பார்க்கும் கண்ணாடியைப் பயன்படுத்துவீர்கள். இப்போது அதற்கு ஒரு புதுப்பயன் சொல்லித் தருகிறேன்.

''முகம் பார்ப்பதற்குப் பயன்படுத்துவது அல்லாமல், ஒரு கண்ணாடியை இப் பயிற்சிக்கென்றே பிரத்யேகமாக வைத்துக் கொள்ளுங்கள். முகம் மட்டும் பார்க்கும் அளவுக்கு இருந்தாலும் சரி. முழுவதும் பார்க்கக்கூடிய பெரிய கண்ணாடியானாலும் சரி. அதன் முன்னே அமைதியாக, சும்மாவே சிறிது நேரம் நில்லுங்கள். உங்கள் உருவத்தை உற்று நோக்கியபடி, மனத்துக்குள்ளேயே, 'என் மனம் பொறாமையற்றது; பேராசைப் படாதது; கோபமே எனக்கு வராது; தீய சொற்கள் என் வாயிலிருந்து வரவே வராது' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்ளுங்கள். இரண்டு நிமிடம் போதும்.

''அடுத்து நீங்கள் உங்களையே கால்முதல் பார்த்தபடியே, மேல்நோக்கிப் பார்வையை உயர்த்துங்கள். உங்கள் கண்களுக்குள் நீங்கள் உற்றுப் பார்க்கும்போது அன்பு பொங்கிப் பெருகட்டும்.

''சில மணித்துளிகள் உங்கள் பிம்பத்தினுடைய கண்களையே, அன்பு பொங்கப் பார்த்துக் கொண்டிருங்கள். (மனிதர்கள் ஒவ்வொருவரும் தன்னைத்தானே நேசிப்பதன் காரணமாக, இது சாத்தியம்.) உங்கள் கண் வழியே மனம் பார்க்கிறதல்லவா? இப்போது, அந்தக் கண் வழியே உங்கள் மனத்தைப் பார்த்து விட முடியும். அதுதான் சைக்காலஜி. உங்களால் உங்கள் மனத்தைப் பார்க்க முடியுமானால், உங்களால் எதையும் சாதிக்கவும் முடியும்.

''கண்ணாடி முன் நின்று இரண்டு மூன்று நிமிடங்கள் பார்த்துவிட்டு அமைதிப்



படுத்திக் கொள்ளுங்கள். மறுபடி சில நிமிடங்கள் பாருங்கள்: இதனால் உங்களிடம் நல்ல மாற்றம் ஏற்படும்.

"அடுத்தநாள் இன்னொரு பயிற்சி. உங்களுக்குப் பிடித்த இசை. முதல்முறை இசையை மட்டும் கேளுங்கள். இரண்டாம் முறை அதே இசையில் - பாடலின் பொருளைக் கவனியுங்கள். மூன்றாம் தடவை, எந்த எண்ணமும் இல்லாமல் வெறுமனே கேளுங்கள். நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். அந்த இசை, காது வழியே உங்கள் மனத்தை இயக்கும்.

"மூன்றாவது நாள், உங்களுக்குப் பிடித்த மலரை எடுத்து வைத்து, முகர்ந்து பாருங்கள். பிரபஞ்சத்துடன் உங்களுக்குத் தொடர்பை ஏற்படுத்துவது இந்தச் சுவாசம் மட்டும்தான். எனவே இதற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. முதல்முறை, சில விநாடிகள் என்ன மலர் என்கிற நினைப்புடன் முகர்ந்து அந்த வாசனை உங்களுக்குள் எங்கே போகிறது என கவனியுங்கள். உங்களால் கண்டுபிடிக்க முடியாது.

"மறுபடி, மலரை மறந்துவிட்டு, வாசனையை மட்டும் நுகருங்கள். வாசனை எங்கே போகிறது என்று பிடிபடும்.

அடுத்து, எதைப் பற்றியும் நினைக்காமல், வாசனையை அனுபவியுங்கள். மனம் புதிய நிலையை அடைவதை உணர முடியும்.

"நான்காவதாக சுவை உணர்ச்சி. உங்களுக்குப் பிடித்த எதையாவது நாக்கில் வைத்துச் சுவையுங்கள். சாப்பிடுவது என்ன என்று நினைவில் நிறுத்துங்கள். அடுத்தமுறை சுவையை மட்டும் நிறுத்திக் கொள்ளுங்கள். மூன்றாம் முறை சுவைக்கும்போது எதைப் பற்றியும் நினைக்காதீர்கள். மனம் அதைக் கவனித்துக் கொள்ளும்.

"ஐந்தாவது, தொடு உணர்ச்சி. கணவனும் மனைவியும், தங்கள் வலது கைகளை ஒன்றன் மீது ஒன்று படும்படி வைத்துக்கொண்டு, வெளியில் குரல் எழுப்பாமல், மனத்துக்குள்ளேயே, ஒரே சமயத்தில் 'நான் உன்னை நேசிக்கிறேன்' என திரும்பத் திரும்ப சில தடவைகள் சொல்லுங்கள். கைகளை எடுத்து விடுங்கள். மறுபடி அதேபோல வைத்துக் கொண்டு, 'நான்தான் நீ; நீ தான் நான்' என்று திரும்பத் திரும்ப மனத்துக்குள்ளே சொல்லிக் கொள்ளுங்கள். கைகளை எடுத்து விடுங்கள். மூன்றாவது தடவை, ஒன்றுமே சொல்லாமல் வெறுமனே பிடித்துக் கொண்டிருந்தாலே போதும். மனம் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்து விடும்.

"திருமணமாகாதவர்களானால், ஆண்கள் தமது தாயின் கரத்தையும், பெண்கள் தமது தந்தையின் கரத்தையும் பிடித்துக்கொண்டு இதே பயிற்சியைச் செய்ய வேண்டும்.

"இந்தவைய பயிற்சி மூலம், மனம் சாதாரண நிலையிலிருந்து, மேம்பட்டு, சாரமுள்ள உள்ளமாகிவிட்ட பிறகு, மறுபடி கீழே இறங்காது.

"இன்னும் ஒரு முக்கியமான விஷயம். நீங்கள் செய்யும் செயல் எதுவாக இருந்தாலும் அதை உண்மையாய், உறுதியாய், ஊக்கமாய், போதிய பயிற்சியோடும், தளராத முயற்சியோடும், செய்தால் வெற்றி நிச்சயம்...!" என்று முடித்தபோது, அரங்கமே கைதட்டலில் அதிர்ந்தது...

எம்.பி. நிர்மலையும், பெரியார்தாசனையும் இளைஞர்கள் சூழ்ந்து கொள்ள, ஆட்டோகிராப் வேட்டை சூடு பிடித்தது.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **யோகா**

TERROR IN THE CHAMBAL VALLEY

SHORT STORY



THE PRINCE OF CATS

IN THE WILD



A COMEDIAN WHO MADE MOVIE HISTORY

MORE CATS; MORE TROUBLE! - Petpals

LAUGHTER, THE BEST MEDICINE!

JOKES PAGE

# GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 097

MARCH 2001

Rs.6/-

✉ 'நிலாக்காலம்' படத்தைப் புகழ்ந்து காந்தி கிருஷ்ணாவின் இயக்கத்தைப் பாராட்டி இருக்கிறீர்கள். ஆனால் இதே கதை சில வருடங்களுக்கு முன்பாகவே தூர்தர்ஷனில் ஞாநி இயக்கத்தில் குறும்படமாக வந்துவிட்டதே!

சென்னை - 73, ஆர். வெனரிற்றா.

✉ அன்ரியலிஸ்டிக்தான்... லாஜிக் இல்லைதான்... ஆனால் ஒரு சாமான்யன் செய்ய முடியாததை 'வாஞ்சிநாதன்' படத்தில் விஜயகாந்த் சாதித்துக் காட்டும்போது நம் மனத்துக்குள் ஒரு குதூகலம் ஏற்படுகிறதே... அது ஒன்றே போதும் படம், எங்களிடம் 'டிஸ்டிங்ஷன்' வாங்க!

திருநெல்வேலி, வி. முத்தையா




✉ 'கிச்சன் கிளினிக்', 'நில், கவனி, வெற்றி கொள்', 'சலவை இயந்திரம் வாங்கிய பஸ் கம்பெனி' போன்ற பயனுள்ள கட்டுரைகளை இன்னும் அதிகமாக வெளியிட முயற்சி செய்யுங்கள்!

## அது ஒன்றே போதும்!

ராயப்பேட்டை, ஆர்.வி.என் அண்டு சன்ஸ் ஊழியர்கள்.

✉ 4.2.2001 இதழில் 'கலைஞர் ஆட்சியில்' என்ற தலைப்பின்கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையில் கிட்டப்பா என்பவர் 'தொழிற்சாலைக்கு நிலம் கொடுத்தவங்களுக்கு நஷ்டஈடு கொடுக்கலை. ஹூண்டாய் கம்பெனிக்கு நிலம் கொடுத்தவங்களுக்கு இதுவரை நஷ்டஈடு தராமல் இழுத்தடிக்கறாங்க. நாங்க கஷ்டப்பட்டு சேமித்து வாங்கிய நிலத்தை எடுத்துக்கிட்டாங்க. பைசா கொடுக்கலை' என்று கூறியதாக வெளியிடப்பட்டுள்ளது.

ஹூண்டாய் நிறுவனம் சிப்காட்டின் இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்காவில் அமைந்துள்ளது. இத் தொழிற் பூங்காவிற்காக மொத்தம் 1468.55 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டது. இதில் மொத்தம் 10872 நில உரிமைதாரர்கள் அடங்கியுள்ளனர். இவர்களில் 8493 நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 5.57 கோடி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 2379 நில உரிமைதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, நில உரிமைதாரர்கள் தங்களது உரிமையை நிலைநாட்ட போதிய ஆவணங்களைத் தாக்கல் செய்யாததாலும், நில உரிமைதாரர் யார் என்ற தாவா வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், இத் தொகையை வழங்க இயலாத நிலையில், இந்த இழப்பீட்டுத் தொகை முழுவதும் 'வருவாய் வைப்புத் தொகை' என்ற கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. நிலத்தின் பேரில் தமது உரிமையை நிலை நாட்டும் நில உரிமைதாரர்களுக்குத் தற்போதும் Refund of Revenue Deposit என்ற படிவத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நில எடுப்புச் சட்டத்தின் பிரிவு 30ன் கீழ் வழக்கு மூலம் தீர்க்கப்பட வேண்டிய 479 நபர்களுடைய தொகை முழுவதும் 'சிவில் கோர்ட் வைப்புத் தொகை' என்ற கணக்கில் சார்பு நீதிமன்றம், பூந்தமல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது. வழக்கு முடிந்ததும் நில உரிமையாளர்கள் தாங்களே நீதிமன்றத்தில் தொகையைக் கோரிப் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை - 8, மேலாண்மை இயக்குனர், சிப்காட்.

✉ 11.2.2001 இதழில் திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. காமாட்சி 'தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களைவிடத் தமிழ்நாட்டில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அதிகம்' எனும் அதிர்ச்சியான தகவலை நாக்கூசாமல் நவின்றுள்ளார். எந்தத் தமிழ்நாட்டில்? தமிழகமும் ஆந்திரமும் சேர்ந்து 'சென்னை மாகாணமாய்' இருந்ததே அதைக் கூறுகிறார் என எண்ணுகிறேன். அதைத்தான் 1956- ஆம் ஆண்டிலேயே பிரித்து தெலுங்கர்களுக்கெனத் தனியாக ஆந்திர மாநிலம் அமைத்தாகி விட்டதே? தற்போது தமிழகத்தில் தமிழர்கள் 78 சதவிகிதமும் 8 சதவிகிதம் மட்டுமே தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் உள்ளனர். தமிழகத்தில் வசிக்கும் தெலுங்கர்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்படுவது போல் ஒரு மாயத்தோற்றத்தை வேறு உண்டு பண்ணுகிறார்.

கரூர், சி. இராமச்சந்திரன்.

**போ**ர்டிகோவில் வேகமாய் வந்து நின்ற மாருதி எஸ்டீமிலிருந்து டாக்டர் மோகன் பிரசாத் மெடிக்கல் கிட்டோடு இறங்க, அகில் பதற்றமாய் அவரை எதிர்கொண்டு கிட்டை வாங்கிக் கொண்டான்.

''வாங்க டாக்டர்...''

''யமுனாவுக்கு இப்போ எப்படியிருக்கு அகில்?''

''மயக்கத்தைத் தெளிய வெச்சுட்டோம் டாக்டர். பட் ஷி ஈஸ் நாட் ஃபீலிங் வெல்.''

''இதுக்கு முந்தி எப்பவாவது இது மாதிரி மயக்கம் போட்டது உண்டா...?''

''இல்ல டாக்டர்... இதுதான் முதல் தடவை. மேரேஜ் இன்விடேஷன் பண்டலைப் பூஜையறைக்குள்ளே வைக்கப் போனவள் அங்கேயே மயக்கம் போட்டு விழுந்துட்டா.''

இருவரும் ஹாலைக் கடந்து பூஜையறைக்குப் பக்கத்தில் இருந்த படுக்கையறைக்குள் நுழைந்தார்கள்.

யமுனா கட்டிலில் கண் மூடிப் படுத்திருக்க, அவளுக்கு இருபுறமும் சிவப்ரகாசமும்





# 7

# ஒரு பனி நிலவு



திலகவதியும் தெரிந்தார்கள். இருவர் முகங்களிலும் கிரகண நிழல். திலகவதியின் கன்னங்களைக் கண்ணீர் உழுத அடையாளம் தெரிந்தது. யமுனாவின் தலைமாட்டில் கவலைக் கோட்டிங் முகங்களோடு சௌம்யா, ஹரிதா.

மோகன் பிரசாத்தைப் பார்த்ததும் திலகவதியின் கண்களில் சட்டென்று நீர் கோத்துக் கொண்டது. குரல் தழுதழுப்போடு வெளிப்பட்டது.

"டாக்டர்...! யமுனாவுக்கு என்னான்னு பாருங்க. கல்யாணமான இந்த ரெண்டு வருஷ காலத்துல ஒருநாள் கூட தலைவலி காய்ச்சல்ன்னு படுத்தது கிடையாது. இன்னிக்குப் பூஜையறைக்குப் போனவ மயக்கம் போட்டு விழுந்துட்டா..."

டாக்டர் மோகன் பிரசாத் ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு யமுனாவுக்குப் பக்கமாய் உட்கார்ந்து ஸ்டெத்தை மார்பின் மீது வைத்து நகர்த்தினார். பின் நாடித் துடிப்பைச் சோதித்துப் பார்த்துவிட்டுத் தன் ப்ரிஸ்க்ரிப்ஷன் பேடை எடுத்து பால் பாயிண்ட் பேனாவைப் பிதுக்கிக் கொண்டு வேகமாய் எதையோ எழுதி பக்கத்தில் நின்றிருந்த அகிலிடம் நீட்டினார்.

"இதை உடனடியா வாங்கிட்டு வாங்க."

அகில் ப்ரிஸ்க்ரிப்ஷனை வாங்கிப் பார்த்தான். கிறுக்கலாய் ஒரே ஒரு வாக்கியம் தெரிந்தது.

'ஒரு கிலோ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மைசூர்பா'

**ராஜேஷ் குமார்**

அகில் திகைப்பாய் மோகன் பிரசாத்தைப் பார்த்தான்.

"என்ன டாக்டர் இது...?"

"இப்போதைக்கு இந்த மருந்தைத்தான் எழுதிக் கொடுக்க முடியும். வாங்கிட்டு வந்து எல்லார்க்கும் கொடுங்க. இன்னும் எட்டு மாசத்துல நீங்க அப்பா, யமுனா அம்மா."

டாக்டர் சொன்னதைக் கேட்டு சிவப்ரகாசம் ஒரு குழந்தையாய் மாறி வாயில் இருந்த மிச்சப் பற்களைக் காட்டிச் சிரிக்க திலகவதி, யமுனாவிடம் குனிந்து அவளுடைய கன்னங்களைத் தடவினாள்.

"என் ராஜாத்தி...! இதுக்காகவா இப்படி பயமுறுத்தினே..."

"அண்ணி...! கங்க்ராட்ஸ்" செளம்யா யமுனாவின் இடது கையையும் ஹரிதா வலது கையையும் பற்றிக் கொண்டார்கள்.

"வீ வாண்ட் ஜூனியர் அகில்..."

கண்களை மூடி சோர்வாய்ப் படுத்திருந்த யமுனாவுக்குத் தான் உண்டாகியிருப்பது சந்தோஷத்தைக் கொடுத்தாலும் அடி மனசுக்குள் மூண்டிருந்தக் கலவரம் அந்த சந்தோஷத்தை விரட்டியடித்தது. மனக் கண்ணில் லீலா கிருஷ்ணனின் போட்டோவைக் காட்டிக் கொண்டு இன்ஸ்பெக்டர் பால் பாண்டியன் சிரித்தார்.

திலகவதி மகனிடம் திரும்பினாள்.

"டேய் அகில்! காரை எடுத்துக்கிட்டுப் போய் டாக்டர் சொன்ன மாதிரி ஸ்வீட் வாங்கிட்டு வா... அப்படியே நெய்யில் வறுத்த முந்திரி பருப்பு அரை கிலோ."

"இதோ கிளம்பிட்டேன்..."

கார்ச் சாவியைச் சுழற்றிக்கொண்டு அகில் புறப்பட்டுப் போக திலகவதி கட்டிலில் ஏறி யமுனாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள். தன் வலது கை ஆட்காட்டி விரலை உயர்த்தினாள்.

"இதோ பார் யமுனா...! இனிமே இந்த வீட்ல நீ ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடக்கூடாது. வீட்ல ரெண்டு வேலைக்காரிங்க இருக்காங்க. எல்லாத்தையும் அவங்களே பார்க்கட்டும். சமையல்கட்டை எட்டிக் கூட பார்க்கக்கூடாது. கல்யாணமாகிற வரைக்கும் செளம்யாவும் அதுக்கப்புறம் நானும் சமையலைப் பார்த்துக்குவோம். உன்னோட வேலை என்ன தெரியுமா...? சாப்பிடணும்... தூங்கணும். டி.வி. பார்க்கணும். வீட்டுப்படியைத் தாண்டக் கூடாது."

பகீரென்றது யமுனாவுக்கு.

'இன்னிக்குக் காலையில் பத்து மணிக்கு பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயிலில் இன்ஸ்பெக்டர் பால் பாண்டியன் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாரே... சரணாவையும் வரச் சொல்லியிருக்கேன்...!'

திலகவதி உற்சாகமாய்ப் பேசிக் கொண்டே போனாள்.

"யமுனா! ஒவ்வொரு மாசமும் உன் கிட்டயிருந்து நான் எதிர்பார்த்த விசேஷம் இதுதான். இன்னிக்கு லலிதாம்பிகை கோயில்ல தேங்காயை அர்ச்சகர் உடைக்கற போது உள்ளே தேங்காய்ப்பூ இருந்தது. அர்ச்சகர் பார்த்துட்டு இப்படிப்பட்ட தேங்காய் அம்பாளோட பூஜைக்குக் கிடைக்கிறது ரொம்பவும் விசேஷம்ன்னு சொன்னார்."

சிவப்ரகாசம் யமுனாவின் முகத்தைப் படித்து விட்டுக் கேட்டார்.


"என்னம்மா யமுனா! நாங்க எல்லோரும் இவ்வளவு சந்தோஷப்பட்டுக்கிட்டு இருக்கும்போது உன்னோட முகத்துல மட்டும் அந்தச் சந்தோஷத்தோட அறிகுறியையே காணோமே...?"

யமுனா வலுக்கட்டாயமாய்ப் புன்னகைத்தாள். "எம் மனசுக்குள்ளே இப்போ ஒரு தீபாவளியோட சந்தோஷம் நிரம்பியிருக்கு மாமா. என்ன பேசறது... சந்தோஷத்தை எப்படி வெளிப்படுத்தறதுன்னு தெரியலை..."

"அண்ணி..." ஹரிதா, யமுனாவின் தோளைத் தொட்டாள்.

"ம்...."

"ஜூனியர் அகிலுக்கு நான்தான் பெயர் வைப்பேன். பெயர் கூட ரெடி... கின்னஸ் சாதனையில் இடம் பெறக்கூடிய அளவுக்கு



அமோகமான பெயர்.''

டாக்டர் கேட்டார்.

"எங்கே சொல்லு பார்க்கலாம்.''

ஹரிதா தொண்டையைச் செருமிக் கொண்டு சொன்னாள். "மதனகோபால சந்திரசேகர ரவிசங்கர வெங்கடரமண சிவ ராமகிருஷ்ணகுமார்.''

எல்லோரும் சிரித்துக் கொண்டிருக்க வேலைக்காரப் பெண் சரோஜா அறை வாசலில் நின்று குரல் கொடுத்தாள்.

"அம்மா...''

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். திலகவதி கேட்டாள்.

"என்ன சரோஜினி...?''

"அம்மா...! யமுனாம்மாவைப் பார்க்கிறதுக்காக யாரோ ஒருத்தர் வந்திருக்காங்க..''


"யமுனாவையா...?''

"ஆமாம்மா...''

"யார்ன்னு கேட்டியா...?''

"கேட்டேம்மா... என்னமோ பேர் சொன்னார். புரியலை...''

திலகவதி



பெரிய மகளிடம் திரும்பினாள். "செளம்யா! யார்ன்னு போய்ப் பாரு...''

செளம்யா தலையாட்டிவிட்டு அறையினின்றும் வெளியேறிப் போக, யமுனாவின் இதயம் தீப்பற்றிக் கொண்ட காட்டுப் பகுதியாய் மாறியது.

'வந்திருப்பது யார்...?'

'இன்ஸ்பெக்டர் பால்பாண்டியனா... இல்லை, சிவப்பு பனித்துளி வேண்டும் என்று கேட்டு டெலிபோன் பண்ணிய நபரா...?'

யமுனா தவிப்போடு காத்திருக்க இரண்டு நிமிஷம் கழித்து செளம்யா உள்ளே வந்தாள்.

அவள் முகம் வெகுவாய் மாறியிருந்தது. சற்று முன்புவரை இடம்பிடித்திருந்த அந்த சந்தோஷம் இப்போது முகத்தில் இல்லை.

யமுனாவின் இதயத் துடிப்பு உச்சத்துக்குப் போயிற்று.

அந்த நெரிசலான போக்குவரத்திலும் பார்வதராஜகுமாரி காரை வேகமாய் ஓட்டியது வருணுக்குள் வியப்பை விதைத்தது. ரியர்வ்யூ கண்ணாடியில் அவளுடைய முகம் தெரிந்து புன்னகைத்தது.

"என்ன வருண்...! பேசாமலேயே வர்றீங்க. எதுக்கு இந்த இறுக்கம்...? பி... கம்பர்டபிள்... என்னை மாதிரியான ஓர் அழகான பெண் காரை ஓட்டும் போது கொஞ்சம் ஜோவியலா இருக்கலாமே...''

வருண் எரிச்சலாய்ப் புன்னகைத்தான். "நீ மொதல்ல ஒழுங்கா காரை ஓட்டு. இல்லேன்னா இன்னிக்கு ராத்திரி ஜி.ஹெச். மார்ச்சுவரிக்கு நீயும் நானும் போக வேண்டியிருக்கும்...''

"குட் ஜோக்...! இப்படிப்பட்ட நெரிசலான ட்ராஃபிக்கில் காரை வேகமா ஓட்டிக்கிட்டுப் போறதுலதான் த்ரில்லே இருக்கு. "எதிரில் வந்த ஒரு பூதாகாரமான ட்ரக் லாரியை மயிரிழையில் தவிர்த்து வளைவில் ஸ்டீயரிங்கை ஒடித்தாள் பார்வதராஜகுமாரி.

வருணின் உடம்புக்குள் ஓடிக் கொண்டிருந்த மொத்த ரத்தமும் மைக்ரோ விநாடி நேரம் ஸ்தம்பித்துப் பின் தலைதெறிக்க ஓடியது.

வருண் கேட்டான்.

"இப்ப நாம் எங்கே போறோம்?''

"மொதல்ல என்னோட கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்க. அதுக்கப்புறம் உங்க கேள்விகளுக்கு என்னோட பதில்கள் தயாரா யிருக்கும்...''

"என்னைப் பத்தித்தான் உனக்கு எல்லாமும் தெரியுமே... அப்புறமும் என்ன என்னைக் கேட்க வேண்டியிருக்கு?''

"ஒரு க்ராஸ் செக் பண்ணிக்கத்தான்.''

"என்ன கேக்கணுமோ கேளு...''

"லாயல் க்ரூப்ஸ்ல வேலை கிடைக்கிறது மிகப் பெரிய விஷயம். உங்களுக்கு அங்கே என்ன வேலை கொடுத்திருக்காங்க...''

"செக்யூரிட்டி வாட்ச்சர். ஊட்டியில் போஸ்டிங்... சம்பளம் எவ்வளவுன்னு சொல்லணுமா?''

"அதெல்லாம் வேண்டாம். நீங்க படிச்சிருக்கிற படிப்புக்கும் கிடைச்சிருக்கிற வேலைக்கும் சம்பந்தமே இல்லையே...?''

## திருத்திய பதிப்பு

**மீண்டும் ஒரு வாய்ப்பு**
**இனி தவறே நிகழாது**
**அகப்படாவண்ணம் கொள்ளை!**

— வத்திராயிருப்பு
தெ. சுந்தரமகாலிங்கம்

"தேசிய அளவில துப்பாக்கிச் சுடும் போட்டியில் நான் இரண்டாவது இடம்பெற்றிருந்த சர்ட்டிபிகேட்டைப் பார்த்ததும் எனக்கு இந்த வேலையைக் கொடுத்துட்டாங்க..."

"உங்களை இண்டர்வ்யூ பண்ணினது யாரு?"

"எம்.டி.தான்..."

"அவரோட பேர் தெரியுமா...?"

"தெரியும். தயானந்த்..."

"தயானந்த் ஒரு நேர்மையான மனிதர். அதனால்தான் தன்னோட கம்பெனிக்கு 'லாயல்'ன்னு பேர் வைச்சிருக்கார். அவருக்குப் பொய் சொல்றவங்களைக் கண்டா பிடிக்காது. நீங்க ஒரு கொலையைப் பண்ணிட்டு ஜெயிலுக்குப் போய்ட்டு வந்திருக்கீங்க. இந்த உண்மை அந்த தயானந்துக்குத் தெரிஞ்சா என்னாகும் தெரியுமா...?"

"தெரியும். அந்த நிமிஷமே வேலை பறிபோகும். பழையபடி ஒவ்வொரு கம்பெனியா போய் வேலை கேட்டு படியேற வேண்டியதுதான்."

"அந்த நிலைமை உங்களுக்கு வரக் கூடாதுன்னு நான் நினைக்கிறேன்... நீங்க என்ன நினைக்கறீங்க...?"

"என்னோட நினைப்பும் அதுதான்."

"நீங்க ஜெயிலுக்குப் போன விஷயம் உங்க காதலி ஜெனிஃபர்க்கு தெரியுமா...?"

"தெரியாது..."

"தெரிஞ்சா என்னாகும்...?"

"காதல் கல்லறைக்குப் போயிடும்."

"காதலை இழக்க நீங்க தயாரா?"

"அதுக்குப் பதிலா என்னோட உயிரை இழக்கத் தயாராயிருக்கேன்..."

"ஓ... உங்க காதல் அவ்வளவு ஸ்ட்ராங்கா? அப்படீன்னா நீங்க ஜெயிலுக்குப் போன உண்மை என்னிக்குமே ஜெனிஃபர் காதுக்குப் போகக் கூடாது..."

"ஆமா...!"

"என்ன ஒரு இக்கட்டான நிலைமை! உங்களைப் பார்க்கவே எனக்குப் பாவமா இருக்கு வருண்..."

"இதோ பார்...! நீ ஒண்ணும் என்னைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டிய அவசியம் இல்லை. உன்னோட கேள்விகள் முடிஞ்சுதா... இல்லை இன்னும் பாக்கியிருக்கா?"

"ஓவர்..."

"இனி நான் கேட்கலாமா?"

"ம்... கேளுங்க..."

"இப்போ நாம எங்கே போய்க்கிட்டிருக்கோம்?"

"முட்டுக்காட்டுக்கு..."

"அங்கே யார் இருக்காங்க...?"

"என்னோட பாஸ்."

"யார் அவர்...?"

"அவர் யார்ன்னு முன்கூட்டியே சொல்ல எனக்கு அனுமதி கிடையாது..."

"சரி... அவருக்கு என்கிட்ட என்ன பேசணும்?"

"அதைப் பத்தியும் எனக்கு எதுவும் தெரியாது. உங்களை அவர்கிட்ட கூட்டிட்டுப் போக வேண்டியது மட்டுமே என்னோட வேலை. அவரைப் போய்ப் பார்த்த பிறகு உங்க சந்தேகங்களை நீங்க கேட்டுக்கலாம்..."

வருண் மேற்கொண்டு பேச முயல அவள் கையமர்த்தினாள்.

"ஸாரி...! இனிமே நான் எதுவும் பேசக் கூடாது."

காரின் ஆடியோ பட்டனைத் தட்டினாள்.

கஜல் ஒலித்தது.

வருண் இடதுகை முஷ்டியை வலது உள்ளங்கையில் குத்திக் கொண்டு ஆயாசமாய்ச் சாய்ந்தான்.

கார் இப்போது சென்னையின் சந்தடிகளை விட்டு விலகி முட்டுக்காடை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

நாற்பது நிமிஷப் பயணம்.

இரண்டு பக்கமும் சவுக்கு மரத் தோப்பு விடாப்பிடியாய் வந்து கொண்டிருக்க, குங்குமமாய்ச் சிவந்து போயிருந்த மேற்குத் திசை சூரியன் மரங்களுக்குப் பின்னால் விட்டு விட்டு தெரிந்தான்.

"இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?"

வருண் கேட்க நினைத்த விநாடி –

கார் திடும்மென்று வேகத்தைக் குறைத்துக்கொண்டு இடதுபக்கமாய் மண்டியிருந்த சவுக்குத் தோப்பின் இருட்டுக்குள் நுழைந்தது.

வருணுக்கு முதன் முதலாய்ப் பயம் வந்தது.

(தொடரும்)

# கன்னி ஓட்டு

**முதல் காதல், முதலிரவு போன்ற மறக்க முடியாத அனுபவங்களோடு முதன் முதலாக தேர்தலின் போது வோட்டுப் போட்ட அனுபவமும் சுவாரசியமானதுதான். அரசியல்வாதிகள் சிலரிடம் கன்னி வோட்டு பற்றிக் கேட்டோம். அதை ஞாபகப்படுத்திச் சொல்வதற்குச் சிலர் அவஸ்தைப்பட்டது வேடிக்கையாக இருந்தது.**



• லதா



• நல்லகண்ணு

**ஆர். நல்லகண்ணு (செயலாளர்–தமிழ்நாடு மாநிலக்குழு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)**

உங்களுக்கு ஒரு தகவல் ஆச்சர்யமாக இருக்கும். நான் முதன் முதலாக வோட்டு போட்டது 1996 சட்டமன்றத் தேர்தலின் போதுதான். 1952 மற்றும் 1957 பொதுத் தேர்தல்களின் போது நான் சிறையில் இருந்தேன். அதன்பின் நடந்த தேர்தல்களில் வோட்டுப் போடவில்லை. காரணம், அப்போதெல்லாம் தேர்தல் வேலை காரணமாக மாநிலத்தின் வேறு ஏதாவது பகுதியில் பணியாற்றிக் கொண்டிருப்பேன். சென்னையில் உள்ள எங்கள் கட்சி அலுவலகமான பாலன் இல்லம் முகவரியில் தான் எனக்கு வோட்டு இருந்தது. இது ஆயிரம் விளக்குத் தொகுதியில் வருகிறது. 1996ல் நாங்கள் தி.மு.க. கூட்டணியில் இருந்தோம். மாநிலம் முழுவதும் பிரசாரம் செய்து விட்டுத் தேர்தல் அன்று சென்னையில் இருந்தேன். தக்கர் பாபா பள்ளியில் இருந்த வாக்குச் சாவடியில் தான் வோட்டுப்



• பி.ஹெச். பாண்டியன்



• ஜெயந்தி நடராஜன்

போட்டேன். நான் முதன் முதலாக யாருக்கு வோட்டு போட்டேனோ அவர் வெற்றி பெற்றார். மு.க. ஸ்டாலின் தான் அவர்.



• மு.க. ஸ்டாலின்

**திருமாவளவன் (அமைப்பாளர்– விடுதலைச் சிறுத்தைகள்)**

நான் முதன் முதலாக வோட்டு போட்டது பட்டதாரி தொகுதி தேர்தலில்தான். அப்போது நான் சென்னை பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. படித்துக் கொண்டிருந்தேன். பட்டதாரி தொகுதியில் நின்ற தி.மு.க. பிரமுகர் 'மிசா' கணேசனுக்குத்தான் வோட்டுப் போட்டேன். நண்பர்கள் புடை சூழ சென்று ஆரவாரத்துடன் வோட்டுப் போட்டது மறக்க முடியாத அனுபவம். ஆனால் அதன் பிறகு தேர்தல் முறையில் எனக்கு நம்பிக்கை இல்லாமல் போயிற்று. அதன் காரணமாக, தொடர்ந்து வந்த பொதுத் தேர்தல்களில் நான் வோட்டுப் போடவில்லை. ஆனால் சென்ற பாராளுமன்றத் தேர்தலில் த.மா.கவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டோம். சிதம்பரத்தில் நானே வேட்பாளர். தேர்தல் அன்று காலை எனக்கு வோட்டு இருந்த அங்கனூர் கிராமத்தில் (பெரம்பலூர் தொகுதி) வோட்டுப் போட்டுவிட்டு, எனது தொகுதிக்குச் சென்றேன். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும், பா.ம.கவினர் வன்முறையைக் கட்டவிழ்த்துத் தாழ்த்தப்பட்டவர்களை வாக்குச் சாவடிக்கே வர விடாமல் விரட்டி அடித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சோக சம்பவங்கள் கண்ணில் நீரை வரவழைக்கும் இன்றும்.



* திருமாவளவன்

**ஏ.சி. சண்முகம் (தலைவர்–புதிய நீதிக் கட்சி)**

1972ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கட்சியைத் துவக்கினார். திண்டுக்கல் இடைத் தேர்தலை அடுத்து 1977ல் முதன் முதலாகப் பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிட்டது. அப்போது நான் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். வட ஆற்காடு மாவட்ட மாணவர் அ.தி.மு.க. அமைப்பாளராகவும் இருந்தேன். பாராளுமன்றத் தேர்தலில் நான் முதலில் வோட்டுப் போட்டேன். முஸ்லிம் லீக் எங்கள் கூட்டணியில் இருந்தது. வேலூர் தொகுதியில் அப்துல் சமது நின்றார். அவரது பிரதான தேர்தல் ஏஜெண்ட் நான்தான். மக்களிடம் தேர்தல் நிதி வசூலித்து வேலை செய்தோம். ஆரணியில் தான் எனக்கு வோட்டு இருந்தது. முதல் வோட்டாக என் வாக்குச் சீட்டை அங்கு போட்டுவிட்டுத் தொகுதி முழுவதும் சுற்றிப் பார்க்க கிளம்பி விட்டேன். புரட்சித் தலைவருக்குப் போன் போட்டு நிலவரத்தைச் சொன்னேன். அவர் சில யுக்திகளைச் சொன்னார். அதன் பிறகு பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் நின்றபோது எனக்கு நானே வோட்டு போட்டுக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்றேன்.

**பி.ஹெச். பாண்டியன் (அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர்)**

நான் முதன் முதலாக வோட்டு போட்டது 1967ல் சட்டமன்றத் தேர்தலில் தான். அப்போது நாங்கள் எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட புரசைவாக்கத்தில் குடியிருந்தோம். ஆசைத்தம்பி தான் தி.மு.க. வேட்பாளர். ஆட்டோவில் நின்றபடி அவர் வோட்டு கேட்டு வந்தது இன்னமும் நினைவில் இருக்கிறது. நான் அப்போது

சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். நான் அதற்கு முன்பு திராவிட இயக்கத் தலைவர்கள் பலர் படித்த பச்சையப்பன் கல்லூரியில்தான் இளநிலை பட்டப் படிப்பு படித்தேன். 1965 இந்தி எதிர்ப்பு போராட்டம் ஏற்படுத்திய மொழி உணர்வில் மாணவர்கள் மூழ்கியிருந்த நேரம் அது. எங்கள் கல்லூரிக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் திராவிட இயக்கத் தலைவர்கள் வந்து தமிழ் மன்றத்தில் உரை நிகழ்த்திச் செல்வார்கள். நான் எப்போதும் எம்.ஜி.ஆர். பாடல்களை முணுமுணுத்தபடி இருப்பேன். முதல் வோட்டுப் போடும்போது ரொம்பவும் பெருமையாக இருந்தது. 'ஆட்சியை மாற்றியமைக்கும் மாபெரும் பணியில் என்னுடைய பங்கையும் செலுத்த முடிந்ததே' என்ற மனநிறைவு ஏற்பட்டது.

**ஜெயந்தி நடராஜன்**
**(த.மா.க. ராஜ்ய சபை உறுப்பினர்)**

நான் பிறக்கும்போதே எங்கள் வீடு அரசியல் உணர்வில் மூழ்கியிருந்தது. எப்போதும் அரசியல் பேச்சு, வாக்கு வாதங்கள்தான். எனவே எனக்குப் பல்வேறு கட்சிகளின் போக்குகள் சிறிய வயதிலேயே அத்துப்படியாகிவிட்டன. எங்கள் குடும்பம் காங்கிரஸ் கலாசாரத்தைக் கட்டிக் காக்கும் குடும்பம். 1977 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில்தான் முதன் முதலாக நான் வோட்டுப் போட்டேன். அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். எமர்ஜென்ஸி முடிந்து வந்த தேர்தல் அது. வட மாநிலங்களில் எமர்ஜென்ஸி கொடுமைகள் நடந்ததாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தபடி இருந்தன. ஆனால் தென் மாநிலங்களில் எமர்ஜென்ஸியின் போது தான் அரசு இயந்திரம், ஏழைகளுக்காகச் செயல்பட்டது. எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கு, கட்டுப்பாடு இருந்தது. புதிதாகக் கட்சித் துவங்கி, செல்வாக்குடன் இருந்த எம்.ஜி.ஆர். காங்கிரஸை ஆதரித்தார். அரசின் மெத்தனப் போக்கை விரட்டியடித்து சஞ்சய் காந்தி சில திட்டங்களை அறிமுகப்படுத்தினார். இந்திரா காந்தி நாடு முழுவதும் சுற்றிப் பிரசாரம் செய்தார். தென் சென்னையில் ஆர். வெங்கட்ராமன் காங்கிரஸ் சார்பில் நின்றார். எங்கள் குடும்பத்தில் இருந்த வாக்களிக்க தகுதி பெற்றோர் அனைவரும் ஆர்.விக்குத்தான் வாக்களித்தோம்.

## அம்மா வழியில்...

**'அன்பு, அடக்கம், ஆன்மிகம்' என்ற வாசகத்தைத் தாங்கியுள்ள சுதாகரனின்**



**ரசிகர் மன்ற போஸ்டர்கள். தைப்பூசத்தையொட்டி அவர் பாதயாத்திரை சென்ற காட்சி இது! வாசகத்துக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்று விதியா என்ன!**

***– கி. சிங்காரவடிவேல்***

**நடிகை லதா (எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. துணை பொதுச் செயலாளர்)**

1980ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தான் முதன் முதலாக வோட்டுப் போட்டேன். ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட வீனஸ் காலனியில்தான் என் வீடு இருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. சார்பாக நின்ற கே.ஏ. கிருஷ்ணசாமி அற்புதமான வேட்பாளர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அப்போது படங்களில் நடிப்பதை நிறுத்தியிருந்தாலும் அவருடன் இணைந்து கட்சிக்காக பல வேலைகளைச் செய்து கொண்டிருந்தேன். தேர்தல் நிதி திரட்டுவதற்காக என் நாட்டிய நிகழ்ச்சிகள் நடந்தன. கே.ஏ.கே. அவர்களுக்காக வாகனங்கள் கொடுத்து உதவினேன். 'புரட்சித் தலைவர் ஆட்சியைக் கவிழ்த்தது சரியல்ல' என்று தமிழக மக்கள் மீண்டும் அவரை முதல்வராக்கிய மறக்க முடியாத தேர்தல் அது.

**— கௌசி**

படங்கள்: **ராஜன்**

சுஜா, தலையணையில் முகம் புதைத்துப் படுத்திருந்தாள். அழுது அழுது கண்களும், கன்னங்களும் ஒரு சேர சிவந்து வீங்கி இருந்தன. இப்போதும் கூட கண்ணீர் வற்றவில்லை. தலையணைகள், பசித்த குழந்தைகள் ஆவேசத்துடன் பாலை உறிஞ்சுவது போல, அவளது கண்ணீரை உறிஞ்சி கொண்டிருந்தன.


வெளியே கேசவ் வானத்துக்கும் பூமிக்குமாய்க் குதித்துக் கொண்டிருந்தார்.

''யாரைக் கேட்டு அவனை வரச் சொன்ன நீ...? "நான் சொன்னேனா...?''

"பெத்தவன்னு ஒருத்தன் எதுக்காக இருக்கேன்? இத்தனை வருஷமும் வளர்த்து, எம்.சி.ஏ வரை படிக்க வெச்சு, பெரிய கம்பெனியிலே வேலையும் வாங்கிக் கொடுத்து... இத்தனையும் செஞ்சா, எவனோ ஒரு பொறுக்கி கூட ஓடறேன்கறா... அதை நீயும் ஒத்துக்கறேன்கறியே, உன்னை என்ன செஞ்சா தேவலை?''

கல்பகம், கணவரை உற்றுப் பார்த்தாள். அவள் சாதுதான். தாலி கட்டிய மனிதனின் அடாவடித்தனம் எல்லாம் தெரியும்தான்... இதற்காகவே அவள் யாரிடமும் பேசாது, நத்தை ஓட்டுக்குள் சுருங்குவது போல, தனக்குள்ளேயே சுருங்கிப் போவாள். அப்பேர்ப்பட்டவளே இப்போது எதிர்ப்புக் குரல் கொடுக்கிறாள் என்றால்– அதற்குக் காரணம் மகளின் வாழ்க்கை வீணாகி விடக் கூடாதே என்கிற பதற்றத்தினால் தான்.

அவளுக்குத் தெரிந்து, இது நாள் வரையில் கேசவ்வுக்கு நல்ல நண்பர்களே கிடையாது. அபூர்வமாக அத்தி பூத்தாற் போல, ஈசுவரன் கிடைத்தார்.



# இனிமேல் ஆரம்பம்

## 18

அதுவும்-மும்பையில் இருந்தபோது கைக்கும் வாய்க்குமே போதாமல் வீட்டு வாடகையில் இருந்து மளிகைக்கடை வரையில் பாக்கி வைத்துக் கொண்டு, வெறும் வாய்ச்சவு டாலை மாத்திரமே நம்பி, கேசவ் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த போது-ஈசுவரன் சாட்சாத் பரமேசுவரன் போலவே வந்து கை கொடுத்தார்.

நன்றியுள்ள எந்த மனிதனாலும், அதை யெல்லாம் அத்தனை சுலபத்தில் மறந்துவிட முடியாது. கேசவ்வுக்கு நன்றி என்கிற மூன்றெழுத்துக்கு அர்த்தமே தெரியாது. ஒருவரின் உதவி தேவையாக இருக்கும் போது- அவர்களைக் கூடையில் வைத்துத் தலையில் தூக்கி ஆடாத குறையாக ஆடுவார். தேவையில்லை என்றால் கீழே போட்டுத் தேய்த்து நசுக்கி விடுவார்.

இவரது சுபாவம் தெரியாமல் ஈசுவரன் தான் எத்தனை செய்திருக்கிறார். மும்பை யில் தனது நிறுவனத்தில் முக்கிய பொறுப்பு குத்தகைக்கு எடுத்திருப்பவர் கேசவ். சென்னைக்கு வந்த ஒரு சில மாதங்களிலேயே, ஈசுவரனுக்கு கேசவ்வின் போக்கு புரிந்து விட்டது. நயமாக எடுத்துச் சொல்லி திருத்தப் பார்ப்பார்.

"எதுக்குப்பா அத்தனை லட்சம் லஞ்சம் கொடுத்து அந்த ஏஜன்ஸியை நாம வாங்க ணும்? உண்மையிலேயே நம்மகிட்டே திறமை இருக்கு. கண்டிப்பா நாம இந்தப் பொறுப்பை எடுத்துக்கிட்டா கணக்கு வழக் குலே ஒளிவு மறைவு இல்லாம நியாயமா நடந்துப்போம். இது மேலிடத்துக்கும் தெரி யும். அப்படி இருக்கறப்ப நடுவுல எதுக்காக இடைத்தரகும், சூட்கேசும்?"

கேசவ்வுக்கு ஈசுவரனைப் பிடிக்காமல் போனதற்கு இதுவும் ஒரு காரணம். அன்புக் காகவும், நட்புக்காகவும் கேசவ் கேட்கிற போதெல்லாம் பணத்தை வாரிவிடத் தயாராக இருந்த ஈசுவரன், வேறு எதற் காகவும் தனது லட்சியங்களை விட்டுக் கொடுத்து, பிறகு சென்னைக்கும் வர வழைத்து, இவருக்காகவே தனியாக ஒரு நிறு வனத்தை ஆரம்பித்து, அதில் இவரை ஒரு பங்குதாரராகவும் ஆக்கி....

சிலபேரிடம் ஒரு குணவிசேஷம் இருக் கும். எதிராளி உண்மையானவராக, நல்ல வராக இருந்தாலும்கூட, அவரைப் பார்த்து அதற்கேற்றபடி தன்னை மாற்றிக் கொள்ளா மல், தன் வழியிலேயே எதிராளியையும் சகதிக்குள் இழுக்கப் பார்ப்பார்கள்.

நேர்மை, உண்மை, எளிமை இவற்றின் மொத்த உருவம்- ஈசுவரன். பொய்மை, கயமை, பொறாமை இவற்றை முழுவதும் கொடுக்க சம்மதிக்கவில்லை.

"நான் பணக்காரன்தான். ஆனா எல் லாமே கணக்குல காட்டப்பட்ட பணம். இதுக்குமேலே கறுப்புல பாதி, வெள்ளையில பாதின்னு சம்பாதிச்சு, நான் சேர்த்து வைக் கணும்னு அவசியம் இல்லே."

– இப்படி அவரும்,

"எனக்கு அவசியமா இருக்கே... உங்களை மாதிரி நான் பரம்பரைப் பணக்காரன் அல்ல. எனக்கு இப்போ சம்பாதிச்சாத்தான் உண்டு."

– இப்படி கேசவ்வும் அடிக்கடி மோதிக் கொண்டார்கள்.

கல்பகமும், மீனாட்சியும் இந்தப் பனிப்போரின் முடிவு என்ன ஆகும் என்பது தெரியாமல், கையைப் பிசைந்து கொண்டு நின்றார்கள்.

மிகப் பெரிய ஒப்பந்தத்தில் லட்சக்

அனுராதா ரமணன்

கணக்கில் ஊழல் செய்த கேசவ், எங்கே தான் பிடிபட்டு விடுவோமோ என்கிற பயத்தில் ஈசுவரன் கேட்பதற்கு முன்பே நட்பை முறித்துக் கொண்டு, பெங்களூர் வந்தவர் தான்.

ஈசுவரன் கூட தன் மகன், கேசவ்வின் மகளை மனதார நேசிப்பதால், சகலத்தையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தார். ஆனால் கேசவ்வோ-பழைய பகை ஒருபக்கம் இருக்க, புதிதாக பெங்களூரில் ஒரு நிதி நிறுவனத்தை ஆரம்பித்து, கோடிக் கணக்கில் அப்பாவி ஜனங்களின் பணத்தை ஏப்பம் விட்டுவிட்டு, இப்போது அதில் இருந்து மீளும் வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்.


எந்த நேரத்தில் கைக்கு காப்பு வருமோ என்கிற பயம் ஒருபுறம். படித்த, அழகான மகளைப் பெரிய அரசியல் தலைவர் ஒருவரின் குடிகார மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டால், நிதி நிறுவன வழக்குகளை அந்தத் தலைவர் மூலமாகவே சமாளித்து விடலாமே என்கிற நப்பாசை ஒருபுறம்.

இந்த நேரத்தில் அஜய் வந்து நின்றால் நீருபூத்த நெருப்பை விசிறி விட்டாற்போல் ஆகாதா...?

''படத்துலே அடிக்கடி 'பஞ்சு' பறக்கறதைக் காட்டுறாங்களே...ஏன்?''

''ஒவ்வொரு சீன்லேயும் ஸ்பெஷல் 'பஞ்ச்'சு இருக்கணும்னு தயாரிப்பாளர் சொன்னாராம்!''

– தஞ்சை தாமு



"யாரைக் கேட்டு வரச் சொன்னீங்க?"

"யாரைக் கேட்கணும்? அந்தப் பிள்ளை தான் கொடுத்த வாக்குத் தவறாம, அஞ்சு வருஷம் முடிஞ்சு சுஜாவைப் பார்க்கணும்னு ஓடி வந்துருக்கான். அவனானா-நீங்க வெறுப்பேத்தறீங்களேன்னு, அவன் குரலைக் கேட்டாலே பயந்து போய் ரிசீவரை வெச்சுடறா... அதனால, நான்தான் அவனை வீட்டுக்குக் கூப்பிட்டேன்."

உள்ளிருந்து சுஜாவின் மெல்லிய விம்மல். அவளுக்கு இப்படி இரைச்சல் போடும் அப்பாவைப் பார்க்கவே பிடிக்கவில்லை. அதே சமயத்தில் முன்னதாக சின்னத் தகவல் கூட இல்லாமல் அஜய் புறப்பட்டு வந்ததில் அவளுக்கு வியப்பும், வருத்தமும் தான் மேலோங்கியிருக்கிறது.

'வரப்போறேன்னு ஆபீசுக்கு மெயில் பண்ணினா என்ன? அதுதான் இந்த அவதாரத்தைப் பற்றித் தெரியுமே... தன் பக்கம் ஒரு லாரி அளவு தப்பை வெச்சுக்கிட்டு, ஒண்ணுமில்லாத விஷயத்துக்கெல்லாம் எதிராளியை வெறுப்பேத்தறதே இவரோட பொழப்பா போச்சு.'

மனசுக்குள் குமைந்து கொண்டிருந்தவளின் செவிகள் மட்டும் கூடத்தில் நடக்கும் வாக்குவாதத்திலேயே இருந்தது.

இப்போது கல்பகம் கத்திக் கொண்டிருந்தாள்.

"அஜய்க்கு என்ன குறைங்கறேன்? பணம் இல்லையா... அழகு இல்லையா... படிப்பு தான் இல்லையா? அந்த மாதிரி ஒரு பிள்ளையாண்டான் உங்களோட பொய்க்கும், புளுகுக்கும் மாப்பிள்ளையா கிடைப்பானா?"

"பேசாதே! அந்த ஈசுவரன் மண்டைக்கனம் பிடிச்ச ஆள். என்னமோ பணத்துக்காக அலையறவன்னு என்னை நினைச்சுட்டான். அவன் வீட்டுல என் பொண்ணைக் கொடுக்கறதை விட அவ கழுத்தை நெரிச்சுக் கொன்னுட்டு தலைமாட்டில் ஒரு கட்டு ஊதுவத்தி ஏத்தி வெச்சுட்டு, பேப்பர்லே நானே இரங்கல் செய்தி கொடுப்பேன்."

"தாராளமா... அதை இப்பவே செய்யுங்களேன். நீங்க பார்த்து வெச்சிருக்கற ஆளுங்கட்சி எம்.எல்.ஏவோட மொடாக் குடியன் பிள்ளைக்குப் பொண்ணைக் கொடுக்கறதை விட, இது ரொம்ப உத்தமம்."

இப்போது கேசவ், சுஜா படுத்திருந்த அறைக்கும், கல்பகம் நின்ற இடத்துக்கும்

நடுவில் நின்றபடி, குரல் கம்ம உணர்ச்சி ததும்ப அந்தக் காலத்து எம்.ஆர்.ராதா ாணியில் பேசினார்.

"சொல்ல மாட்டியா... உன்னைப் பொண் ாவா வளர்த்தேன்டி நான்... அது என்னா டிப்பு... அது என்னா ஸ்கூல்லு..."

"போதுமே நீங்க வளர்த்த பெருமை. நீங்க ங்கே வளர்த்தீங்க... அதுவா வளர்ந்தது. புவளுக்கு மூளை இருந்தது, படிச்சா. அவ நக்குத் திறமை இருந்தது, ஒழுங்கா சம் பாதிச்சு முன்னுக்கு வரணும்னு ஆசை இருந் தது... வேலைக் குச் சேர்ந்தா. இதுல நடுவுல நீங்க என்ன செஞ்சீங்கன்னு தான் எனக்குப் புரியலே."

"ஐயோ... ஐயோ... இப்படி வபாண்டமா சால்றியே... ரயல்லாம் ஒரு பண்டாட்டியா. ல்லாத்துக்கும் கணக்கு ழுதி வெச்சிருக்கேன்... அக் ளண்ட் புக் எடுத்துக் காட்டவா... 1979ம் ருஷம் நம்ம குழந்தைக்கு அமுல் பவுடர் ங்கின கணக்கில் இருந்து- மூந்தா நாள் ம்பே கௌடாவுலே அவளுக்காக ங்கின புதுச் செருப்பு வரைக்கும் எல் த்துக்கும் கணக்கு இருக்கு."

கல்பகம் புலியாகச் சீறினாள்.

"சரி, கணக்கு வெச்சிருக்கீங்கல்ல, மொத் ா கூட்டிச் சொல்லுங்க. நான் போட் டிருக்கற நகை நட்டை எல்லாம் கழற்றித் ந்துடறேன். மாசாமாசம் அவ வாங்கற சம் ளத்தை விண்ணாம, விரியாம, முள்ளங்கி த்தையாட்டம் உங்ககிட்டே கொண்டு வந்து ற்ரா இல்லே... அதை இனிமேயும் தருவா. துதானே உங்க பயம்..."

"போடி பைத்தியமே... இந்த அவினாசி கத்தோட பையனுக்கு நம்ம பொண் ணக் கொடுத்தா-இப்போ நமக்கு இருக்கற ரிய பிரச்னைக்கு ஒரு விடிவு கிடைக்கும். வனவன் எப்படா கோர்ட்டுக்கு இழுக்க ாம்னு காத்திட்டிருக்கான். ஏதோ தலை ருக்கு நெருக்கமான ஆளு என்பதால், கொஞ்சம் விசுவாசமா விலகி நிக்கறாங்க. ாளைக்கு உன் பொண்ணை அஜய் கடன் காரனுக்கே கட்டிவை. அட்சதை போடக் கூட வசதி இல்லாதபடி கையிலே காப்பு மாட்டிட்டு நான் ஜெயிலுக்குப் போறேன்... உனக்கு என்னை அந்த மாதிரி பார்க் கணும்னு தானே ஆசை."

கல்பகம் தலையில் அடித்துக் கொண் டாள்.

"எதுக்கும் எதுக்கும் முடிச் சுப் போடறீங்க... நீங்க பண்ணின தப்புக்குக் கடவுளே சம் பந்தியா வந்தாலும், காப் பாத்த முடியாது.

"பொதுமக்கள் இந்தக் கூட்டத்துக்கு வந்துவிடாமல் சதிசெய்து தடுத்துவிட்ட மத்திய மாநில அரசுகளை வன்மையாகக் கண்டிக்கிறேன்!

– உ. ராஜாஜி



இதுலே அவினாசி லிங்க மும், அர்த்தனாரீஸ்வர னும் என்ன பண்ண முடியும்? யார் ஆட்சியிலே இருக்காங்களோ- அதுவரைக்கும் தான் அவங்களைச் சேர்ந்தவங்க வாழ்வும். எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்துட்டா- இவங்க துண்டைக் காணோம், துணியைக் காணோம்னு ஓட வேண்டியது தான்."

அவள் சொல்லி முடிக்கவில்லை... வாசல் பக்கம் கம்பீரமான குரல். சடக்கென திரும்பு கிறார் கேசவ். முகம் முழுக்க அப்பியிருந்த கோபம் மறைந்து, சட்டென சந்தோஷம் திட் டுத் திட்டாய்ப் படர்கிறது.

"வாங்க, வாங்க, அவினாசி அண்ணே... உங்களுக்கு ஆயுசு நூறு."

– இப்படிச் சொன்னவர் எதுவுமே நட வாதது போல் உட்புறம் நோக்கி குரல் கொடுக்கிறார்.

"சுஜி கண்ணு... இங்கே யார் வந்துருக் காங்கன்னு வந்து பாரும்மா..."

சுஜா தலைப்பால் கண்களை ஒற்றியபடி, முகத்தில் கண்ணீர்ச் சுவடு தெரியாமல், மெலிதாய்ப் பவுடர் ஒற்றி, வெளியே வந் வள்- செயற்கைப் புன்னகையுடன் கை குவிக் கிறாள்.

"வாங்க..."

(தொடரும்)

# அழைக்கிறது அமெரிக்கா!

## கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

### குவிஸ் கூப்பன் — 16

1) காமரூபம் என்று அழைக்கப்பட்ட பகுதி இன்று இந்தியாவின் எந்த மாநிலமாக விளங்குகிறது?
2) அன்றைய பாடலிபுத்ரம் இன்று வேறொரு பெயரில் ஒரு மாநிலத் தலைநகராக விளங்குகிறது. அந்த நகரின் புதிய பெயர் என்ன?
3) அக்பராபாத் என்று அழைக்கப்பட்ட ஒரு இடம் இன்று வெளிநாட்டு பயணிகளையும் கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறது. அதன் தற்போதைய பெயர் என்ன?
4) வட ரொடீஷியா என்ற நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
5) அன்று பெர்ஷியா (பாரசீகம்) என்று குறிப்பிடப்பட்ட பகுதி இன்று எந்த நாடாக விளங்குகிறது?
6) சீனத் தலைநகரின் முந்தைய பெயர் பீகிங். அதன் தற்போதைய பெயர் என்ன?

**விடைகள்:**

1) ..........................................................

2) ..........................................................

3) ..........................................................

4) ..........................................................

5) ..........................................................

6) ..........................................................

### குவிஸ் போட்டி — 16

இந்தவாரக் கேள்விகள் அனைத்தும் ஊர்ப் பெயர் மாற்றம் பற்றி... விடைகளை கவனமாக கூப்பனில் பூர்த்தி செய்து முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே மற்ற கூப்ப கஙோடு பூட்டி வையுங்கள். இருபத்து ஆறு வார இறுதியில் எல்லா கூப்ப களையும் எங்களுக்கு அனுப்புங் இதில் மிக அதிகமான கேள்விக குச் சரியான பதில் எழுதும் நபருக்கு

**அமெரிக்கப் பயண பரிசு!**

**ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!**


**மலேஷியா — சிங்கப்பூ பயணம் மூன்றாவது பரிச**

இந்த மூன்று நிலைகளி ஒருவருக்கு மேல் சரியான பதில் எழுதியிருந்தால் இருக்கவே இ கிறது குலுக்கல் முறை! பயணப் ப பெறாதவர்களுக்கு அமரர் கல்கி நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!





Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publicati
Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 23456
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



அறிமுகம்

# எல்ஐசியின் பீமா பிளஸ்

(மூலதனச் சந்தையுடன் இணைந்த காப்பீட்டுத் திட்டம்)



பலரும் ஆவலுடன் எதிர்பார்க்கும், மூலதனச் சந்தையுடன் இணைந்த காப்பீடு மற்றும் வருவாய் ஆதாயங்கள் கொண்ட ஓர் ஒப்பற்ற திட்டம் இது. முதலீடு செய்வோரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் எல்ஐசியின் பீமா பிளஸ் (அட்டவணை எண்: 140) வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஆதாயங்கள் :**

(i) முதிர்வின்போது, முதிர்வுக்குரிய போனஸுடன் நிதியின் அப்போதைய மதிப்புக்கு ஈடான தொகை சேர்த்து வழங்கப்படும்.

(ii) மரணம் ஏற்பட்டால், உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொகையுடன் நிதியின் அப்போதைய மதிப்பு தொகையும், போனஸும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படும். (iii) துரதிருஷ்டவசமாக விபத்தால் மரணம் அடைந்தால், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அப்போதைய நிதியின் மதிப்புக்கு ஈடான தொகையுடன் கூடுதல் காப்பீட்டுத் தொகை ஆகியவையும் சேர்த்து வழங்கப்படும்.

**சிறப்பு அம்சங்கள் :**

**வயது வரம்பு :** 12 முதல் 55 வயது வரை.

**காப்பீட்டுத் தொகை :** ரூ. 50,000 முதல் ரூ. 2,00,000 வரை (ஒரே தவணைப் பிரீமியம் எனில் குறைந்தபட்ச காப்பீட்டுத் தொகை ரூ. 20,000)

**பிரீமியம் செலுத்தும் முறை :** வருட, அரைவருட மற்றும் ஒரே தவணை

**நிதி முதலீடு செய்யும் விதம் :** நிதியின் முதலீடு செய்யும் விதமானது கீழ்க்கண்டவாறு இருக்கும் :

| நிதியின் தன்மை | பங்கு சந்தையில் | கடன் (பங்கு உட்பட) | ரொக்கம் |
|---|---|---|---|
| செக்யூர்டு ஃபண்ட் | 10%க்கு குறையாமல் | 80%க்கு குறையாமல் | 20%க்கு மேற்படாமல் |
| பாலன்ஸ்டு ஃபண்ட் | 30%க்கு குறையாமல் | 80%க்கு குறையாமல் | 20%க்கு மேற்படாமல் |
| ரிஸ்க் ஃபண்ட் | 50%க்கு குறையாமல் | 75%க்கு குறையாமல் | 25%க்கு மேற்படாமல் |

பாலிசிதாரர், பாலிசிக்கான ஏற்புப்படிவத்தை கொடுக்கும்போது இம்மூன்று முறைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுப்பார். மரணம்/விபத்து இவைகளுக்கான சலுகை கட்டணம் மற்றும் கமிஷன் மற்றும் நிர்வாகச்செலவுகள் போன்றவை பிரீமியம் தொகையிலிருந்து கழித்த பிறகு, மீதித் தொகை முதலீடு செய்யப்படும்.

கூடுதல் தகவல்களுக்கு உங்களுக்கு அருகிலுள்ள எல்ஐசி கிளை அலுவலகம் அல்லது முகவரை தொடர்புகொள்க.

**லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

# அதிக சேமிப்பு.. அதிக ஆரோக்கியம்...

அழகேந்திராவின்

# அர்ச்சனா


அக்மார்க்
சன்ப்ளவர் ஆயில்
பாம் ஆயில்(RBD)

அக்மார்க்
உளுத்தம் பருப்பு
துவரம் பருப்பு
பாசி பருப்பு

AGMARK
GOVERNMENT OF INDIA

Sf. Oil - A/1-002056
Pulses - A/1-001944






THE RIGHT CHOICE

- அக்மார்க் தரம்
- சரியான அளவு
- சுத்தமான தயாரிப்பு & 100 % தரக் கட்டுப்பாடு
- ஏற்றுமதித் தரம் கொண்டது

**Alagendran Export Limited - Consumer Product Division.**

Chennai : 18/3, Marshalls Road, Egmore. Tel : 855 5480, 859 3356, 852 7316.
Coimbatore : 514-A, Sathy Road, Ganapathy. Mobile : 98422-55480.
Trichy : 23, E.V.R.Periyar Road, Aishwarya Nagar, K.K.Nagar. Mobile : 98423-56666.
Madurai : Plot No.15, Fathima Nagar, By-Pass Road. Mobile : 98423-04444.

Hi-Calibre Communications